தமிழ்ப் பொழில்

Vol ௬௨ ௨ ௰௪

நவ. டிச. 1988

J1.
31m211, N277r
N88.62.
127045

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

26 ... 1988

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் : 8

127045

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு— 2019

துணர்: 62 விபவ — கார்த்திகை மலர்: 6

நவம்பர் — டிசம்பர் — 1988

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

உள்ளுறை பக்கம்

1. கோவியின் சிறுகதைகளில் பாத்திரப் படைப்பு ... 338
முனைவர் இரா. சண்முகவேலன்

2. எழுந்த களிறா? எழு களிறுகளா? ... 357
பொ. தங்கவேலு

3. பாரதிதாசன் கண்ட பெண்மை 360
மா. மீனாட்சிசுந்தரம்

4 கண்ணகியும் மெங்சியாங் நூவும் 365
பேராசிரியர் கோ. வேங்கடாசலம்

5. தாய் நாற்பது ... 378
இராமசாமி கோனார்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்.
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச் டி.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித்துறை, சென்னை.

,, முனைவர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர். மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ. முத்துப்பிள்ளை, B.A.,
சென்னை.

,, முனைவர். ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர், செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம்.ஏ., ஏ.எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர், த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

*கோவியின் சிறுகதைகளில் பாத்திரப் படைப்பு

— முனைவர் இரா. சண்முகவேலன்
எம். ஏ., எம். பில்., பி. டி., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
அ. வீ. வா. திரு புட்பம் கல்லூரி, பூண்டி.

ஆய்வுப் பொருள் :

தமிழ்க் கதையாசிரியருள் வரலாறு, சமுதாயம் ஆகிய இரு துறைகளிலும் மிகுதியான சிறுகதைகளை எழுதியவர் கோவி. மணிசேகரன். இதுவரை இருபத்தைந்திற்கு மேற்பட்ட சிறு கதைத்தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. இன்னும் நூல்வடிவம் பெறாதவை பல உள்ளன. அவை அனைத்தையும் கொண்டு அவருடைய பாத்திரப் படைப்பாற்றலைக் காண்பதே சிறந்ததாகும். 'காலங் கருதி இடத்தாற் செயற்படும்'பொழுது எல்லை இன்றியமையாதது. ஆகவே, கோவியின் சமுதாயச் சிறுகதைகளே இவ் ஆய்விற்கு உரியன. அவற்றுள்ளும் உயிரும் ஒளியும் (1962), மஞ்சள் குங்குமம் (1965), வெறும் வயிறு (1967), சிறு கதைச் செல்வம் (1969), கோவியின் சிறு கதைகள் (1973), மொட்டு (1977) ரிக்ஷா (1978) ஆகிய ஏழு சிறுகதைத் தொகுப்புகளிலும் அடங்கியுள்ள 100 கதைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் வீரப் பதக்கம், 'மித்திர பிலேச்சன்' ஆகிய இரண்டும் வரலாற்றுக் கதைகள் ஆகும். இவை நீங்கலாக எஞ்சியுள்ள 98 கதைகளே ஆய்விற்கு அடிப்படையாகின்றன.

பாத்திரப்படைப்பின் இன்றியமையாமை

கதை இலக்கியங்களில் பாத்திரப் படைப்பு இன்றியமையாத ஓர் இடத்தைப் பெறுகின்றது. இலக்கியப் படைப்பாளியைப் படிப்பவர் மறந்தாலும், உலகம் மறந்தாலும் அவன் படைத்தளித்த கதைமாந்தரை எவரும் மறந்திலர். மார்க் ட்வைன் (Mark Twain) எழுதிய அட்வன்சர்ஸ் ஆப் ஹக்கிள் பெர்ரியின் (Adventures of Huckle berry Fiun) என்னும் நாவலில் இடம்

* 13—10—87 அன்று நடைபெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆய்வுக்க கட்டுரை.

பெற்றுள்ள இரு கதை மாந்தர்களுக்கு ஹன்னிபால் நகரத்து மக்கள் அந்நகரின் சிறந்த வீதி ஒன்றில் சிலைகள் நிறுவியுள்ளனர். உலகப் புகழ் பெற்ற உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்ட்(Sigmund Freud) தமது ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புக்களுக்கு 'ஓடிபஸ் காம்ளக்ஸ்' (Oedipus Complex) என்றும் 'எலக்ட்ரா காம்ளக்ஸ் (Electra Complex) என்றும் கதை இலக்கியங்களில் உலவிய கதைமாந்தர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளார். கா. சீ. வேங்கடரமணியின் ஜடாதரன் நாவலில் வரும் ஜடாதரன் படைப்பில் தமது மனத்தைப் பறிகொடுத்த தமிழ்க் கதையாசிரியர் என். பாலசுப்பிரமணியன் அப்பெயரையே தம்முடைய புனைபெயராகக் கொண்டார். குஸ்தாவ் பிளாபர்ட்டின் (Gustave Flaubert) மேடம் பவாரி (Madame Bovary) யின் பாத்திரப் படைப்பினால் 'பவாரிசம்' (Bovarism) என்கிற சொல்லை உளவியலாளர் படைத்தனர். இவ்வாறு, கதைமாந்தரின் படைப்பு சிறந்து விளங்குதலினால் கதையாசிரியர்களே கூடத் தம்முடைய கதைமாந்தர்களைக் காணவும்[1] நேசிக்கவும்[2] விழைகின்றனர்.

சிறுகதையில் பாத்திரப் படைப்பு

மனிதன் மட்டுமன்றி விலங்கு,பறவை போன்ற உயிரினங்கள், குளிர்,காற்றுபோன்ற இயற்கைச் சக்திகள்,கடவுள்,ஆவிபோன்ற இயற்கை இகந்த கூறுகள், இயங்கும் பொருள்கள், இயங்காப் பொருள்கள் முதலானவையும் சிறுகதைகளில் கதைமாந்தர்களாகப் படைக்கப்படுகின்றன. ஓரிருவர் அல்லது குறைந்த எண்ணிக்கையினர் இடம் பெறுவர். முதன்மை, துணை என இருவகையில் அவர்களை வகைப்படுத்தலாம். கதையில் இடம் பெற்ற எல்லாக் கதைமாந்தாகளும் தொடக்கம் முதல் இறுதி வரையில் இயங்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. இத்தகைய கருத்துக்களும் இன்னபிற மதிப்பீடுகளும் சிறுகதைப் பாத்திரப் படைப்பைக் குறித்த முடிவான வரைவிலக்கணங்கள் ஆகா. எனினும், சிறுகதை இலக்கியத்தில் பாத்திரப் படைப்பினை ஆராய்தற்கு இவை படிக்கற்களாகும். ஆங்கிலத் திறனாய்வாளர் சம்மர்ஸ் (Summers) சிறுகதைப் பாத்திரப் படைப்பைக் குறித்து எட்டுக்கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்.[3] அவை பின்வருமாறு :

1. தோற்றவருணனை (Physical description)
2. சிந்தனை அல்லது நனவோட்டம்(Portrayal of thought or Stream af Conscious thought)

3. நிகழ்விற்குப் பாத்திரத்தின் நடப்பு (Reactions of events)
4. ஆசிரியரின் நேரடி மதிப்பீடு (Direct author analysis)
5. சூழ்நிலை பற்றிய கருத்துரைகள் (Discussion of environment such as a room or a desk where character works)
6. கதைமாந்தர் பேச்சு (Character's type of conversation)
7. மற்றவர் நடப்பு (Reaction of others to conversation)
8. கதைமாந்தர் குறித்து மற்றவர் மதிப்பீடு Conversation of others about character)

இவற்றின் அடிப்படையினாலும் வேறு சிந்தனைகளினாலும் ஒரு சிறுகதையாசிரியரின் பாத்திரப் படைப்புத்திறனை ஆராய்ந்து வெளிப்படுத்தலாம்.

கோவியின் கதைமாந்தர்

கடவுள், மனிதன் விலங்கு, பறவை எனும் நான்கு வகையினரே கோவியின் கதைமாந்தர்கள் ஆவர். கடவுளரைக் கதைமாந்தர்களாக் கொண்ட ஒரே கதை 'பழியும் பாவமும்' ஆகும். மனிதர்களைக் கதைமாந்தர்களாகக் கொண்ட கதைகள் 92 ஆகும். மாணவர், காதலர், கலைஞர், நண்பர், மருத்துவர், பேராசிரியர், பிச்சைக்காரர், செல்வந்தர், தொழிலாளர், நோயாளிகள், போன்றோரும் தாய், தந்தை, கணவன், மனைவி, மாமன், மாமி, அக்காள், தங்கை, அண்ணன், தம்பி எனும் உறவுடையோரும் இவர்களில் அடங்குவர். இவர்கள் எத்தன்மையினராயினும் ஓரிருவர் தவிர ஏனையோர் அனைவரும் பட்டணவாசிகளே. இவர்களுள்ளும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விழுக்காடுடையோர் இந்துக்களே. கிறித்துவரும், முகமதியரும் 'கை நிறையுப்', 'குரங்காட்டி' ஆகிய இரு கதைகளில் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். 'ஷா' இனத்தவர் காணப்படும் ஒரே கதை 'பழையது பண்டிகை' ஆகும். ஐயர், முதலியார், செட்டியார், ஆசாரி, பிள்ளைமார், ஆதி திராவிடர் ஆகிய பிரிவினரே இந்துக்களில் வெளிப்படையாகத் தெரியுமாறு குறிப்பிடப்பட்டுள்ளனர். பெண்களைக் காட்டிலும் ஆண்களே மிகுதி.[4] விலங்குகளைப் பாத்திரங்களாகக் கொண்ட கதைகள் நான்காகும். அவை, பசு - காளை ('பெருமான் மாடு'), பசு ('செவலைப்பசு'), நாய் ('நன்றிக்கு

ஒரு நாய்'), குரங்கு ('குரங்குகாட்டி') என்பன' குருவி வரும் ஒரே கதை 'சாக்குருவி' ஆகும்.

சிறுகதையில் முதன்மைக் கதைமாந்தரென்றோ, துணைக் கதை மாந்தரென்றோ பாகுபாடு இல்லை என்றும் கதையில் வருபவர்கள் அனைவருமே இன்றியமையாதவர்கள் என்றும் கூறுவாரின்[5] கூற்றுச்சரி அன்று. எந்தவொரு கதைமாந்தர்க்கும் முதன்மை கொடுக்காமல் சிறுகதை எழுதப்படவில்லை. அவரின் இயக்கத்திற்கு எத்தனையோ பேர் உதவுவார். உதவியவர்கள் அத்தனைபேரும் கதைமாந்தர்களாவார்களே ஒழிய கதைகளில் முதன்மை நிலையைப் பெற்றவர் ஆகார். ஆகவே, கதையின் இயக்கத்திற்கு முதலாய்—மூலமாய் இருப்பவரை முதன்மைக் கதைமாந்தர் என்றும் துணை நிற்பவரைத் துணைக்கதை மாந்தர் என்றும் கருதுவதில் தவறில்லை.

ஆய்விற்கெடுத்துக் கொண்டுள்ள 98 கதைகளிலும் 98 முதன்மைக்கதைமாந்தர்கள் உள்ளனர். இவர்களைப் பண்பு, தொழில், உடற்குறை, உறவு முறை, இனம் எனுமாறு பகுத்துக் கணக்கிடலாம். ஆதிவாசி ('போகிமேளம்'), குரங்காட்டி ('குரங்காட்டி'), அறிவியல் அறிஞர் ('தெய்வமென்பதில்லை'), குருடர் ('ரோஜாவின் ராஜா', தொழுநோயாளி ('சித்திரவதை') பாம்புப்பிடாரன் ('நாளைமுதல் நல்ல மனிதன்') முதலியோரும் நாயும் ஒவ்வொரு கதையில் முதன்மைக் கதைமாந்தர்களாகின்றனர். பேராசிரியர்கள் இரண்டு கதைகளிலும்,[6] திருடர்கள் மூன்று கதைகளிலும்,[7] காதலர்கள் நான்கு கதைகளிலும், மாணவர்கள் ஐந்து கதைகளிலும்,[9] சூதாட்டக்காரர்கள் ஆறு கதைகளிலும்[10] என இப்படி வரிசைப்படுத்துகையில் தொழிலாளர்களை முதன்மைக் கதைமாந்தர்களாகக் கொண்ட கதைகளே முதலிடம் பெறுகின்றன. 14 கதைகள்[11] அவர்களுடையனவாகும். எட்டுக்கதைகளில்[12] இடம் பெற்ற அலுவலக ஊழியர்கள் இரண்டாம் நிலையில் உள்ளனர்.

இக்கதைமாந்தர்களை இயக்கும்பொழுது, கோவி. இரண்டு முறைகளைக் கையாள்கின்றார். ஒன்று, தொடக்கம் முதல் இறுதி வரையில் அவர்களுக்கு இடமளிப்பது இரண்டு, வேண்டிய வரையில் அவர்களைப் பயன்படுத்துவது. இவ்விரண்டினுள் முதல் முறையிலேயே பெரும்பாலான கதைகள் அமைந்துள்ளன. 'உயிரும் ஒளியும்', 'செவலைப்பசு' 'மஞ்சள் குங்குமம்' ஆகிய மூன்று கதைகளிலும் இரண்டாவது முறையே காணப்படுகிறது.

துணைக்கதைமாந்தர்கள் தாய், தந்தை, கணவன், மனைவி, நண்பர், அக்கம் பக்கத்தார், முதலாளி, தொழிலாளி, அதிகாரி போன்றவர்களாகவும், பசு, குரங்கு, குருவி போன்ற உயிரினங்களாகவும் அமைந்துள்ளனர். இவர்கள் முதன்மைக் கதை மாந்தரின் இயக்கத்திற்கோ, மனமாற்றத்திற்கோ காரணமாகின்றனர். 'மழைக்கு ஒதுங்கிய இடத்தில்' யசோதா மழையின் பொருட்டுத் தன் வீட்டில் ஒதுங்கிய கதைத் தலைவியாகிய புவனாவிடம் தன்னுடைய அனுபவத்தைச் சொல்கிறாள். அதைக் கேட்ட புவனா, பெற்றோர் அறியாமல் செய்துகொள்ளும் திருமணத்தை வெறுத்து மனத்தைத் திருத்திக் கொள்கிறாள். 'மக்களுக்கு உணர்ச்சி தேவை', 'அசடு' போன்ற கதைகள் குறிப்பிடத்தகுந்தன. சுருங்கச் சொன்னால், இவர்கள் தலைகாட்டுபவர்களாகவும், 'தலைகாட்டிப் பேசுபவர்களாகவும், கதையுடன் தொடர்பவர்களாகவும் உள்ளனர்.

கதைமாந்தர் எண்ணிக்கை :

கதை வளர்ச்சிக்கும், கதை மாந்தரின் பண்பு துலக்கத்திற்கும் கோவி, துணைக் கதைமாந்தர்களுக்கு மிகுதியும் வாய்ப்பளிப்பதால் ஒவ்வொரு கதையிலும் குறைந்த எண்ணிக்கையிலான கதைமாந்தர்களைக் காண்பது அரிதாகின்றது. இது ஒரு வகையில் குறையாகவும் இன்னொரு வகையில் நிறையாகவும் கூடத் தோன்றுகிறது. எனினும், சிலகதைகளைக் குறிப்பிடலாம். 'சொர்க்கத்தில் இடமுண்டு'வில் இருவரும், 'கைவரிசை', 'குந்தவை' ஆகியவற்றில் மூவரும், 'கருப்பை', 'குழந்தையின் கணவன்', 'மழைக்கு ஒதுங்கிய இடத்தில்' 'பிள்ளையார் சுழி' ஆகியவற்றில், நால்வரும், 'பாலமுதத்தில் ஐவரும் கதைமாந்தர்கள் ஆவர்.

பெயர் சூட்டல் :

உலகியலில் காணக் கூடிய அருணாசலம், இருசப்பன், சதாசிவம், தண்டபாணி, வடிவேலு, ராகவன், காவேரி, சரோஜா, பிரேமா, மீனா, வேதவல்லி, ரேவதி போன்ற பெயர்களையே கதை மாந்தர்கள் பெற்றிருக்கின்றனர். ஆயினும், பெயர் சூட்டலில் கோவியின் கலைத்திறன்கள் சில புலப்படுகின்றன. பண்பு அடிப்படையில் பெயர் பொருந்தியும் பொருந்தாமலும் வரக் கூடிய நிலையில் சிலருக்குப் பெயர் சூட்டியிருக்கிறார். சாந்தி ('சாந்தி'), தன் கணவனுக்கு மனச் சாந்தியினைத் தந்தாள். பசுபதி ('குறைவும் நிறைவும்') பசுவினும்

மேலான அடக்கமானவன். சாவித்திரி ('குழந்தைப் பாசம்') காவிய சாவித்திரிபோல் கணவனைப் பெரிதென்று போற்றினாள். சீதா ('கூறாமல் சந்நியாசம் கொள்') கணவனை அடக்கி ஆண்டவள். கருணாமூர்த்தி ('கல்லுளி மங்கன்') கருணை என்பது என்னவென்று அறியாதவர். நல்லசாமி ('நாய்வால்') நல்ல தன்மைகள் இல்லாதவர்.

கோவி தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபட்டவர். அதனால், அங்கயற்கண்ணி, அம்பலவாணன், அன்னம், கலைவண்ணன், தமிழ்ச்செல்வி, மணி அழகன், வாணி, வெற்றிவேலன், அமுதன், அறவாழி, திருச்சேரன் போன்ற தமிழ்ப்பெயர்களைக் கதைமாந்தர்களுக்கு இட்டுள்ளார். இராமசாமி ('சாக்குருவி') இராமானுசம் ('சிலை'), சிவநேயர் ('சாந்தி') போன்ற வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். வரலாற்றுக் கதையாசிரியர் ஆகையால் வரலாற்றுக் கதைமாந்தர்களினதும், பழங்காவியப் பாத்திரங்களினதும் ஆகிய பெயர்களைச் சமுதாயக் கதைமாந்தர்களுக்குச் சூட்டியிருப்பதில் வியப்பில்லை அன்றோ? அசோகன் ('மலரஞ்சலி'), ஜயச்சந்திரன் ('தந்தி'), சகுந்தலை (மைத்துனி). அம்பிகாபதி (சாந்தி) சாரதி ('கருப்பை') போன்ற பெயர்கள் குறிப்பிடத் தக்கனவாகும். நம் காலத்து வரலாற்றுத் தலைவரின் பெயரையும், நவீனப்பெயர்களையுங் கூடச் சில கதைமாந்தர்கள் பெற்றிருக்கின்றனர். கஸ்தூரி (ரோஜாவின் ராஜா), புவனா (மழைக்கு ஒதுங்கிய இடத்தில்)', கங்கா (சினத்தராய் விடுவாரோ!'), இந்து ('கொடிவணக்கம்'), ஜெயரேகா ('குழந்தை') போன்றவை சான்றுகளாகும். மங்காத்தா, மஞ்சுளா, அஞ்சலை, ராஜம், சீதாமணி, மாணிக்கம், கமலம் போன்ற சில பெயர்கள் மறுமுறையும் ஆளப்பெற்றுள்ளன: துரைசாமி, ரங்கசாமி, சின்னசாமி, முத்துசாமி, வேல்சாமி, குமாரசாமி, கோபால்சாமி, பெரியசாமி, நாராயணசாமி, நல்லசாமி, பக்கிரிசாமி, ஆகிய பெயர்களைக் கதைமாந்தர்களுக்குச் சூட்டிய கோவி, கோவிந்தசாமி என்கிற பெயரை மட்டும் ஆளவே இல்லை. தந்தையாரின் பெயர் என்கிற உட்கிடை போலும்!

கதைகளில் ஓரிடத்தில் தலைகாட்டுபவர்களுக்குக் கூடச் சில வேளைகளில் பெயர்களைக் குறிப்பிடுகின்றவர், பல இடங்களில் சிறப்பாகப் பங்கு பெறுகின்றவர்களுக்குப் பெயர்களைச் சூட்டினார் அல்லர்.

'கால்வழி'யின் கடைசிக் கட்டத்தில் கலைவண்ணனிடம் அவனுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஒரு செய்தியைச்சொன்னார்.

அப்பெரியவரின் பெயர் தேவை இல்லை என்றாலும், ‘பக்கத்து வீட்டுப் பெரியவர் பரமசிவம் சொன்னார்’ என்று குறிப்பிடுகிறார். ‘நிறை குடத்தின்’ எழுத்தாளர் ஒரு துணைக் கதைமாந்தரேயாயினும் இன்றியமையாதவர் ஆவார். அவருடைய பெயரைக் கூறாமல் பொதுநிலையில் எழுத்தாளர் என்றே எழுதுகிறார். கதைமாந்தர்களின் பெயர்களையே ‘மங்காத்தா’, ‘குந்தவை’, ‘சாந்தி’, ‘மாரி’ ஆகிய கதைகளுக்குப் பெயரிட்டுள்ளார்.

கதைமாந்தர் அறிமுகம்

கோவி தமது கதைமாந்தர்களைப் படர்க்கைக் கூற்று (External Point of View) தற்கூற்று (Internal Point of View) ஆகிய இருகூற்று நிலைகளினாலும் அறிமுகப்படுத்தியுள்ளார். ‘சாந்தி’யில் கதைமாந்தர் தம்மைத்தாமே அறிமுகப்படுத்திக் கொள்கிறார். ஏனெனில், இக்கதை தற்கூற்றில் எழுதப்பெற்றதாகும்.

கதைகளின் தொடக்கங்களிலேயே அந்தந்தக் கதைகளுக்குரிய முதன்மைக் கதைமாந்தரையோ துணைக்கதைமாந்தரையோ அறிமுகப்படுத்திவிடுகிறார், அங்ஙனம் அறிமுகப்படுத்துகையில் பின்னணி, பின்னணி இன்மை, உலகியல் நியதி அல்லது தத்துவம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றுடன் கதைமாந்தர்களின் மனநிலையினையோ செயற்பாட்டினையோ காட்டுகிறார். காட்டாக,

காலத்தின் மெல்லிய யாத்திரை இராப் போதாய் மலர்ந்து, நடுநிசியைத் தாண்டிக் கொண்டிருந்தது.

> நிமிடத்துக்கு ஒருமுறை தன்னுடைய அருமை மனையாளை நோக்கி இரத்தத்தைக் கண்ணீராகச் சிந்திக் கொண்டிருந்தான் கந்தப்பன். ஏழையின் கண்ணீர் இரத்தத்துக்கு ஒப்பானதாம்! துடைப்பதற்கு ஒரு கந்தல் துணி இருக்க வேண்டுமே! (—‘கள்ளச்சிந்தை’)

இங்குக் கதைமாந்தர் காலப் பின்னணியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்.

கதைமாந்தரின் அறிமுகத்தில் காணப்படுகிற ஒரு குறை கதைமாந்தரின் அறிமுகத்தின் போது, கோவி தம்முடைய மதிப்பீட்டினையும், உணர்வினையும் வெளிப்படுத்திக் கொள்

கிறார் என்பதாகும். இக்குறைபாடு இருப்பினும், நறுக்குத் தெறித்தாற் போன்று அமைகின்ற அறிமுகப் பகுதிகளும் சில உள்ளன. ஓர் எடுத்துக்காட்டு :-

> அந்தக் குரங்குதான் அவனுடைய வாழ்வின் ஜீவநாடி. அத்துடன் அந்தச் சிறுமி! மகளாகப் பிறந்து மண்ணாங்கட்டியாய் வளர்ந்து வரும் பேடி! அதுதான் அந்தப் பெண்ணின் பெயர் அந்தப் பெயரே ரங்கசாமியின் இதயத் துடிப்பு! (– ‘குரங்காட்டி’)

கதைமாந்தர் பேச்சு

கதைமாந்தர்கள் தத்தமது இயல்பிற்கேற்றவாறு பேசுகின்றனர். எனினும், பெரும்பான்மையோர் இலக்கியத் தமிழில் உரையாடுபவர்களாகவே காணப்படுகின்றனர். நன்கு கற்றவர்கள் கூட ஆங்கிலத்திலோ, பிறமொழிகளிலோ பேசுவதில்லை. அப்படிப் பேசினாலும் தமிழ்ப்படுத்திக் கூறிவிட்டு இன்ன மொழியில் பேசினார் என்று கூறிவிடுகிறார். அத்தி பூத்தாற்போல் ஓரிரு இடங்களில் பிறமொழிப் பேச்சு இடம் பெற்றுள்ளது.

பலகதைகளில் நிகழ்ச்சிகளுக்கும் கதைமாந்தரின் செயல்களுக்கும் முதலிடம் தரப்படுவதால் அவர்களின் உரையாடல்களுக்கு அவ்வளவு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. ‘சைத்தானின் வேதம்’, ‘பாலமுதம்’, ‘தாய்’, ‘தோடு’, ‘அறவாழி அந்தணன்’, ‘கதை வசனம்’, ‘பேராசிரியர்’, ‘வாத்தியாரம்மா’, ‘கூறாமல் சந்நியாசம் கொள்’ போன்றவற்றில் உரையாடல் சிறப்பிடம் பெறுகின்றது.

‘வாத்தியாரம்மாவில் நன்றாகப் படிக்கும் சிறுமிதிலகவதி. அவளிடம் கல்வி அதிகாரி இராமனின் மனைவி பெயர் என்னவென்று கேட்டார். அவள் பதில் சொல்லாமல் விழித்தாள். அதிகாரி சென்றதும் வகுப்பாசிரியை அவளை நன்கு அடித்தாள். அதன் பின்னர் அவள் ஒருவாரமாய்ப் பள்ளிக் கூடம் வரவில்லை. காரணம் புரியாமல் ஆசிரியை அவள் வீட்டிற்குச் சென்றாள். அவளுக்குக் காய்ச்சல்என்பதை அறிந்ததும், அனுதாபத்துடன் அணுகி, கல்வி அதிகாரியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருந்தது பற்றி வினவினாள். அப்போது,

“மறக்கலை டீச்சர். தெரியும். அது உங்க பெயராச்சே ... டீச்சர்! நான் எப்படிச் சொல்றது? வந்தவங்க என்னை மரியாதை கெட்ட பொண்ணுன்னு நெனச்சிக்க மாட்டாங்களா, டீச்சர்?”

“திலகா...?”

'ஏன் டீச்சர் அழறீங்க...? எம்மலே தப்பா டீச்சர்? எங்கம்மாதான் பெரியவங்க பேரை வாய் கூசாமல் சொல்லக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க...''

என்றாள். ஆசிரியை கண்கலங்கினாள். அதுவரையில் ஆசிரியைக்கும் படிப்பவர்க்கும் புரியாமல் மறைபொருளாய் இருந்த அச்சிறுமியின் செய்கை அவளது பேச்சினால் வெளிப்படுத்தப்படுகின்றது. கதைமாந்தரின் பேச்சை இடந்தேர்ந்து கையாண்டு வலிவும் உயிரும் கொடுத்துள்ள கோவியின் ஆளுமைத் திறனுக்கொரு சான்று இது.

கதை நிகழ்ச்சிகளையும் கதைமாந்தரின் செயல்களையும் விவரித்து வருகின்ற பொழுது, ஏற்ற இடங்களில் கதைமாந்தர் களை நேருக்கு நேராகச் சந்திக்கவைத்து ஓரங்க உரையாடல் நாடகங்களைப் படைத்துக் காட்டுகின்ற கோவியின் திறன் பாராட்டுதற்குரியது. 'வேரில் பழுத்த பலா'வின் கதை நடுவே தாயும் மகளும் பேசிக் கொள்வதும், 'மனைவியின் மகனில்' கணவனும் மனைவியும் உரையாடுவதும், 'அன்னை இட்ட தீ'யில் தாயும் மகனும் விவாதிப்பதும், 'கூறாமல் சந்நியாசம் 'கொள்'ளுவில் சீதாவும் மாணிக்கமும் வாயாடுவதும் குறிப்பிடத் தக்கன.

கதைமாந்தர்கள் உலகியலுக்கேற்றபடி அளவுடன் உரையாடு கின்றனர். இவருடைய பேச்சுக்கள் ஒரு பக்கமோ, ஒரு பக்கத்திற்கு மேலாகவோ செல்வதில்லை. ஓரிரு சொற்களும், ஒரு சில சொற்றொடர்களும் உடையனவாய் ஒளிர்கின்றன. அவர்கள் பேசும்போது ஏற்படும் மன உணர்வுகளைக் கதை யாசிரியர்கள் நிறுத்தற் குறிகளின் (Marks of Punctuation) வாயிலாகக் காட்டுவர். கோவி கேள்விக்குறி, காற்புள்ளி, அரைப்புள்ளி, மூன்றுபுள்ளிகள், அடுக்குப்புள்ளிகள் முதலான வற்றைப் பயன்படுத்தி இருப்பினும் வியப்புக் குறியைச் (Mark of Exclamation) சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

'பொன் செய்யும் மருந்து', 'துணி வெளுக்க மண் உண்டு', 'அடக்கம் ஆயிரம் பொன்', 'தந்தி', 'பிள்ளையார்சுழி', 'பேராசிரியர்', ஆகிய ஆறு கதைகளே கதைமாந்தரின் பேச்சுடன் தொடங்குகின்றன. 'வேரில் பழுத்த பலா', 'பிள்ளை விளையாட்டு', 'சீதைத்தராய் விடுவாரோ?', 'பெற்றுவிட்டால் போதுமா?', 'குழந்தைப் பாசம்', 'பேராசிரியர்', 'அன்னையின் குரல்' ஆகிய ஏழு கதைகள் கதைமாந்தர்களின் கூற்றுடன் முடிகின்றன. 'தெய்வ மென்பதில்லை', 'நிறைகுடம்' ஆகிய இரண்டும் கதைமாந்தரின் கூற்றினைத் தலைப்பாகக் கொண்

டுள்ளன. எனவே கோவியின் கதைமாந்தர்களுடைய உரை யாடலுக்குக் கதைகளின் அகத்தும் புறத்தும் உள்ள அனைத்து நிலைகளிலும் ஓரளவு செல்வாக்கே உள்ளது என்பது தெளிவு.

யதார்த்தச் சித்திரிப்பு (Reality)

ஒரு கதையைப் படிக்கையில் அதில் வருகின்ற கதை மாந்தர்கள் நம்முடைய அனுபவத்தில் கண்டவர்கள் போன்று ஓர் உணர்வினை நம்மிடம் தோற்றுவிக்க வேண்டும் அப்படிப் பட்ட கதைமாந்தர்களே யதார்த்தமானவர்கள் ஆவர் கோவியின் கதைமாந்தர்களில் பலர் இத்தகைய உணர்வினை நம்மிடம் ஏற்படுத்துபவர்களாகவே உள்ளனர். 'காணிக்கை'யின் அம்மணிப் பாட்டி, 'காவலின் ராமசுப்பு,' அவன் ஒரு தேவதை யின் டாக்டர் மாதவன், 'இதயம்' இருப்பது ஏனின் கோபாலன், 'பழையது பண்டிகை'யின் லலிதாபாயம்மாள், 'நிழலின் கண்ணன், 'நாய்வாலின் நல்லசாமி, கல்லுளி மங்கனின் கருணாமூர்த்தி, 'மாரி'யின் அஞ்சலை, 'குரங்காட்டி'யின் குரங்கு' போன்றவர்கள் இத்தகையோரே ஆவர்.

'நெருப்பு'வின் தணிகாசலம் கோபக்காரன்; அலுவலகத்தில் வேலை பார்ப்பவன் ; அதிகாரியுடன்ஏற்பட்ட தகராறில் மூன்று நாட்களுக்கு வேலை நீக்கம் செய்யப்பட்டான். வீட்டில் இருந்தபொழுது மாமியார் இறந்த செய்தி வந்தது. இரண்டாண்டு களாய்த் தனக்கும் மைத்துனருக்கும் ஏற்பட்ட பிணக்கினால் அங்குப் போகாமல் இருந்தான். மனைவிக்காகப் பகைமையைப் பொருட்படுத்தாமல் மனைவியுடன் சென்றான். அவனைப் பெரிய மைத்துனர், 'இவன் எதற்கு இங்கு வரவேண்டும்?' என்று கேட்க, கோபத்தை அடக்கி வீடு திரும்பினான். மனைவிக்கு இது தெரிந்திருந்தாலும் துக்கத்தில் துவண்டு விட்டாள். பிறகு அண்ணனிடம் வாதாடினாள் ; பால் தெளியல் முடிந்து வீடு திரும்பினாள். அவள் வருவதற்கு முன்னர் அவனுக்கு அவள் வரவில்லையே என்ற கோபம். அவள் வந்ததும் அவனுக்குக் கோபம் இல்லை அவளுடன் அன்பாய்ப் பேசி யோகியைப் போலச் சிரித்தான். அவனின் இந்தக் கதையைச் சித்திரிக்கின்ற ஆசிரியர் ஓரிடத்தில் பின் காணுமாறு எழுதுகிறார்.

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு ஓய்ந்தது வானொலிப் பெட்டியை மூடி விட்டுச் சாய்வு நாற்காலியில் அமர்ந்தான் தணிகாசலம். இன்னும் தேவகியைக் காணவில்லை. அவளுக்கென்ன? ஒரு வேளை நாளைக்கு நடக்க இருக்கும் பாலையும்

பார்த்து விட்டுத் திரும்ப இருக்கிறாளோ? அப்புறம் என்ன? ஏழாம் துக்கம், நடப்பு, காரியம் இவற்றையும் கண்டுவிட்டுத் திரும்பலாமே!

கோபம் மெல்ல எழுந்து அது அடங்கவும் அடங்கியது.
வாசற்படியில் காலடி ஓசை.

தேவகி தான் வந்து பதுமைபோல் நின்றாள்.

ஏன் அவள் அப்படி நிற்க வேண்டும்!

"தேவகி, இப்படி நிற்பதுதான் குற்றம். நேரே வந்துவிட வேண்டியது தானே?"

அமைதியாக, கோபத்தை மறந்த குன்றாக அழைப்புக் குரல் விடுத்த கணவருடைய பொறுமையை அவளால் நம்பவே முடியவில்லை. நேரே ஓடோடிச் சென்று காலில் விழுந்தாள். "என்னை மன்னித்து விடுவீர்களா?". மெதுவாகச் சிரித்தான் தணிகாசலம் ...

இப்பகுதியில் தணிகாசலத்தின் இருவேறுபட்ட நிலையை-கோபத்தையும் மகிழ்ச்சியையும் நுட்பமாகச் சித்திரிப்பதை அறிகிறோம். உளவியலாளர் கோபத்தை எழுச்சி (Drive) என்பர். எழுச்சியின் தன்மை எழுந்தெழுந்து அடங்குவது. தணிகாசலத்தின் படைப்பில் இந்தத் தன்மை வெளிப்படுகிறது. இவ்வாறு, ஒரு கதைமாந்தரை யதார்த்தமாகப் படைத்துக் காட்டும் போது, இயங்கியல் முறையில் ஏற்படும் மாற்றங்களையும் வெளிப்படுத்திக் குறையும் நிறையும் உடைய வாழ்வியல் நியதியைப் பின்பற்றுகிறார் கோவி எனலாம்.

நம்பகத் தன்மை இன்மை (Improbability)

"நடைமுறை வாழ்க்கையை ஆதாரமாக வைத்து எழுதும் கதைகளில் நடக்க முடியாத சம்பவங்களையும் காணமுடியாத பாத்திரங்களையும் கேள்விப்படாத பெயர்களையும் புகுத்தவே கூடாது"[13] என்கிறார் ஒரு கதையாசிரியர். கதைமாந்தரின் படைப்பில் யதார்த்த நெறியைக் கடைபிடித்த கோவியிடம் நம்பகத் தன்மை குறைந்த கதைமாந்தர்களையும் பார்க்க முடிகிறது.

'ரம்மியும் ஜோக்கர்களும்', சூதாட்டக்காரனான ஆத்மராசனின் கதை. அவனுடைய மனைவி அன்றையப் பட்டினியைப் போக்க அவனிடம் ஐந்து ரூபாய் கேட்டாள். கையில் காசு இல்லை. கடன் கேட்ட இடத்தில் பத்து ரூபாய் கிடைத்தது. வீட்டுக்கு வராமல் சூதாட்ட மனைக்குச் சென்று

சூதாடித் தோற்றான். அவனை எதிர்பார்த்த மனைவிக்கு அவன் சூதாடும் செய்தி கிடைத்தது. மனம் வெறுத்து மூட்டைப் பூச்சி மருந்தினைத்தின்று இறந்தாள். வீடு திரும்பியவன் கண்ணீர்விட்டான். மறுநாள் மனைவியின் அடக்கத்திற்குப் பணமில்லாமையால் சூதாட்ட மனைக்குச் சென்று 'பேங்' எடுத்து விளையாடித் தொகை சேர்ந்ததும் வீட்டிற்குத் திரும்பி மனைவியின் அடக்கத்திற்கு ஏற்பாடு செய்தான். இதன் பின்னரும் கதை தொடர்கிறது. சூதாட்ட வெறியை — கொடுமையைச் சித்தரிப்பது கோவியின் நோக்கமாயினும் மிகை யதார்த்தவாத அணுகுமுறையாகக் காணப்படுகிறது. வீட்டில் மனைவியின் பிணம் கிடக்கையில் பணத்திற்காகச் சூதாடப் போவது என்பது எதிர்பாராத நிகழ்வாகக் கூட இருக்கலாமாயினும் படிப்பவர்க்கு அவன் படைப்பு அவ்வளவு நம்பகத் தன்மையைத் தோற்றுவிப்பதாக இல்லை. 'குந்தவை'யில் தாய் சொல்லைத் தட்டாத பிள்ளையாக இருப்பவன் தமிழ் வளர்ச்சிப் பதிப்பகத் தொழிலாளி பரந்தாமன். அவனுக்கு அவன் தாய் பெண் பார்த்திருந்தாள். மறுநாள் திருமணம் முதல் நாள் அந்தப் பெண் அவனுடைய பதிப்பகத்திற்குப் புத்தகம் வேண்டி வந்திருந்தாள். ஏற்கனவே இருவரும் அறியாதவர்கள். ஆகையினால்,

... "உங்கள் பெயரென்ன?" என்றான்.

"குந்தவை"!

"... ......"

தயங்கிய வண்ணம் "உங்கள் பெயரைக் கேட்கிறேன்"

"அதுதான் சொன்னேனே, குந்தவை!"

பக்கத்திலே நோக்கினான், பரந்தாமன் நாற்காலி இருந்தது. இத்தனை நேரம் இந்தப் பெண்ணைக் குந்தாமலிருக்க யார் தடை செய்தார்கள்? அதுவும் தன்னைக் குந்த வைக்கச் சொல்கிறாளே! இது என்ன தர்ம சங்கடமான நிலைமை!

"தயவு செய்து ... உங்கள் பெயர்!"

"நான் சொன்னேன் ... குந்தவை!"

பின்னர்ப் பரந்தாமன் அவள் தோளைப் பற்றி நாற்காலியில் உட்கார வைத்தான். கோபமுற்றவள் அவனுடைய கன்னத்தில் அறைந்துவிட்டுப் போய் விட்டாள். இந்தக் காட்சி வேடிக்கையாகவும் நகைச்சுவையாகவும் இருப்பினும் பதிப்பகத் தொழிலாளியின் அறிவினம் நம்பும்படியாகவா உள்ளது?

சூழல் அல்லது சிக்கல்

கோவியின் கதைமாந்தர் படைப்பில் காணக்கூடிய தனித் தன்மையான முறைகளுள் ஒன்று ஒரு சூழலை (Situation) அல்லது ஒரு சிக்கலை (Problem) உருவாக்கி, அதில் அந்தப் பாத்திரம் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதைக் காட்டுதலாகும். இது ஓர் அறிவியலாளனின் அணுகு முறை என்றாலும் கோவியைப் பொறுத்த மட்டில் திட்டமிட்ட தமது நோக்கத்திற்கு-எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறே அவர்களை இயக்கியுள்ளார். வேறு வகையாகச் சொன்னால், வெளிப் பார்வைக்குத்தான் கதைமாந்தர்கள் வேதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் ; விளைவு கதையாசிரியருடையதாகும். பொதுவாக, மானிடப் பண்புகளை விளக்க இப்படிப் பட்டதோர் உத்தியினைப் பரவலாகவே பயன்படுத்துகிறார்.

'அன்னையின் குரல்' வள்ளியப்பன் இரும்புக் கடையில் பணி புரிபவன் ; அன்னையின் மீது அளவற்ற அன்புடையவன் ; காந்தி, நேரு போன்றோரிடம் பற்றுடையவன் ; எப்பொழுதும் காந்தியின் 'சத்தியசோதனை'யைப் படிப்பவன். தன்னுடைய தாயின் மரணச் செய்தியை அறிந்ததும் கடன் வாங்கிக் கொண்டு கடைசி 'பஸ்ஸைப் பிடிக்க ஓடினான். வழியில் கூட்டம் நடந்து முடிந்ததற்குறியாக நாட்டுப் பாடலை ஒலி பரப்பினர். ஓடியவன் பாடல் முடியும் வரை நின்று பிறகு ஓடினான். அதற்குள் பஸ் போய்விடவே கண்ணீருடன் இருப்பிடம் திரும்பினான். கேட்டவர்களிடம் "பஸ் தவறி விட்டது". என்றான். நாட்டுப் பற்றுடைய அவனின் கொள்கைக்குச் சோதனை வர, அதில் அவன் தேறிவிடுதலையே காட்டுகிறார்.

'போகி மேள'த்தின் பிச்சாண்டி, போகி மேளம் கேட்ட தன்னுடைய மகனுக்குத் தனது பறையை அடகு வைத்து விட்டுப் போகி மேளம் வாங்கி வருகிறான். வழியில் போகி மேளம் கேட்டு அடம் பிடித்த பிள்ளையை ஒருத்தி அடித்துக் கொண்டிருக்கிறாள். கண்டவன் போகி மேளத்தை அந்தப் பிள்ளையிடம் கொடுத்துவிட்டு வீடு திரும்புகிறான். பிச்சாண்டியின் பிள்ளைப் பாசத்திற்கு ஏற்பட்ட சோதனையில் அவன் வெற்றி பெற்று விடுகிறான். 'சேதாரம்' கதை பொன்னாத்தா தன்னுடைய மகளின் திருமணத்திற்கு இரண்டு பவுன் சேர்த்திருந்தாள். நோய்வாய்ப்பட அதனை விற்றுச் செலவு செய்தாள். 'கவரிங்' சங்கிலியைப் போட்டு மகளுடைய திருமணத்தை முடித்தாள். அவள் மீது கண் வைத்திருந்த

பொன்னம்பல ஆசாரி அவளுடைய மகளின் நல்வாழ்விற்காக இரண்டு பவுன் சங்கிலியைத் தருவதாகக் கூறி அவளது உடலை விலை பேசினான். அவளோ அவனை விரட்டியடித்துத் தற்காத்துக் கொண்டாள். மகளின் நன்மையை விட அவளுக்கு மானம் பெரிதாகி விட்டது.

'அவள் ஒரு தேவதை'யின் டாக்டர் மாதவனும் ஒரு சிக்கலுக்கு ஆளாகின்றார். ஒருவன் தன் மனைவிக்கு மார்புவலி என்று கூறித் தன் வீட்டிற்கு அழைத்தான். அனுதாபச் சிந்தையுள்ள டாக்டர் அவனுடன் புறப்படத் தயாரானார். அதற்குள் தொலைபேசியின் வழியாய் அவருடைய மனைவிக்குப் பிரசவ வேதனை என்ற செய்தி கிடைத்தது. டாக்டர் வந்தவனிடம் மருந்து எழுதிக் கொடுத்துவிட்டு மனைவியைப் பார்க்க விரைந்தார். உயர்ந்த பண்புடையவரும் ஒரு சராசரி மனிதரே என்கிற தத்துவ விளக்கத்தைக் காட்ட இந்தச் சூழலை உருவாக்கி இருக்கிறார் கோவி.

முரண்பாடுகள் (Contradictions)

இவரின் கதைமாந்தர் படைப்பில் காணக்கூடிய இன்னொரு சிறப்பான முறை 'முரண்' என்னும் உத்தியைப் பெயர், உறவு, நிகழ்ச்சி, நடப்பு முதலானவற்றில் கையாள்வதாகும். ஈரம், இரக்கம், தியாகம், சத்தியம், அன்பு அறம் முதலிய மேன்மைப் பண்புகளை வலியுறுத்தவும், சூது, களவு, காமம், துரோகம், கோபம், வஞ்சம் போன்ற கீழ்மைக் குணங்களைக் களையவும் குறிக்கோளாகக் கொண்டு கதைகளைப் படைப்பவர் கோவி.சமுதாயச் சீர்திருத்தத்தைக் காட்டிலும் பண்பாட்டுச்சீர்திருத்தமே மேலானது என்கிற கொள்கை உடையவர். அதனால் தான், அவருடைய கதைகள் யாவும் பண்பு விளக்கக் கதைகளாய் விளங்குகின்றன. இத்தன்மைக்கு வலுவூட்டப் பண்பு முரண்பாடுடையவர்களை ஒருங்கிணைத்து இயக்கியல் முறையில் வளர்த்துப் பண்பாளர்களினால் பண்பற்றவர்கள் திருத்தப்படுவதாகவும் மாற்றப்படுவதாகவும் காட்டுகிறார்.

'இதயம் இருப்பது ஏனில் கோபாலன் பிச்சைக்காரிக்கு உதவ மறுக்கிறான் × மனைவி மங்களம் பிச்சைக்காரிக்கு உதவுகிறாள். 'குறைவும் நிறைவும்' கதையில் கணவன் பசுபதி அடக்கமானவன் × மனைவி கோமளம் அடக்குபவள். அழகு எரிந்தது கணேசன் தெய்வ நம்பிக்கை உடையவன் × சிதாமணி தெய்வ நம்பிக்கை இல்லாதவள். 'கொடி வணக்கத்தின் திருச்சோன் கொடி வணக்கத்தை வெறுத்தவன் ×

இந்து கொடி வணக்கத்தைப் போற்றியவள். 'பெற்றுவிட்டால் போதுமா'வின் தமக்கை கமலம் குழந்தைப் பாசம் இல்லாதவள் ; தங்கை மரகதம் குழந்தைப் பாசம் உடையவள். 'தெய்வ மென்பதில்லை'யின் தந்தை ராமநாதன் கடவுளைப் போற்றுபவர் X மகன் உமாசந்திரன் கடவுளை எதிர்ப்பவன். 'பிள்ளையார் சுழியில் ஒரு நண்பர் அதிகாரி X ஒரு நண்பர் கடைநிலை ஊழியர்.

வாழ்வில் ஒத்த பண்புடையார் ஒருங்கிணைந்து இருப்பது போல் சில கதைகளில் முரண்பாடற்றவர்கள் இணைந்துள்ளனர். (parallel characters) ,அறவாழி அந்தணன்', 'தோடு', 'துணி வெளுக்க மண் உண்டு', 'ரிக்ஷா' போன்ற கதைகள் அப்படிப் பட்டவை.

பெரும்பாலும் குடும்ப உறவுகளில் உள்ள முரண்பாடுகளைக் காட்டிய கோவி 'ஆண்கள்' 'இருவர்' 'பெண்கள் மூவர்' ஆகிய இரு கதைகளில் சமுதாய உறவில் ஏற்படக்கூடிய முரண்பாடு களை விளக்கியுள்ளார். 'ஆண்கள் இருவரில்' செந்தில், மஞ்சுளாவை அலுவலகத்தில் வேலை செய்பவன் என்று ஏமாற்றி மணந்து கொண்டான். இரண்டு ஆண் குழந்தை களுக்கும் தந்தையானான். துறைமுகத்தில் வேலை பார்ப்பவ னான ரெங்கசாமி திருமணம் ஆகாதவன். மஞ்சுளாவுடன் தொடர்பு கொண்டான் இதை அறிந்த செந்தில் மனைவியையும் பிள்ளைகளையும் ரங்கசாமியுடன் அனுப்பினான். மஞ்சுளா, தன் குழந்தைகளின் மீது ரங்கசாமி வைத்துள்ள பாசம் நீங்காது இருக்கத் தனக்கு இனிமேல் குழந்தை பிறக்காமல் இருக்கவேண்டுமென்று கடவுளின் படத்தின் முன் வேண்டினாள். இதனை அறிந்த ரங்கசாமி அறுவை சிகிச்சை செய்து கொண்டான். மனைவியையும் குழந்தைகளையும் காப்பாற்றினான். செந்தில் இறந்தான். ரங்கசாமி வாழ்ந்தான். இருவரிடையேயும் முரண்பட்ட தன்மைகள் இருப்பினும் ஒரு பொதுப் பண்பு காணப்படுகிறது. அது தியாகம்.

'பெண்கள் மூவரி'ல் கனகலிங்கம் திருடனானாலும் இதயம் உள்ளவன். ஒரு வீட்டில் திருடப்போய்ப் பிடிபட்டான். அந்த வீட்டுப் பெண்ணை ஒருபோது காப்பாற்றினான். அவளோ நன்றி கொன்றாள். தண்டனை முடிந்ததும் சிறையினின்றும் வெளியேறியவன் அவளைக் கொலை செய்ய மறுபடியும் அந்த வீட்டிற்குள் புகுந்தான். எதிர்பாராமல், அந்த வீட்டில் புதிதாகக் குடிவந்திருந்த பெண்ணின் கணவனைக் கொன்று விட்டான். மீண்டும் சிறை. தூக்குத் தண்டனையை

நிறைவேற்றுவதற்குரிய நாளிற்கு முன்னாள் அவன் அந்த விதவைப் பெண்ணைப் பார்க்க விழைந்தான். மனமிரங்கி வந்தவளின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான். மறுநாள் அவனுடைய மரண தண்டனை நிறைவேற்றப் பட்ட செய்தி செய்தித்தாள்களில் வெளியாயிற்று. மனைவி கதறினாள். விதவை அஞ்சலி செய்தாள். மீனா சனிவிட்டதென்று சந்நியாசி களுக்குச் சோறு போட்டு மகிழ்ந்தாள். "எதிரெதிர் குணநலன் களைப் புகுத்தி இரு பாத்திரங்களைப் படைக்கும் போது, ஒன்று மற்றொன்றின் சிறப்பையோ தாழ்வையோ எடுத்துக் காட்ட உதவியாக இருக்கிறது"[14] என்பாரின் கூற்று நினைத்தற்குரியது.

மனப்போராட்டம்

கதைமாந்தரின் நினைவு,சிந்தனை, மனப்பேச்சு, தனிமொழி ஆகியவை அளவுடன் ஆளப்பெற்றுள்ளன. என்றாலும், மனப் பேராளிகளும் (Patients Hysteria suffering from) மனநோயாளி களும் (Patients Neurosis suffering from) கதைமாந்தர்களா கின்றனர். 'மழைக்கு ஒதுங்கிய இடத்தில்' புவனா காதல் வயப்பட்டு அதைத் தன் தந்தையிடம் சொல்வதற்குப் பயந்து மனப்போராட்டத்திற்கு உட்படுகிறாள். 'மஞ்சு ... ஓ ... மஞ்சு' என்பதில் ஆனந்த் ஒரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ள முடியாமல் வேறொரு பெண்ணை மணந்து வாழ்கின்றானாயினும் காதலியை மறக்கமுடியாமல் குமைகின்றான்; புலம்புகின்றான். அவன் மனம் காதலியின் மரணச் செய்தியைக்கேட்டு 'மஞ்சு... ஓ...மஞ்சு என்று அரற்று கிறது. "சங்கிலி வளையங்களில்' பட்டுவின் மனப்போரா ட்டதையாக விரிகின்றது. அடுத்தவீட்டு இளைஞனைக் காதலித்து இன்னோர் இளைஞனை மணம் புரிந்து கொண்டாள். கணவனுடன் படுத்திருக்கும்போதும் கூட அவள் மனம் காதலனை வட்டமிட்டது. காதலன் கொலையுண்ட செய்தி கிடைத்த பிறகே அவள் அவளுடைய கணவனை மனநிறை வுடன் ஏற்றுக் கொண்டாள். இவர்கள் பாலுணர்சி நோயாளிகள் (Librdo Ratients) ஆவர். 'கால்வழி'யில் பாமா, தன் கணவன் தான் சூதாடி என்று கலங்கினாள். மகனும் சூதாடி என்பதை அறிந்ததும் அவளுக்கு நரம்புத்தளர்ச்சி (Trauma)ஏற்பட்டு மன அதிர்ச்சியினால் ஊமை ஆகிவிட்டாள். 'மணியோசை'யின் சிறுவனான மோகன சுந்தரம் தன்னுடைய மணியடிக்கும் பழக்கத்திற்கு இடையூறு ஏற்பட்டதும் இதே நோயினால் பாதிக்கப்பட்டான். மீண்டும் அவனுக்கு அந்த மணியடிக்கும் வாய்ப்புக் கிட்டியதும் நீங்கிவிட்டது கல்லூரி மங்களின்

கருணாமூர்த்தி மனைவியையும் மகனையும் துன்புறுத்தி மகிழும் ஒரு மனநோயாளி (Sadist). 'வேரில் பழுத்த பலா'வின் சுகந்தி வாழ்க்கையில் நிகழ்ந்த இழப்புக்களினால் வெறுப்புற்று (Frustration) தற்கொலைக்கு முற்பட்டாள். 'திருடாதே'யின் சிறுவன் கள்ளனைக் கண்ட அச்சத்தினால் கனவு கண்டு பிதற்றினான் (Dreams-anxiety). 'மூன்று காசுகளின்' கமலநாதன் மறதி (Amnesia) உடையவன். 'அழகு எரிந்தது'வின் சீதா மணி கண்ணாடியின் முன் நின்று தன்னுடைய அழகைச் சுவைப்பவள் (Narcissim). பொதுவாகக் கோவியின் கதை மாந்தர்கள் உணர்ச்சிவயப்பட்டவர்களே (Emotional types).

முடிவுரை :

இது காறும், 'கோவியின் சிறுகதைகளில் பாத்திரப்படைப்பு' என்னும் பொருளில் இன்றியமையாக் கூறுகள் ஆராயப்பட்டன. ஆசிரியரின் குறை, நிறை, தனித்தன்மை ஆகியன ஆங்காங்குச் சுட்டப்பட்டன. ஆய்வில் விடுபட்டனவும், விளக்கம் பெறாதனவும் பல உள்ளன.

கோவியின் சிறுகதைகள் தனிமனிதப் பண்பாட்டுச் சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டுள்ளமையால் அவற்றில் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு இடமில்லை. தனிமனிதன் திருந்தினால் சமுதாயம் திருந்தும் என்கிற கொள்கை கதைகளில் ஊடும் பாவுமாக இழைகின்றது.

> "தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
> தருமம் மறுபடி வெல்லும்"

என்னும் பாரதியின் வரிகளுக்கு விளக்கமாக விரிவனவே கோவியின் சிறுகதைகள். அந்தத் தருமத்தின் வாழ்விற்குப் பாடுபடத் தம்மைத் தாமே அணியப்படுத்திக் கொள்பவர்களே கதைமாந்தர்கள். அந்தக் கதைமாந்தர்களைப் படைக்கத் தம்மை சத்தியச் சோதனைக்குள் உட்படுத்திக் கொள்பவரே கோவி என்கிற முடிவுக்கு வரலாம்.

குறிப்புகள்

1. அலை ஓசையை நான் எழுதியதாகவே எண்ணக்கூடவில்லை. லலிதாவும், சீதாவும், தாரிணியும், சூரியாவும் சௌந்தரராகவனும், பட்டாபிராமனும் சேர்ந்து பேசிக் கொண்டு அவரவர்களுடைய அந்தரங்க ஆசாபாசங்களையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் வெளியிட்டு "அலை ஓசையை" எழுதியிருக்கிறார்கள் ... ... அவர்களை மறுபடியும் எப்போது எங்கே காணப்போகிறேனோ, தெரியவில்லை

   —கல்கி, 'முன்னுரை', அலை ஓசை, ப. VIII
   வானதி பதிப்பகம்,
   சென்னை, 1978, ஐந்தாம் பதிப்பு.

2. என்கதைத்தலைவர்தலைவியரை அவர்கள்எவ்வளவு குறைபாடு உடையவர்களாக இருந்தாலும் நான் நேசிக்கிறேன். என் இரத்தத்திலிருந்தும், உயிர் மூச்சிலிருந்தும் இதயத் துடிப்பிலிருந்தும் பிறந்தவர்கள் அவர்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் என்னை விட உயர்ந்தவர்கள்.

   — அகிலன், "மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு', இன்றையத் தமிழிலக்கியத்தில் மனிதன், கிறிஸ்துவ இலக்கியச் சங்கம், சென்னை, 1972, முதற் பதிப்பு, ப. 34.

3. *Craft of the Short Story*. Quoted in *hlterary Essays* by B R Mullik, S. Chand & Co. Delhi, 1967, Second Edition, P. 1.

4. 'சொர்க்கத்தில் இடம் உண்டு', 'பிள்ளையார் சுழி' ஆகிய இரண்டிலும் பெண்களே இல்லை.

5. சிறுகதையில் பிரதான பாத்திரங்கள் என்றும் பிரதானமல்லாத பாத்திரங்கள் என்றும் இருவகையாக இருக்காது. எல்லோருமே முக்கியமாக இருக்க வேண்டும். எல்லோருடைய லட்சணங்களும் தூக்கிக்காட்டி நிற்க வேண்டும்.

   – ராஜாஜி, ராஜாஜி கட்டுரைகள், வானதி பதிப்பகம், சென்னை, 1971, ஐந்தாம் பதிப்பு, பக். 200 –'1.

6. 'பேராசிரியர்,' 'கொடி வணக்கம்'.

7. 'சிலை', 'பெண்கள் மூவர்', 'கைவரிசை',

8. 'காதல் வேள்வி', 'வேரில் பழுத்த பலா', 'சங்கிலி வளையங்கள்', 'மஞ்சு ... ஓ ... மஞ்சு'.

9. 'மணியோசை', 'கல்லுளி மங்கன்', 'பொங்கல் மலர்', நாய்கள் ஜாக்கிரதை', 'காற்றாடி'.

10. 'நடைப்பிணம்', 'மங்காத்தா', 'கழுத்தும் கயிறும்', மாமியார் வீடு', 'கால்வழி', 'ரம்மியும் ஜோக்கர்களும்',

11. 'சினத்தராய் விடுவாரோ', 'அன்னையின் குரல்', 'கூலி' 'இதுதான் நீதி', 'துணிவெளுக்க மண் உண்டு', 'சேதாரம்'

'மனைவியின் மகன்', 'செவலைப்பசு', 'கள்ளச்சந்தை', 'போகிற வழியில்', 'குந்தவை', 'வெறும் வயிறு' 'ரிக்ஷா', 'நாளை முதல் நல்ல மனிதன்'.

12. 'அன்னை இட்ட தீ', 'கூறாமல் 'சந்நியாசம் கொள்', 'இதயம் இருப்பது ஏன்?', 'நிறைகுடம்', 'பெரிய மனிதன்', 'அடக்கம் ஆயிரம் பொன்', 'பெற்றுவிட்டால் போதுமா?', 'அழகு எரிந்தது'.

13. கு. அழகிரிசாமி 'சிறுகதை எழுதுவது எப்படி', **எழுதுவது எப்படி?** (தொகுதி 1), பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1969, முதற்பதிப்பு, ப. 110.

14. எஸ். ரங்கநாயகி, 'சிறுகதை எழுதுவது எப்படி?', **எழுதுவது எப்படி?** (தொகுதி 2), பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1979, முதற்பதிப்பு, ப 106.

சிறுகதைத் தொகுப்புகள்

1.	உயிரும் ஒலியும்	15, வள்ளுவர் பண்ணை, சென்னை, 1964.
2.	மஞ்சள் குங்குமம்	9, முருகன் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1965, மு. ப.
3.	வெறும் வயிறு	11, மாருதி பதிப்பகம், சென்னை, 1967.
4.	சிறுகதைச் செல்வம்	12, முத்தையா நிலைய வெளியீடு, சென்னை, 1969, மு. ப.
5.	கோவியின் சிறுகதைகள்	25, வி. மாணிக்கம் கம்பெனி, சென்னை, 1973, . ப.
6.	மொட்டு (11—2)	9, பூரம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1977, புதிய ப.
7.	ரிக்ஷா	17, முத்துப் பதிப்பகம், வளவனூர், 1978, மு. ப.

எழுந்த களிறா? ஏழு களிறுகளா?

பொ. தங்கவேலு,
நூலகர்,
காவேரி நகர்,
குளித்தலை

தமிழ்ப்பொழில் 1988 செப்டம்பர் - அக்டோபர் இதழில் வெளியாகியுள்ள "குறுந்தொகைப் பதிப்புகள்-சில பார்வைகள்" என்ற கட்டுரையில் குறுந்தொகை 24 ஆம் பாடலில் வரும் 'எழுகளிறு' என்பதற்கு 'எழுந்து வருகின்ற ஆண்யானை' என்று பொருள் கொள்வதே பொருத்தம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

இப்பாடலில் 'எழுகளிறு மிதித்த ஒரு பழம் போலக் குழைய' என்று உள்ளது. 'எழுகளிறு' என்பதற்கு 'எழுகின்ற ஆண்யானை' என்றோ அல்லது 'ஆற்று நீராடி எழுந்த ஆண் யானை' என்றோ பொருள் கொள்வோமேயானால், 'எழுகளிறு மிதித்த ஒரு பழம் போலக் குழைய' என்பதற்கும், களிறு மிதித்த ஒரு பழம் போலக் குழைய என்பதற்கும் இடையில், பொருளில் குறிப்பிடத்தக்க வேற்றுமை ஏதும் இல்லாது போய்விடும். அதாவது, 'எழுகளிறு மிதித்த ஒரு பழம்போலக் குழைய' என்றாலும் ஒன்றுதான்; 'களிறு மிதித்த ஒரு பழம் போலக் குழைய' என்றாலும் ஒன்றுதான் என்று ஆகிவிடும். ஆகவே 'எழு' என்ற சொல் இப்பாடலில் தேவையற்ற ஒன்றாய் பயனற்ற ஒன்றாய் – நிற்கும். எனவே, இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருக்க முடியாது.

'எழு களிறு' என்பதற்கு, 'ஏழு ஆண்யானைகள்' அதாவது 'பல ஆண்யானைகள்' என்று பொருள் கொள்ளவேண்டும். ஈற்றயல் அடியில் 'குழைய' என்று உள்ளதைக் 'குழைக' என்று பாடம் ஓதவேண்டும். இவ்விரண்டையும் செய்தால்தான், 'எழு' என்ற இச்சொல் இப்பாடலுக்குத் தேவையானதாகப் – பயனுள்ளதாக ஆகும்; பாடலாசிரியன் தெரிவிக்கக் கருதிய செய்தி முழுமையாக வெளிப்படும்

'குழைய' என்று பாடம் ஓதினால் பாட்டின் பொருள் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

"காதலர் அகலவும், கொடியோரது நாக்குகள், என் மனமானது ஏழு ஆண்யானைகள் மிதித்த அத்திப்பழம் போலக் குழையும்படியாகப் பழிதூற்றின".

இதில் தலைவி சொல்லும் செய்தி முழுமையுடையதாக அமையவில்லை ; ஏதோ ஒன்று குறைவது தெரிகிறது. மேலே கூறியபடிக் 'குழைக' என்று பாடம் ஓதினால், முழுமையான செய்தியை நாம்பெற முடியும். அப்போது பாடலின் பொருள் கீழ்க்கண்டவாறு அமையும் .

"காதலர் அகலவும், கொடியோரது நாக்கு
கள் பழிதூற்றின். அவை பல ஆண்
யானைகள் மிதித்த அத்திப் பழத்தைப்
போலக் குழைந்து போகட்டும் ".

இதில் முழுமை கிட்டுவதுடன், உயிர்த்துடிப்பும், உணர்ச்சிக் கொப்பளிப்பும் ஏற்படுவதை உணரமுடிகிறது. அதனாலும், பரணர் போன்ற மிகச் சிறந்த புலவர் ஒருவர் குறைவுபட்ட செய்தியுடன் கூடியதாக ஒரு பாட்லை இயற்றியிருக்க மாட்டார் என்பதாலும், 'குழைக' என்பதே மூலபாடம் என அறிக.

ஒருகளிறு மிதித்தாலே, அத்திப்பழம் மிகுதியாகக் குழைந்து விடும் ; பல களிறுகள் மிதித்தாலோ, மிக மிகக் குழ்ழந்துவிடும். தலைவியானவள் தன் சின மிகுதி காரணமாகக் கொடியோரது நாக்குகள் மிகவும் குழைந்தால் கூடப் போதாதென்று, மிகமிகக் குழைய வேண்டும் என்று கருதுகிறாள். அதனாலே, 'களிறு மிதித்த பழம் போலக் குழைக' என்னாது, 'ஏழுகளிறு மிதித்த பழம் போலக் குழைக' என்று சாவிக்கிறாள்.

'பழம்' என்றாலே போதுமானதாயிருக்க, 'ஒரு' என்ற சொல் ஏன் அதன் முன் சேர்க்கப்பட்டது ? இது புலவரின் உத்தி. 'எழு என்னும் சொல்லுக்கு 'ஏழு' (அதாவது 'பல', என்றுதான் பொருள் கொள்ள வேண்டுமேயன்றி, வேறுபொருள் கொள்ளக் கூடாதென ஏதுவாரைத் தெளிவிப்பதற்காக இச்சொல்லை அவர் ஆண்டிருக்கிறார். 'ஒரு' எனும் இச்சொல் எண்ணிக்கை குறித்த சொல்லாகையால், அதே அடியிலுள்ள 'எழு' என்னும் சொல்லும் அத்தகையதே என அது குறிப்பாக உணர்த்துகிறது. இச்சொல் இவ்வாறே பயன் கருதியே இங்கு ஆளப்பட்டுள்ளது

இவ்வாறு குறிப்பாக உணர்த்தும் இடங்கள் திருக்குறளில் பல உள.

'எண்ணென்ப' எனத்தொடங்கும் குறளில் (எண். 392) வரும் 'எண்' எனும் சொல்லுக்கு 'இலக்கணம்' என்று பொருள் கொள்வதா? அல்லது கணிதம் என்று பொருள்கொள்வதா? அதே வரும் குறளில் 'இரண்டும்' எனும் சொல் 'எண்'

எனும் சொல்லுக்கு "நம்பர்-கணிதம்" என்று பொருள் கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

'கொலையிற் கொடியாரை' எனத் தொடங்கும் குறளில் (எண் 550) அனைத்து வகைக் கொடியாரையும் கொன்று ஒறுப்பது கூறப்படுகிறதா அல்லது கொலை செய்த கொடியாரை மட்டும் கொன்று ஒறுப்பது கூறப்படுகிறதா? இக்குறளுக்கு அடுத்த குறளில் வரும் 'கொலலமேற்கொண்டாரிற்' எனும் சொற்கள் 'கொலை செய்த கொடியாரை' மட்டுமே கொன்று ஒறுத்தல் வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றன.

'இளையர் இனமுறையர்' எனத் தொடங்கும் குறளில் (எண் 698) வரும் 'நின்ற ஒளி' என்பதன் பொருள் 'நிலைபெற்ற அறிவு' என்பதாகும் என்பதை அடுத்த குறளில் உள்ள 'துளக் கற்ற காட்சி' என்ற சொற்றொடர் குறிப்பாக உணர்த்துகிறது. (நின்ற ஒளிக்குப் பரிமேலழகர் கூறியுள்ள பொருள் தவறானது.)

'ஆறு' எனும் சொல்லுக்குப் 'பாதை' அல்லது 'வழி' எனும் பொருள் உண்டு என்பதை நண்பர் ஒருவர் நினைவூட்டினார். இப்பாடலில் வரும் 'ஆற்றயல்' என்பதற்குப் பாதையின் அருகில்' என்று பொருள் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும் ; இதுவே பாடலாசிரியரின் கருத்துமாகும். பாதையிலும் உதிர்ந்து கிடக்கும் ; அதனால் அப்பாதையில் நடந்து வரும் களிறுகளின் கால்களில் மிதிபட்டுக் குழைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

பாரதிதாசன் கண்ட பெண்மை

மா. மீனாட்சிசுந்தரம் எம். ஏ.,
திட்ட உதவியாளர், எம். பில்
மொழியியல் துறை,
பாரதியார் பல்கலைக் கழகம்
கோவை - 46.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" (குறள். 54)

என்ற வள்ளுவரின் நெறியிற் பெண்மைக்குப் பெருமையும், தாய்மைக்குச் சிறப்பும் தந்த தமிழகத்தில் வேற்றுப்பண்பாடு விரவிய காலத்தில் பெண்களின் நிலை குன்றி, படிப்பின்றி அடுப்பூதும் நிலைக்குத் தாழ்வுறத் தொடங்கியது. வாழ்க்கைத் துணை, குடும்பத் தலைவி எனும் நிலை மாறி ஆடவர்தம் போகப் பொருளாகவும், மகப்பேற்று இயந்திரமாகவும் எண்ணும் அளவு அவர்கள் குலைவுற்று அடிமைபோலாயினர். அத்தகைய பெண் களுக்கு உரிமை வேண்டிப் பாடிய பாரதிதாசனின் பெண் ணுரிமைப் போக்கினைக்காண்பதுவே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆடவர் மகளிர் சமநிலை

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்" 1

என்பது பாரதியார் கொள்கை.

பாரதிதாசனும் ஆணும் பெண்ணும் மலரும் மணமும் போலும், கண்ணும் ஒளியும் போன்றும் கடலொத்த அன்புப் பெருக்கால் கலந்து சமானத்தர் ஆனார் என்ற எழுச்சிப் பண் காதில் விழும் நாள் நோக்கிக் காத்திருப்பதாகக் கூறுதல் பெண்ணுரிமை போற்றும் அவருடைய இதயத்தின் எதிரொலியாகும்.

பெண் விடுதலையின் முதன்மை :

பாரதிதாசனுடைய காப்பியங்களிற் பாதியிடத்துக்கு மேல் பெண்ணுரிமை இடம் பெற்றுள்ளதாக [2] மு. கோவிந்தசாமியும் [3] அப்பெண்கள் ஆண்களை விடப் பலவகையிலும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளனர்' என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் கூறியுள்ளனர்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து விடுதல் முயற்கொம்பே"
(தொகுதி-1, ப.3)

என்ற பாரதிதாசன் கவிதைப் பகுதி பெண் விடுதலையே மண் விடுதலைக்கு முதற்படி என்னும் அவர் கருத்தை வலியுறுத்து

கின்றது. பெண்களை ஆடவர்கள் அடிமைபோல் அடக்கி ஒடுக்கி ஏவல் கொள்வதும், தம் இச்சைக்கு ஆட்படுத்தலுமாகிய கொடுமை நிலவும் வரை ஆடவரும் பிறரும் அடங்கி வாழும் நிலையே ஏற்படும் என்பதை,

"ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கு" (தொகுதி 1, ப. 3)

என்று கூறுகிறார்.

பெண்களை அடிமைகளாய் நடத்தி, அறிவற்ற பேதைய ராய்ச் செய்துவிடில் அப்பெண்கள் பெற்ற பிள்ளைகளும் அறிவொளி குன்றியே வளர்வர் என்பதை

"புலன் அற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால் - அந்
நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே"
(தொகுதி-1, ப.3)

என்று பாரதிதாசன் காட்டுகின்றார்.

பெண்மையின் தீரம்

தாசன் பெண்டிரின் உள்ள வலிமை, உடல் வலிமை குறித்து, மாதர்கள் உமியல்ல என்றார். அவர்தம் பூங்கரங்களும் தேவைப்படின் தீயவரின் உயிரை அழிக்கும் படையாகச் செயற்படும் உறுதியும் ஆற்றலும் கொண்டன என்பதை,

"உமியல்ல மாதர் வலக்கை — தீயர்
உயிரை இடிக்கும் உலக்கை" (தேன்; ப. 52)

எனக் கூறுகின்றார்.

பெண்டிர் எழுச்சி

கயமையைத் தன் போர்க் குணத்தால், புறமுதுகிடச் செய்த வீர நங்கையின் தீரச் செயலினைப் பாரதிதாசன் காட்டுகின்றார். காற்றடித்த சோலையிலே நேரம் பார்த்துக் கனி பொறுக்கும் சிறுமை கொண்ட காளை ஒருவன், எழுச்சி பெற்ற நங்கையிடம் வாலாட்டித் தன் காமச் சிறுமையை வெளிப்படுத்த, அந்தத் தமிழ் மங்கை, ஒளித்திருந்த குறுவாளை ஓங்கத் தீயவன் ஓட்டம் பிடித்த நிகழ்ச்சி குறித்து,

"கோடி உள்ளம் வேண்டுமித்த மகிழ்ச்சி தாங்க"
(தொகுதி-1, ப. 114)

எனக் கயவனை விரட்டிய நங்கையின் உறுதியைப் பாராட்டுதல் கவிஞர் தம் பெண்ணுரிமை போற்றும் மறுமலர்ச்சிப் பாங்காகும்.

விதவையர் முறையீடு

கணவனை இழந்து கைமைத் துயரில் வருந்தி உயிர்விடத் துணிந்த இளம் பெண்ணொருத்தி தன் இளமையுள்ளங்கொண்ட இன்ப உணர்வை அடக்கவோ, அழிக்கவோ வழியறியாது புலம்பும் குரலில்பாரதிதாசன், நடைப்பிணமாய் உலவும் விதவைப் பெண்களின் கடுந்துயரைக் காட்டியுள்ளார். மணங்கொண்ட ஆடவர்கள் இறந்துவிடுதல் மங்கையரின் பிழையல்ல என்பதை உணர்த்தும் அப்பெண், மணவாளன் இறந்ததால் மங்கல நாணும் நல்லாடை அணிவகையும், புனைமலரும், குங்குமமும் இழந்தாலும் அவள் பொன்னுடலும் நல்லுணர்வும் இருப்பதால் இயற்கை நியதி வழி அவை இன்பத்தை நாடுதலை எடுத்துக் காட்டி, கைமையைச் சுமத்தி இச்சமுதாயம் தங்களைத் தண்டிப்பது தகுமா என்று கெடுவானையும் நிறைபுனலையும் கேட்பதாகக் கவிஞர் காட்டுகின்றார். மேலும் வானில் தோன்றும் நிலவைப் பார்த்துத்

"தனையடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்
சகமிருந்தால் காட்டாயோ ? நிலவே நீதான்"

(தொகுதி – 1, ப. 8)

என்று விதவை கேட்பதாக அமைந்த கூற்றில் காதலுணர்வு என்பது உயிரும் உடலும் பற்றிய உண்மைத்தேவை என்பதும், அவை இளம் விதவையர்க்கு மறுக்கப்படுதல் கொடுமை என்பதும் சுட்டப்படுகின்றன. பிறிதோரிடத்தில்,

"இளமை தந்தாய், உணர்வு தந்தாய், இன்பங்காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கை தேவி"

(தொகுதி – 1, ப. 82)

என இளமையும், உணர்வும் இன்பம் வேட்கும் இன்னுயிரும் இயற்கையின் படைப்பே என்பதைச் சுட்டி, கைம்மையுற்ற இளம் பெண்களுக்கு இன்பம் மறுக்கப்படுதல் இயற்கையின் அமைப்பையே மறுப்பதாகும் என்றும் உணர்த்துகின்றார்.

பெண் கல்வி

ஆண், பெண் இருபாலருக்குங் கல்வி இன்றியமையாததானாலும் பெண் கல்வியின் சிறப்புக் கருதி இப்பகுதியில் விதந்து கூறப்படுகிறது.

சங்ககாலத் தமிழகத்தில் பெண்களின் கடமையும் உரிமையும் நன்கு மதிக்கப்பட்டன. பெண்டிர் கல்வியறிவு சான்று மனைமாட்சி சிறக்க வீட்டின் அரசியராக வாழ்ந்ததுடன் நாட்டில் கலைநயம் சிறந்த கவிஞராகவும், அரசியல் தூது செல்லும் அறிஞராகவும் திகழ்ந்துள்ளனர்.

இடைக்காலத் தமிழகத்தில் வேற்றுப் பண்பாடு விரவியதன் விளைவாக மகளிர்நிலை தாழ்ந்து அவர்கள் கல்விக் கண்ணற்ற குருடராய்க் குடும்ப வாழ்வில் அடிமைப் பட்டு உழலும் அவல நிலை தோன்றியது.

கல்வியற்ற பெண்களின் தாழ்வு

பயிர் வளரும் நிலம் வளமாக இருந்தாலே, நிலத்தில் வளரும் பயிர் பெரும் பயன் தரும், என்பது யாவரும் உணர்ந்த உண்மை. உலகில் மானிட உயிர்க் கூட்ட மாகிய பயிர்தொகுதி தோன்றி வளரும் நிலமாகிய பெண்கள், கல்வி வளமற்ற களர் நிலமாக இருந்தால், அங்கும் புல்லும் களைகளும் போன்ற பயன் அருகியும் அற்றும் வாழும் மக்களே தோன்றுவர் என்பதனை,

"கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் ; அந்நிலத்தில்
புல்விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை !"

(குடும்ப விளக்கு, ப. 69)

எனக் கூறிப் பெண் கல்வியின் இன்றியமையாமையினை விளக்குகின்றார்.

பெண் கல்வியின் பெரும்பயன்

கல்வியின் நன்னலங் கூறிப்பள்ளிக்கனுப்பும் பாங்கில்,

"மலைவாழை அல்லவோ கல்வி? – நீ
வாயார உண்ணுவாய் போ — என் புதல்வா!"

(இசை—1, ப. 50)

எனப் பாரதிதாசன் கல்விப் பெருமை பேசுகின்றார். மேலும் படிக்காத பெண்ணின் பெற்றோரை ஊர் மக்கள் எள்ளும் நிலையையும் சுட்டிக் காட்டுகின்றார்.

நகரங்களில் இக்கால நங்கையர் கல்விக்கழகம் சென்று, கல்வி நலம் பெற்றும், கவிதையில் அறிவு தோய்ந்தும், தலையாய கலைகள் பலவும் ஆய்ந்தும் வீடு திரும்புதலால் நாட்டில் உலவும் மடமைப்பேய் தாக்கப்பட்டதாகப் பாரதிதாசன்,

"உலவிடு மடமைப் பேயின்
உடம்பின் தோல் உரிதல் கண்டேன்!"
(அழகின் சிரிப்பு, ப. 60)

என்று குறிப்பிடுவது அவர் வலியுறுத்திய பெண் கல்வி நாட்டத்தின் பெரு வெற்றியாகும்.

முடிவுரை

மேற்கூறிய கருத்துக்களைக்கொண்டு பார்க்கும்போது ஆடவர் மகளிர் - சமநிலை, பெண் விடுதலையின் முதன்மை, பெண்மையின் தீரம், பெண்டிர் எழுச்சி, விதவையர் முறையீடு, பெண்கல்வி, கல்வியற்ற பெண்களின் தாழ்வு, பெண்கல்வியின் பெரும்பயன் போன்ற முறைகளில் தெளிவாகப் பெண்ணுரிமையைப் பேசியுள்ளார் என்பது புலனாகிறது.

குறிப்புகள்

1. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 801.
2. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி ப. 99.
3. மு. கோவிந்தசாமி, பாரதிதாசன் கவிதைத்திறன், ப. 148.
4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 89.

கண்ணகியும் மெங்சியாங் நூவும்
[ஓர் ஒப்பியல் இலக்கிய ஆய்வு]

பேராசிரியர் கோ. வேங்கடாசலம்
மேனாள் முதல்வர், ஈ. வெ. ரா. கல்லூரி,
பூக்கார விளார் சாலை, தஞ்சாவூர்.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் உட்கோள் பத்தினியைப் பரவுதல் ஒன்றேயாம். மக்களுள் ஒருத்தியாய கண்ணகி, தன் கற்பின் திறத்தால், பத்தினித் தெய்வமாக அரசும், மக்களும் பிறரும் போற்றுமொரு தெய்வமானாள் என்பதும், சேரன் செங்குட்டுவன் அவள் திறன் கேட்டுக் கோயில் எடுத்து அவளுக்குச் சிறப்பு செய்தான் என்பதுவே சிலம்பின் மையக் கருத்து. காப்பியமாதலின், பல நிகழ்ச்சிகள் நுவலப்படுதல் உண்மையாயினும் அவையெல்லாம் ஒரு பரிசாகக் கிடந்து காப்பிய உட்கோளை முற்று வித்தல் காண்க. பத்தினியின் கதையைத் தமிழுலகம் நன்கு அறியுமாதலின் ஈண்டு விரித்துரைக்காது விடுத்தாம்.

மெங்சியாங் நூவின் வரலாறு

1. ஊரின் நீங்குதல்

கி. மு மூன்றாம் நூற்றாண்டில் சீனநாட்டுப் பேரரசன், தன் நாட்டின் வட எல்லையில் நீண்ட ஓர் அரண் எடுத்தான். அம் மதில் வடபகுதியில் மேலக் கோடியிலிருந்து கிழக்கோடி வரை நீண்டு செல்வதாம். "சீனாவின் பேரரண்" [The Great wall of China] என உலக அதிசயங்களுள் ஒன்றாக வைத்துப் போற்றப்படுவதாகும். அதனை எடுக்கும் காலத்து, அரசன், அதனைக் கட்டும் பணியில் தன்னாட்டு மக்கள் - ஆடவர்கள் - அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். அதன்படி, பேரூர், சிற்றூர், கிராமம் என்ற வேறுபாடில்லாமல், ஆடவர் அழைத்துச்செல்லப்பட்டனர். புலவர், கலைஞர், அறிஞர், தொழில் வினைஞர் என்ற வேறுபாடில்லாமல், அனைவரும் கொண்டு செல்லப்பட்டனர்.

அவ்வாறு சீன நாட்டின் தென்பகுதியில் இருந்த ஒரு கிராமத்தில் வாழ்ந்த பான் சீ லியாங் [Fan Ch'i Liang] என்ற ஓர் இளம் அறிஞனையும் அரசு காவலர் கொண்டு போயினர். அவனுடைய இளம் மனைவிதான் மெங்சியாங் நூ என்பாள்.

நாட்கள் பல உருண்டோடின; கணவனைப் பிரிந்த ஆற்றாமையால் தனித்திருக்க மனம் இன்றி, அந்த இளம்

பேதை, கணவனைத் தேடி, மதில் எடுக்கப்பெறும் இடம் நோக்கிச் செலவு மேற்கொள்ள ஆயத்தமானாள். அடுத்து வரும் குளிர் காலத்தில் அணிந்து கொள்ளுதற்கேற்ற பாது காப்பான ஆடைகளைத் தைத்து அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டினாள். நீண்ட அம் மதில் சுவர் எடுக்கும் பக்கம் போக ஆடவர் நடுங்கும் நிலையில், தன் மேல் வைத்த பரிவினாலோ தான் கொடுக்கும் கூலியாலோ ஒருவரையும் பணி கொள்ள முடியாத நிலையில், அந்த மூட்டையைத் தானே முதுகில் சுமந்து கொண்டு, வடவெல்லை நோக்கிச் செல்லத் தொடங்கினாள்.

பேரரணை எடுக்க, அரச கட்டளையால் தன் பெறலரும் கணவன் பிரிக்கப்பட்ட நாளிலேயே, அவள் பேரழகு வாடியது; மெல்லிடை மேலும் மெலிவுற்றது. வண்ணம் தீட்டப் பெறாமலேயே சிவந்த அவள் கன்னங்கள், புருவங்கள் மெல்ல எழில் இழந்தன. கூதிர் காலமும் அணுகத் தொடங்கிற்று.

அந்தோ, என் ஐயனைக் கல் சுமக்கும்படி யாண்டு வற்புறுத்துகிறார்களோ? மென்மை வாய்ந்த அப் பேரறிஞரினை இயல்பறிந்து யாரே போற்றுவார்? ஓம்புவார்? சாட்டையா லடிக்கும் கொடிய கண்காணிக்கும் மக்களிடமிருந்து வசையும்கசை யடியும் பெற என் தலைவன் என்னதான் பாவம் செய்தார்?

ஐயனே, எத்தனை காலம் தங்கள் வருகைக்காகக் காத்திருப்பேன்? வெண்முகில் பரவிச் செல்லும் அடி வானத்துக்கும் அப்பாலும் துருவி துருவிப் பார்க்கிறேன். இதோ வீசும் காற்றில் கூதிர் காலத் தன்மையும் கலந்திருக்கிறது. நெடுஞ்சாலைகளிலே பழுத்த இலைகள் உதிர்ந்த வண்ணம் இருக்கின்றன.

தங்கள் வருகைக்காகக் காத்திருப்பதா? காத்திருத்தல் என் நெஞ்சைப் பிளக்கிறது. தீவினை வயப்பட்டு தங்களைக் காண ஏங்குகிறேன். ஆறாத் துயரமொடு, தங்களைத் தேடி வருகிறேன். தங்களையும் என்னையும் பத்தாயிரம் "லீ" இடைவெளி பிரிக்கிறது என்பதை நான் அறிவேன். [லீ : 663 கஜதூரம்]

சின்னஞ்சிறு செருப்பணிந்து, அக் குறுமகள் புறப்பட்டாள். மெல்லியளேனும், அவள் உயிர் ஒளிர்ந்தது. நெஞ்சம் இரும்பாயிற்று. ஒரு சிறு கொண்டை ஊசியைக் கூந்தலில் செருகிக் கொண்டாள். அழகும் கவர்ச்சியும் கரந்தொழிய, வீசும் காற்றிலும் துளிக்கும் மழையிலும் நிலாக் கதிர்கள் விழும் சாலை மேல், எதற்கும்

அஞ்சா மனத்தொடு, உழையோரில்லா ஒரு தனியுழந்து வருபனி சொரிந்த கண்ணளாகி, துணிப் பொதியைச் சுமந்தவளாய், பேரரணை நோக்கி நடந்தாள் அப்பேதை.

வழியெல்லாம் பனியும் மழையும் காற்றும் வருத்த சேற்றிலும் சகதியிலும் உழன்று நடந்து தன் கணவனைப் பற்றிய எண்ணத்திலேயே மெய்ம் மறந்தவளாய்ச் சென்று கொண்டிருந் தாள். "ஆண்டவா! என் ஐயன் தன் சொந்த ஊருக்கு எப்போது திரும்புவார்? என்னை விடுத்துப் பிரிந்த காலத்து என்னை நோக்கி "நான் திரும்பி வருங்காலத்தை உறுதியாகச் சொல்லமுடியாது. அரச கட்டளையை யாரே மீறவல்லார்! நான் இறந்து போய் மணற்படிப்பில் என் எலும்புகள் சிதறுண்டு கிடக்கக்கூடும். நாமிருவரும் ஒரு பாயலில் ஒரு தலையணையில் ஒருங்குடன் தலைவைத்துத் துயிலுதல் என்பது இனியேது? அன்பிற்கு இனியவளே, யான் சொல்வதைக் கேள்; தடுக்க இயலாததை எதிர்க்க வேண்டாம். உடைந்த கண்ணாடி இணைந்து மீண்டும் ஒளி வீசும் என்று கனவு காண வேண்டாம். என்னுடைய இந்தச் சிறிய சொத்து, உன்னைக் காப்பாற்றும் என்று தப்புக்கணக்கு போடவேண்டாம். உன் இளமைக்காலக் கனவுகளைப் பொசுக்கி வெறுமையாக்கிவிட வேண்டாம். நான் திரும்பி வருதல் அரிது என்பது உன் முன் யோசனையே உனக்குச் சொல்லும்" என்றெல்லாம் சொல்லிப்போனீரே. ஐயனே உங்கள் வார்த்தையில் அருளும் அன்பும் ததும்பிற்று. ஆனால், என்னீர்மையைத் தங்களோடு நான் வாழ்ந்த இல்வாழ்க்கை கொண்டு எண்ணிப்பாருங்கள் நாம் நெஞ்சொடு நெஞ்சு ஒன்றி, நீரும் மீனும் போல வாழ்ந்தோம் என்பதை மறந்து விட்டீர்களா? ஒன்றுக்கும் உதவாதவள் உங்கள் துணைவி என்று ஏன் நினைக்க வேண்டும். சலிப்பின்றி மாறாமல் அதே உணர்வு என் உள்ளத்தில் நிரம்பியுள்ளது. என் தூய மனம், சிதைவு படாத செங்கோல். நான் மேற் கொள்ளும் செயல் ஆற்றற் கரியது என்பதனை அறியேன். என் மனத்திண்மையைப் பற்றிக் கொண்டிருக்கிறேன். கற்பென்னும் திண்மையால் தெய்வ சங்கற்பத்தைக் கூட மாற்றலாம் அல்லவா? நான் சிறுமியாக இருந்த காலத்தில், எனதருமைத் தந்தை யான் பற்றி ஒழுக வேண்டிய விதிமுறைகளைக் கற்பித்து இருக்கிறார். அந்த நாள் முதல் சிறந்த அவ்வழி முறைகளையே போற்றி வந்திருக்கிறேன். மேலும், என் ஐயன் எனக்கு விலை மதிப்பற்ற அறவுரைகளை அருளியிருக்கிறார். இந்த நிலையில் இப்போது இவற்றையெல்லாம் எப்படிக் கைவிடுவேன்? ஒரு அறிஞர் பெருமானின் எச்சரிக்கைகளைச் செவி மடுத்து, ஒரு கணவரின்

அறவுரைகளை மறப்பது எங்ஙனம்? கடமைகளை எப்படி செய்யாதிருப்பேன்? அதனால் பத்தாயிரம் "லீ" தூரத்தைக் கண்டு துணுக்குறாது, என் ஐயனைத் தேடி நெடு வழிப் போகிறேன்" எனச் சூளுரைத்துப் போவாளாயினள் அக் கற்பின் கொழுந்து.

2. கனவு

இவ்வாறு தன்னருங் கேள்வனைப் பற்றிச் சிந்தித்த வண்ணமாய் தன் களைப்புற்ற உடல் ஓய்வுபெற, புல்லும் காய்த இந்த வறண்ட பெரு வெளியில் எவ்விடம் தாங்குவது? இந்த அயல் நிலத்தில் தந்தையர் உளரோ? தாயர் உளரோ? என் செய்கேன்யான். பனியிலும் மழையிலும் ஒளிர் காற்றிலும் அலைந்து என் உடலும் விறைத்து விட்டது. என்று அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு மெல்ல ஊர்ந்து நடந்தாள். அதோ அந்திப் பறவைகள் பறந்து கூடு நோக்கிச் செல்கின்றன. கோயில் மணியோசையும் கேட்கிறது. சற்றுத் தொலைவில் ஏதேனும் ஒரு சிற்றூர் இருக்கலாம் என்று ஊகித்தவளாய் வருபனி கண்ணைத் துடைத்துக் கொண்டு அத்திசை சென்றாள். அவள் புகுந்த இடம் அடர்த்தியான காடாய் இருந்தது. அதனுள் கடல் தெய்வத்துக்குக் கிராம மக்களால் எடுக்கப்பெற்ற ஒரு சிறு கோயில் இருந்தது.

இக் கடவுளின் பலிபீடத்து மருங்கில் நான் இன்றிரவைக் கழிக்க வேண்டியதுதான். மெலிந்துதைந்து இச்சிறு உடல் ஒருவருக்கும் புலனாகப் போவதில்லை. முன்னர் எல்லாம் குடிப்பதற்கு ஊற்றுநீர் கிடைத்தது. இன்று அதுவும் இல்லை. என் செய்வது என்று கையற்றவளாய், கண்களில் நீர் வார, கடல் தெய்வத்தை வணங்கினாள். அத் தெய்வ முன்றிலில்தான் தங்குவதால் ஆய அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டினாள். ஒரு சிற்றிடத்தைத் துப்புரவு செய்து கொண்டு, பனியோடு பனியாய் உறைந்தவளாய் அத் தெய்வ முன்றிலில் கிடந்தாள் மெங்சியாங்.

அவள் கனவொன்று கண்டாள். கந்தலை ஆடையாகச் சுற்றிக் கொண்டு கையற்ற நிலையில், நெரிந்த புருவமும், கவலை கரந்த நெஞ்சமும் நீர் நிரம்பிய கண்களும் உடைய வனாய் அவள் முன் தோன்றினான். அவன் சொன்னான்; "என் அருமை மனைவியே, என்னை அடையாளம் தெரிய வில்லையா? என்னைத் தேடிக்கொண்டு பத்தாயிரம் "லீ" தூரத்தைத் துச்சமாக நினைத்து நடந்து வந்தனையே. உயிர் நீத்த உடம்பாலும் சிதறிக் கிடக்கும் எலும்புகளாலும் தான்

பேரரசனின் கட்டளையை உன்னைக் காதலன் ஈடு செய்ய முடிந்தது." மெங்சியாங் [illegible] சொன்னாள், "காதல, வந்துவிட்டீர்களா? அன்பனே ஐயனே" என்று கதறிக்கொண்டு எழுந்து அவனைத் தழுவ முயன்றாள். ஆனால் கனவு கழிந்தது; பொழுது புலர்ந்தது.

துணுக்குற்றவளாய்த் துள்ளி எழுந்தாள். மறைந்த கனவை மீண்டும் நினைந்து சிந்தித்தாள். "இக் கனவு என்னை அச்சுறுத்துகிறதே. என் நெடுந்தொலைவுச் செலவின் பயன், என் கணவனின் உயிர் நீத்த உடலையும், எலும்புகளையும் காண்பது தான் என்று அவர் சொன்னாரே இதுதானா நான் பெறப்போகும் பலன்? இருக்காது. கனவு குன்றும் ஆறும் தாண்டி வந்ததனால், தலைகீழாகத் தோன்றியிருக்கும். நல்லது கெட்டது மாறித் தோன்றியிருக்கும்" இவ்வாறு அந்தப்பேதை தன் பேதுற்ற மனத்தை அமைதிப்படுத்திக் கொண்டாள். சிறிது நேரத்தில் மீண்டும் கலங்கினாள்.

"ஐயோ! என் ஐயனைப் பாதலத்தில் தான் தேட வேண்டி யிருக்குமோ? இதுதான் விதியென்றால் அப்படியே இருக்கட்டும். நான் வேண்டுவது ஒன்றுதான்; என் இறுதிக் காலத்தில், நான் என் கணவனருகில் மடிதல் வேண்டும். இப்போது என்னுடைய அச்சமெல்லாம் என் கணவனைக் காணுமுன் வழியிலே நான் இறந்துபோய் விடுவேனோ என்பதுதான். நான் மெலிந்து போய்விட்டேன்; நீர்போல் நெகிழ்ந்து போய் விட்டேன்." என்று புலம்பினாள்.

புலர்ந்தும் புலராப் பொழுதில், தன் மெலிந்த கரங்களால் கை கூப்பிக் கடல் தெய்வத்தையும், பிற தெய்வங்களையும் வணங்கினாள். "இந்த உலகில் நிறைந்த எல்லாத் துன்பங் களுக்கும் பெருந்துன்பம், இலக்கு ஒன்றைக் கொள்ளாத பயணம் தான். ஆயினும் இம்மாபெருந் துன்பமும் கணவன் மனைவியரின் ஒருமையையே புலப்படுத்துகின்றது" என்று கூறித்தொழுதாள்.

3. குடில் ஒன்றில் இருந்தமை

அந்தப் பண்டை நெடுஞ்சாலையில் பனிக்காலத்தில் பழுத்த இலைகள் எல்லாம் கொட்டிச் சிதற, ஊதும் வாடையில் நடுக்குற்றுத் தடுமாறி நடந்தாள் அம்மடந்தை. அவள் சிந்தை தன் காதலன் பால் படர்ந்தது. "ஐயனே, உங்களை எங்கு காண்பேன்? உயிருடன் இருக்கிறீர்களா? இல்லையா? என்பது அறியாத நிலையில் எதற்கென்று இந்த அரிய முயற்சியை மேற்கொள்வேன்? நிலவொளியில் நம் வீட்டு

மலர் வனத்தில் கூதிர்காலவரவு நோக்கி, நாமிருவரும் இணைந்து
யாழ் இசைத்தோம். அந்த அமைதி வாழ்க்கை கழிந்தது.
அந்தோ! அந்தப் பேரெயில் நோக்கி நான் போகிறேன். இந்த
நடைச் செலவு என் தலைவனைக் காட்டுமா? இந்தச் சாலை
மீது அவலம் கவிழ்ந்து கிடக்கிறது. இன்றிரவு என்னோடு
உணவு உண்ண வருவீர்கள் என்ற என் ஆசை நிராசை
தானோ? நாம் இருவரும் ஓசைப்படாமல் படியேறி மேல்மாடம்
போவோமே—இவையெல்லாம் மீண்டும் வராவா? ஐயனே நாம்
இப்பெருந்துன்பம் உழப்பதற்கு முற்பவத்தில் தாங்கள் செய்த
பாவம் தான் என்ன? என் உள்ளங்கால்கள் வலிக்கின்றனவே.
பிடித்துவிட, பிடித்துவிட வலி குறையக் காணோமே. ஒரு
சின்னஞ்சிறு மலரைப் போல வாடி வதங்கியிருக்கிறேன்.
வாடைக் காற்று திடுமென என்னைத் தாக்குகிறது. பழுத்த
இலைகள் சூறைக் காற்றில் சுழன்று வந்து விழுகின்றன அவை
புகைமூட்டம் போல் என் கண்ணை மறைக்கின்றன அங்கும்
இங்கும் பதிந்துள்ள காலடிகளைக் காண்கிறேன். குடில் மிசை
கோழி நின்று கூவுவதைப் பார்க்கிறேன். சில வேளைகளில்
மரத்தின் உச்சி நோக்கிக் குருவிகள் பறந்து செல்கின்றதைக்
காண்கிறேன். நாய்கள் குரைக்கின்றன இப்படிப்பட்ட துன்பக்
காட்சிகளை பார்த்துக் கொண்டே போகிறேன். ஒவ்வொன்றும்
என்னுள்ளத்தில் அவல உணர்வையே தோற்றுவிக்கின்றது.''
என்று புலம்பிக்கொண்டு சென்றாள்.

நண்பகலும் வந்துவிட்டது. ஆனால் மெங்சியாங் காலை
உணவு இன்னும் அருந்தவில்லை. வழியில் யாதானும் ஓர்
சிற்றூரில் கஞ்சி குடிக்கக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு
நடந்து கொண்டே இருந்தாள். ஒரு வழியாக, ஒரு
விருந்தோம்பும இல்லத்தை அடைந்தாள். அக் குடிலின் தண்
பெருங்கிழத்தி, இம் மாதின் பயண உடைகள், அவளது
தோற்றத்தில் ஒரு மென்மையும் மேன்மையும் பொலிவதைக்
கவனித்தாள்.

''உனக்கு எவ்வகை உணவு வேண்டும்'' என்று கேட்டார்
அம்மூதாட்டி ''அரிசிக்கஞ்சி இருந்தாற்போதும் எனக்கென
ஒன்றும் செய்யவேண்டாம்'' என்றாள் மெங்சியாங்.

சிறிது கஞ்சி குடித்து இளைப்பு நீங்கியதும், தன் வாடிய
கன்னங்களில் படிந்திருந்த ஈரத்தைத் துடைத்துக் கொண்டாள்.
அவளுடைய ஒவ்வொரு அங்க அசைவும் ஒரு கவர்ச்சியையும்,
ஒவ்வொரு பாவனையும் நாணம் பொலிவதையும் காட்டின. இவள்
செய்கையெல்லாம் உற்று நோக்கிய அம்மூதாட்டி, இவள்

இப்போது துன்ப வயப்பட்டிருப்பினும், இவள் ஒரு குலப்பிறப்
பாட்டி என உணர்ந்து கொண்டு, ''அம்மா, எங்கிருந்து
வருகிறாய்? எங்கு போகிறாய்'' என்று உசாவினாள். இவ்
அன்புரை கேட்ட இளையோள் கண்ணீர்வர மொழிந்தாள்.
''இந்தப் பேரெயில் தாம் எம் பகை இதனைக் கட்டும் பணிக்காக
என் கேள்வனை வலுக்கட்டாயமாகக் கொண்டு போய்விட்டார்
கள். என் உள்ளம் துரப்ப, அவரைத்தேடி பத்தாயிரம் ''லீ''
தூரம் குன்றும் மழையும் பல பின்னொழிய கண்ணீர் சிந்திய
வண்ணம் வருகிறேன். பனியாலும் சாரலாலும் உலகம்
சில்லிட்டுப் புயற்காற்றால் அலைக்கப்பெறும் முகிற்படலங்களால்,
கதிரவன் வெம்மை குன்றிப் போய்விட்டான். இந்த அச்சிரக்
காலையில், துயருழந்து மரத்துப்போன மனத்தொடு மெல்ல
மெல்லப் பின்னிப் பின்னி நடந்தாலும், இதோ என் அன்பனுக்
காக நான் தூக்கிப்போகும் இந்தச் சுமை நான்படும் துயரை
உணரா வகை உதவுகிறது. பெருகிச் செல்லும் ஆறு வற்றிய
தும், கற்கள் தோன்றுவதுபோல, இந்தப் பயண முடிவில்
அந்தப் பேரெயிலை நான் அணுகியதும், என் மனம் அமைதி
யுறும் துயர் சூழ்ந்த நெஞ்சத்தோடு வீண் கண்ணீர் வடித்துக்
கொண்டு ஒரு சிறை இருப்பதைக் காட்டிலும், முடிவுபெறாமல்
அரைகுறையாக இருக்கும். இந்த நிலையிலும், அவரைத்
தேடுதல் ஒரு மெலிய ஆறுதல்''

இவ் உரை கேட்ட அம்முதியோள், ''ஈதென்ன பேதமை.
பத்தாயிரம் 'லீ' நடப்பதா? அதிலும் இந்தப் பனிக்காலத்திலா?
இந்த ஒரு சிற்றுடலும் சீறடியும் கொண்டா? ஊரெல்லாம்
கலவரமாக இருக்கிறது. மலை, காடுகளில் கயவர்கள் திரியும்
காலம். தன்னந்தனியளாய்ச் செல்வதா? பெண்ணே, வேனிற்
காலத்தில் நீ புறப்பட்டாய் ஆனால் இப்போது கூதிர்
காலமாயிற்றே. கயவர்களால் தாக்கப்படமாட்டாய் என்பது
என்ன நிச்சயம் என்று அவலித்துக் கூறினாள்.

மெங்சியாங் மறுமொழி செப்பினாள், உலக மக்களிடைக் காணப்
படும் உறவுகளாள் கணவன் மனைவி உறவே சால உயர்ந்
தது என்று சான்றோர்கள் கூறுகிறார்கள். பெண்ணாய்ப் பிறந்த
வளுக்கு இந்த உறவு ஒன்றைத் தவிர மற்றைய உறவுகள் முக்கிய
மானவை அல்ல. தங்கள் அன்பார்ந்த அறிவுரையை ஏற்றுக்
கொள்கிறேன். வழியில் உள்ள அபாயங்களையும் நான்
உணர்கிறேன். ஆனால் இந்தப் பேதை மனம் அவரைக்
காணாது அமைதியுறாது. அவரைக் காணாமல் திரும்புவ
தில்லை என்ற முடிவோடு தான் நான் புறப்பட்டேன். எங்கள்

சந்திப்பு வாழ்வில் நடந்தாலும் சரி? மரணத்தில் நடந்தாலும் சரி''; அப்பேதையின் துணிவைக் கண்டு அம்முதியோர் மெய் விதிர்த்தாள். கண்ணீர் மொழிந்தாள் விம்மல்களுக் கிடையே அவள் கூறினாள். உனக்கு ஏற்பட்ட அவலத்தைக் கண்டு இந்த கிழட்டு மனம் துடிக்கிறது. நடந்து போனதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நீ போக வேண்டாம். உன்னால் இனியும் முடியாது. தனித்துப் போக வேண்டாம். நான் கிழம் தான் என்னால் ஒரு பயனும் இல்லை. இருப்பினும் உன்னோடு நானும் வருகிறேன். ஒருவருக்கு இருவர் நல்லதல்லவா?

மெங்சியாங் இதனைக் கேட்டு நீண்ட பெருமூச்செறிந்தாள். பின்னர், மெல்லக் கூறினாள். ''எனக்கு அன்பும் ஆதரவும் காட்டிய, வணக்கத்திற்குரிய ஒரு பெரியாரின் மரணத்திற்கு நான் பொறுப்பாவதா? அறத்தொடு பொருந்துமா? உங்கள் தாயுள்ளத்தை, என் மனம் நினைவில் கொண்டிருக்கும். என் கணவனொடு மீண்டும் நான் திரும்பிவரும்போது; என் நன்றிக் கடனை யிறுப்பேன்.''

அவளின் உறுதியைக் கண்டு வேறொன்றும் செய்யமாட்டாத அம் முதியோள், அவள் துயில்வதற்குப் பாயலிட்டுத் தான் பக்கத்திலிருந்து அன்பொழுக விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தாள்.

கோழி கூவிற்று; பொழுது புலர்ந்தது; விரைவுற்றெழுந்து, மூட்டையைச் சுமந்து கொண்டு சாலை மீது போனாள் அவ் வாரணங்கு.

4. வழி நடைத் துன்பம்

அதோ அடிவானத்துக்கப்பால் நீண்டு நிமிர்ந்த கொடு முடிகள் புலனாகின்றன. பனி சூழ்ந்த பாலை வெளியிடை தனி ஒருத்தியாம் அரிதாகக் காணப்படும் மனித அடிச்சுவடுகளைப் பற்றிக்கொண்டு அப்பேதை நடக்கிறாள், நடக்கிறாள், நடந்து கொண்டே இருக்கிறாள். சாரல் உடலைப் பனிக்கிறது. நெடுநல் வாடை என்பையே போழ்கிறது. கூதிர்காலம் அடுத்தது கொல்லும் வாடையை இச்சிறுமலர் எங்ஙனம் தாங்குமோ?

'தெய்வமே, என் நெஞ்சமே சிதைகிறது. என் வேண்டு கோளுக்கு யார் செவி சாய்க்கிறார்கள்? ஐயோ அந்தப் பேரெயில் எங்கே தான் உள்ளது?'' என மெங்சியாங் அரற்றினாள். ஆயினும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, மலைப்பாதை மீது இவர்ந்தாள். தன் கணவனைப் பற்றி வழியிற் கண்டோரிடம் கேட்டுக் கொண்டே நடந்தாள்.

''இப்பொழுது, எயில் எடுக்கும் பணிமுடியும் நிலையில் இருக்கிறது. கீழ்க் கோடியில் பணி நடந்து கொண்டிருக்கிறது'' என்று குடியானவர்கள் வழிகாட்ட, மெங்சியாங் மனம் மகிழ்ந்தாள். நம்பிக்கை துளிர்விட்டது. ''ஓ! இம்மலை வழி ஆங்கேதான் போகிறது. என்னமர் காதலனைக் கண்டேனேல், இத்துன்பமெல்லாம் பறந்தோடிப்போகும்'' என்று எண்ணிக் கொண்டே விரைந்தாள் அந்த ஏழை.

பேரெயில் கட்டும் கடும் பணியில் பல்லாயிரம் பேர் உயிர் இழந்தார்கள். இறந்தவர் உடல்கள் மதிற்சுவரிடையே புதைக்கப்பட்டன. கீழிருந்து மலைமுகடு நோக்கி கல்லும் மண்ணும் தண்ணீரும் கொண்டு செல்லும் கடும் பணியின் பளுவைத் தாங்கமாட்டாது, கலை பயிலும் பணி ஒன்றையே கற்ற பான் சீலியாங், உயிர் நீத்தான். உடனுறை வினைஞர் மாக்கள் தங்கள் நண்பன் மறைவுக்கு வருந்திக் கற்களிடையே அவர் உடலைப் புதைத்தனர். இன்று, கூதிர் கால நடு நாள் விழாவுக்காக அவர்களுக்கு ஒரு நாள் ஓய்வு இன்று தான் மெங்சியாங் வட எல்லையை அடைந்து தன் தேடும் பணியை நிறைவேற்றிய நாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த சிறுகுடியில் யாரைக் கொண்டு தன் கணவனைக் காண்பதென்றறியாமல் கவன்றாள் மயங்கினாள், அப்போது சில கட்டிட வினைஞர்கள், துயர் தேங்கிய முகத்தினராய்க் கிழிந்த உடையினராய் இறந்த வர்கட்குப் படைக்கும் பொருள்களோடு எதிர் வருவதைக் கண்டாள். கூச்சத்தை உதறிவிட்டு, மெங்சியாங் ஓடிச்சென்று அவர்களைக் கேட்டாள்.'' ஐயன்மீர், இப்பேரெயில் கட்டும் பணிக்காகக் கொண்டு வரப்பட்டவர்களுள் என் கணவரும் ஒருவர் பான்சீலியாங் உங்களுடன் பணி செய்கிறாரோ? அவர் என் கணவர்''.

துயரம் மீதூர்ந்தவராய் அவ்வினைஞர்கள் அவளிடம் சொன்னார்கள் ''அவருக்காகத்தான் நாங்கள் இன்று ஈண்டு வந்தோம். கடும்பணி செய்தறியாதபான்' வேலையின் பளு தாங்கமாட்டாது இறந்து போயினார். இரவோடு இரவாக அவர் உடலை மதில் சுவரிடையே புதைத்து விட்டோம் இன்று கூதிர் கால விழா ஆதலால், அவர் ஆருயிர் சாந்திபெற, சடங்குகள் செய்யவந்தோம்.

நடந்த நிகழ்ச்சிகளை அவர்கள் கூறிக்கொண்டு இருக்கை யிலேயே, அந்தப் பேதை சுருண்டு மண்மிசை விழுந்தாள்.

5. கணவனது என்பைக் கண்டுகொள்ளல்

மென் சிறு மலரை மக்கள் காலடியில் மிதி படுதல் போலும், வெள்ளிய நிலா மேகத் திரையில் மறைக்கப்படுவது போலும் மெங்சியாங் கிடந்தாள்.

மெல்ல உணர்வு பெற்றெழுந்தாள்; விம்மினாள்; கதறினாள்; "ஐயனே" என்று அரற்றினான். பயங்கி மண்மிசை சாய்ந்தாள். "ஓ! தெய்வமே, என் வாழ்வு முடிந்தது. நல்லோரை ஏன் இவ்வாறு நலிகிறாய்? என் கணவர் தெய்வபக்தி உடையவர் ஆயிற்றே! சமயப் பணிகளைத் தவறாது செய்வாரே! அற நிலையைப் பிறழாதவரன்றோ என் ஐயன்! அரும்பெரும் நூல்களை விரிந்துரைக்கும் அறிஞர் அன்றோ அவர்? புனித நூல்களைக் கசடறக் கற்று எல்லோர்க்கும் எடுத்துரைப்பாரே! எவ்வளவுபேர் அவர் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். கடலுள் விழுந்த கல்லைப்போல் தங்களைக் காணவும் கேட்கவும் இனி எஞ்ஞான்றும் இயலாதா?

என்னைப் பிரிந்த ஞான்று, தாங்கள் சொன்ன மொழிகள் கல் நெஞ்சையும் உருக்குமன்றோ? நான் எங்ஙனம் மறப்பேன்? பறந்து திரியும் பறவைகள் கூடிப் பிரிவதைப் போல, கணவனும் மனைவியும் கூடி விதி வந்தபோது, பிரிந்து தான் ஆகவேண்டும் என் செய்வது. நாம் ஒரு நாளும் பிரியலாகாது என்பதில் எனக்கும் ஆசையில்லையா? எந்தப் பிறவியில் எவ்விடத்தில் செய்த பாவங்களுக்கு இந்தப் பிறவியில் கழுவாய் செய்யக் கட்டாயப் படுத்தப்படுகிறோமோ என்னமோ? நமக்குத் தெரியாமல் இருக்கலாம் யாரே ஊழ்வினையை வெல்வார்? பேரெயில் எடுக்கும் பணியிலிருந்து திரும்ப வரும் தடம் எனக்குத் தெரியவில்லை. நாமிருவரும் இனி சந்திப்போம் என நான் நினைக்கவில்லை" என்று புலம்பி அழுதாள்.

"ஐயனே, தாங்கள் சொல்லியபடியெல்லாம் நடந்துவிட்டது. திரும்பிப் பார்க்க எனக்கு அச்சமாக இருக்கிறது. மேலே செல்ல வழி ஏதும் காணோம். எங்கிலும் ஒரே பரந்தவெளி என் செய்வேன் யான்? ஒரே ஒரு வாயில்தான் திறந்திருக்கிறது.. நான் இறந்தால் புதைப்பாரின்றி என்னுடல் கிடந்து காற்றாலும் வெயிலாலும் சீரழியும் என்பதன்றி, சாவ எனக்கென்ன பயம்?" என்று அரற்றினாள்.

வினைஞர் மாக்கள் ஆற்றாது அழுவாளைக் கண்டேங்கி, கையற்றவளாய், "தேவி, அழுவதால் யாது பயன்? சற்று அமைதி கொள்ளுங்கள்" என்று இரப்ப, துயர் தணிந்தவளாய்,

மெங்சியாஸ் அவர்களை நோக்கி, அன்பர்களே உங்களுக்கெல்லாம் நன்றி. என் கணவனின் கல்லறையைக் காட்டுங்காள்" என்றாள். கம்பலை மாக்களும் "உடன் வருக" என்று அவளை அழைத்துக்கொண்டு சென்றனர்.

துணிப் பொதியைச் சுமந்தவளாய், மழைக் காலத்து, கறையுடைத்து எழும் நீத்தம்போல், நெஞ்சுடைத்து எழும் கண்ணீர் பெருக்கொடு அவர்களுடன் சென்றாள். விரைவில் கடற்கரையை எய்தினர். கடலும் எயிலும் தழுவி நின்றன. அறையும் பொறையும் சிதறிக்கிடந்தன. வாடைக்காற்று புழுதியை வாரியை இறைத்தது.

"ஐயோ, இந்தக் கடுங்குளிரில் என் தலைவன் எங்ஙனம் படுத்திருக்கிறாரோ" என்று விம்மினாள். வெட்டவெளியாய் இருக்கும் அவ்விடத்தில் கல்லறை ஒன்றும் காணாதவளாய் "கல்லறையைக் காணோமே காட்டுங்களேன் என்றாள்." அம்மா ஒன்று தெரிந்து கொள்ளுங்கள் இது அரசுக்குரிய இடம் கல்லறை கட்ட முடியாது. அதனால் மதிலின் அடியில் அவருடலைப் புதைத்தோம் குறியீடாக அவ் இடத்தில் அவன் பெயர் எழுதி நடுகல் ஒன்று நட்டோம் இதோ அந்த இடம் தான் "என்று கம்பலை மாக்கள் தாம் காட்ட நடுகல் நோக்கிக் குனிந்தாள். தீவாய்ப்பட்ட புல்போல அவள் உள்ளம் எரிந்தது.

"காதல, தாங்கள் எங்கிருக்கிறீர்கள்? இவ்வளவு பெரிய துன்பத்தையும் தாங்கிக் கொண்டு தொலையாத தூரம் நடந்து தங்கள் மனையாள் எதற்காக வந்தாள்? இந்தப் பேதுற்ற மனம் தங்களைப் காணலாம் என்றும் காதலால் அன்றோ இத்துயரை ஏற்றது? சிதைந்த மலராய் நான் கிடைக்க தாங்கள் மறைந்துவிட்டீர்களே!

மெங்சியாங் நூவின் ஆராக்காதலும் ஓயா அரற்றும் கற்பின் திண்மையும் கண்டு விண்ணும், மண்ணும் அதிர்ந்தன. வானுலக தெய்வங்களும் மண்ணுலக தெய்வங்களும் மனம் கசிந்தனர். தன் கணவனின் என்புகளைத் தேடினாளாக, எயில் பிளந்தது, கல்லும் மண்ணும் சிதறின. இந் நிகழ்ச்சி கண்டு இறும்பூது எய்திய அதிகாரி, அரசனுக்குத் தெரிவித்தனர். அரசனும் வியந்து தன் அரண்மனையிலிருந்து அழைப்பு விடுத்தான். அரசன் அழைப்பை உதறினாள்; தன்னமர் காதலன் அன்பினைத் தன் மார்போடு அணைத்தவளாய், மதில்மேல் ஏறினாள். ஒரு கணத்தில் கடலுள் பாய்ந்து மறைந்தாள் அப்பேரணங்கு,

இச்செய்தி கேட்ட அரசன், அவளின் கற்பின் திண்மையை வியந்து 'ஆணையிட்டான். மதவிதிப்படி அனைத்து மரணச் சடங்குகளும் செய்க அவளது திண்ணிய கற்பின் புகழ் பரவும் வகை, அவளுக்குக் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்க.

மெங்சியாங் இவ்வாறு அமரத் தன்மைபெற்றாள்.

ஆய்வு :

மெங்சியாங் என்பாளது சரிதம் சீன இலக்கியத்தில் Drum - Story என்ற வகையைச் சார்ந்த ஒரு மானோலாக் [mono logue] அதாவது, பறையைக் கொட்டி, அம் முழக்கத்திற்கு ஏற்ப, ஒருவன் தனியனாய்ச் சரிதை பாடுதல் என்பதாம். இவ்வகையில், கவிதை நடை, உயர் நிலையிலும்! இடையிடையே உலக வழக்கு நடையிலுமாக அமைந்திருக்கும்.

சிலப்பதிகாரக் காப்பியம் இதனொடு ஒப்பாகக் கருதத்தக்கது. சிலப்பதிகாரம் ஒருவன் தனியனாக நின்று இசைக்கும் காப்பியம் என்பது ஒரு சிலரின் கருத்து என்பதைத் தமிழுலகம் நன்கறிந்த தொன்றாகும். மேலும், சிலப்பதிகாரக் காப்பிய நடை பெரிதும் மெங்சியாங் சரித நடையை ஒத்திருப்பதாகக் காணப்படுகிறது. கானல்வரி ஆய்ச்சியர் குரவை போன்றவை உலக வழக்கை அடிப்படையாகக் கொண்டவை பிற்பகுதிகள் உயரிய நடையில் அமைந்துள்ளன.[2]

தன் சிற்றூரை நோக்கி, நெடிய தரைச் செலவை, மெங்சியாங் மேற்கொள்ள உறுதிகொண்டு புறப்படுங் காட்சி கண்ட சீன கவிஞன் சிற்றடியும் மென்மை வாய்ந்த குறுமகளும் ஆய இவளுக்கு இரங்குகிறான்.[3] அதேபோல, சிலப்பதிகாரக் காவியத்தில் கண்ணகியின் துயர் கண்டு இரங்குவாராய் அடிகள் கவுந்தி வாயிலாக,

> பாடகச் சீறடி பரற்பகை உழவர்
> காடிடையிட்ட நாடுநீர் கழிதற்கு
> அரிதிவள் செவ்வி ...''[4]

என்று கூறுவார்.

சிலம்பில் கோவலன் மாதரி குடிலில், கண்ணகியைப் பிரியும் நேரத்தில், நெஞ்சு கலங்கி, ''எழுகென எழுந்தாய் என் செய்தனை[5]'' என்று புலம்பியபோது கண்ணகி, ''யாதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின், ஏற்று எழுந்தனன் யான் என்று''[6] கூறினாள்.

(தொடரும்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி

தாய் நாற்பது

இராமசாமி கோனார்

6. தந்தாள் இருக்கையில் தாயென்று போற்றாது
நைந்து மடிந்தபின் நாடறியத் — தந்திமெனக்
கொட்டி முழக்கிலென் ? கோதானம் பூதானம்
மட்டின்றிச் செய்தாலு மென் ?.

7. மென்பூங்கோல் கையேந்தி மெல்லத் தலையசைத்து
அன்பு வருவதுபோல் ஆங்குதன் — இன்பச்சேய்
முன்போந்து நற்பழக்கம் முற்றும் வளர்விடும்
அன்பன்றோ அன்னை யுரு.

8. பாலூட்டிச் சீராட்டிப் பக்குவத்தில் தொட்டிலிட்டுத்
தாலாட்டி நாடோறும் தங்கச்செங் — கோலேந்திக்
கன்னித் தமிழ்காத்த காவலர்போல் காத்தநின்
அன்னையைப் பேணல் அறம்.

9. மண்ணிற்குப் பாரமாம் மாந்தர்க்குள் நற்பதராம்
பெண்மை யழிக்கும் பெரும்புலியர்ம் — கண்ணினை
காக்கும் இமைபோலக் காத்திடும் நற்றாயைத்
தாக்கும் கயவரே தான்.

10. பெற்றவள் போற்றுவான் பேரில்லம் வாழ்வனே
நற்றா மரையாள் நனிநசைஇ — கற்றார் சொல்
தேவரே போந்த திருமகள் இல்லத்தின்
காவலராய் நிற்பரே காண்.

11. முடமூங்கை ஆனாலும் முன்பதை யீன்றாள்
உடல்பொரு ளாவி ஒருங்கே — விடத்துணிவாள்
தன்சேய்க்கா என்னேயத் தாயன்பு காக்கைக்கும்
தன்குஞ்சு பொன்குஞ்சு தான்.

12. தாயை இகழ்வான் தடிகொண்டு தாக்குவான் பின்
பேயோனாய் நின்றலைவான் பேசுங்கால் — தூய
பிறவிப் பயன்வேண்டில் பெற்றதாய் போற்ற
மறவாதே தொண்டுசெய் மன்.

13. தாய்ச்சொல் மறையென்பான் தாய்த்தொண்டே
தொண்டென்பான்
பாய்ச்சாதே நன்செய் பலன்தருமே — ஆய்ச்சியர் தம்
செய்தொழில் சீரோங்கும் செல்வனவன் வாழ்நாட்டில்
எய்தா வளங்கள்தான் என் ?

14. இனிய பொருளீந்தே இன்முகங்காட்டிக்
கனியே ! யமுதே ! யென் கண்ணே ! — நனிசுவைக்
கற்கண்டே என்றழைக்குங் கண்கண்ட தெய்வமாம்
நற்றாயைப் போற்றுவீர் நன்கு.

15. மாந்தராய்த் தோன்றிலென்? மன்னராய் வாழ்ந்துமென்?
சாந்தனையுங் கற்றுமென் ? சாற்றிலென் ? — தாந்தங்கள்
பெற்றாள் தளர்வயதில் பேணாதார் எஞ்ஞான்றும்
பற்றாரே பற்றற்றான் பற்று.

16. செய்யற்க சான்றோர் பழிக்கும் வினையென்று
வையத்தார்க் கோதும் நம் வள்ளுவனார் — மெய்மொழியில்
உம்மை கொடுத்த உயர்வுள்ளிப் போற்றுவரேல்
இம்மையே காண்பர் இறை.

17. சேயுற்ற நோய்நீங்கச் செல்லா மருந்தினையுந்
தாயுண்டு சேய்காக்குந் தன்மைக்கு — சேயிழையீர் !
என்னதான் கைம்மாறு எம்முறையி லாற்றிடினும்
அன்னவெலாம் போதா அதற்கு.

18. மழலைச்சொல் கேட்டிந்த மாநிலமும் ஈடோ
மழலைக்கே என்று மகிழ்வாள் — குழலொடு
சீரோங்கு யாழும் சிறப்பிலவாம் என்னுந்தாய்
பேரோங்கச் செய்வாய் பெரிது.

19. பேசும் உயர்தெய்வம் பெற்றவளின் வேறுண்டோ
மாசிலா அன்னை மனஞ்சோரப் — பேசுபவர்
ஆயிரங் கோயில்கள் ஆக்கிலென் ? போற்றிலென் ?
ஆயிரஞ் செய்தாலும் என் ?

உரை

செய்யுள் — 6

தந்தாள் இருக்கையில் தாய் என்று போற்றாது — தாங்கி இருந்து பின் இந்நிலவுலகத்தே வாழத் தந்தவளாகிய தாய் உயிருடன் இருக்கும் போது தாய் எனப்போற்றிப் — பேணாது,

நைந்து மடிந்தபின் நாடு அறிய — அதுபற்றி, அவள் உடலும், உள்ளமும் நைந்து நைந்து மாண்டநாள் உலகத்தார் அறிய, தந்திம் என கொட்டி முழக்கில் என் — ஆடம்பரமாகச் சாப்பாறைக் கொட்டுவதும், பல்லியம் முழங்குவதும் எற்றுக்கு ? கோதானம், பூதானம் மட்டின்றிச் செய்தாலும் என் — பின்னர் நிகழும் இறுதிச் சடங்கில் பசுக்கொடையும் நிலக்கொடையும் அளவின்றிப் பிறர் புகழுரை கருதி வழங்குவதும் பயனற்றதாகும்.

தந்தாள் — தாய் தாங்கி இருந்து, நிலவுலகிடைத்தந்தவள் ஆதலின் தாய், தந்தாள் எனப்பட்டாள்.

செய்யுள் — 7

மென்பூங்கோல் கையேந்தி — பிள்ளைப் பருவத்தே தன் சேய் சிறுகுறும்பு செய்யும் ஞான்று, மென்மையான பூக்கள் சுற்றப்பட்ட கோலைக் கையில் பிடித்தவண்ணம், மெல்லத் தலை அசைத்து — பையத் தலையசைத்துக் கொண்டு, அன்பு வருவதுபோல் ஆங்கு தன் இன்பச் சேய்முன் போந்து — அன்பு என்று சொல்லப்படுகின்ற ஒன்று பெண் வடிவில் வருவது போலத் தன் இன்பத்தின் திரண்ட உருவமாகிய குழந்தைக்கு முன் வந்து, நல்வழக்கம் முற்றும் வளரவிடும் — அச்சுறுத்தி எதிர்கால வாழ்வில் சேய்க்கு நலம் பயக்கும் நற்பழக்கங்கள் அனைத்தும் பெருகுமாறு செய்யும், அன்னை உரு அன்பு அன்றோ-அன்னையது வடிவம் அன்பின் வடிவமல்லவா ?

குணப் பொருளாகிய அன்பிற்குக் குணிப்பொருள் அன்னை என உணர்க. அடிக்க நேர்ந்தால் சேய்க்குத் துன்பம் தருமாதலின் அன்னை மென்பூங்கோல் கைக்கொண்டாள். தலை அசைத்தலாவது, அறிவை இன்பத்தால் மயக்கும் சேயின் செயல் கண்டு அகமகிழ்தல்.

செய்யுள் — 8

தங்கச் செங்கோல் ஏந்திக் கன்னித்தமிழ் காத்தக் காவலர் போல்—தங்கத்தால் செய்யப்பட்ட செங்கோலேந்தி நாட்டு மக்களைப் புரப்பதோடு, என்றும் இளமைத்தன்மை மாறாத தமிழ்மொழியாம் மகளைப் பாதுகாத்து வளர்த்த மூவேந்தர்கள் போல, நாள்தோறும் பாலூட்டிச் சீராட்டி...குழவிப் பருவத்தே நாள்தோறும் பசிக்குறிப்புணர்ந்து பாலூட்டி, கண்ணே, கண் மணியே எனச் சிறப்புரை வழங்கி, பக்குவத்தில் தொட்டில் இட்டுத் தாலாட்டி - உறக்கம் கொள்ளும் பக்குவம் அறிந்து, தொட்டிலில் கிடத்தி இன்னிசைகொண்டு தாலாட்டி, காத்தநின்

அன்னையை அறிந்து போற்று — பாதுகாத்து வந்த நின் அன்னையின் பெருமை உணர்ந்து தெய்வமாகப் போற்றுவாயாக.

தமிழ் காத்த காவலர்; மூவேந்தராம் சேர, சோழ, பாண்டியர் ஆவர். "மன்னிய மூவேந்தர் தம் மடி வளர்ந்த மகளே" — என்பர் கரந்தைக் கவியரசரும்.

செய்யுள் — 9

கண் இணை காக்கும் இமைபோல — இரு கண்கள் ஊறுபாடு எய்தாவண்ணம் பாதுகாக்கும் இரு இமைகள் போல, காத்திடும் நல்தாயைத் தாக்கும் கயவர் — பாதுகாத்து வளர்த்த நற்றாயைத் தாக்கும் இழிகுணத்தோர், மண்ணிற்குப் பாரமாம், மாந்தர்க்கு நல்பதராம் — இந்நிலமகட்கு ஓர் சுமையாவார்; நல்லறிவு பெற்றுமினிரும் மக்களுள் பதர் போன்றோராவர், பெண்மை அழிக்கும் பெரும்புலியாம் — உலகந்தழைக்க வரும் பெண் தன்மையை அழிக்கும் கொடிய புலியும் ஆவர்.

"இணை" — என்பது இரு மருங்கும் கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது.

செய்யுள் — 10

பெற்றவள் போற்றுவான் பேர் இல்லம் — தன்னைப் பெற்று வளர்த்த நற்றாயைப் போற்றுபவனுடைய பெருமை சான்ற வீட்டில், நல்தாமரையாள் நனி நசைஇ வாழ்வள் — செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் மனமுவந்து வாழ்வாள், கற்றார் சொல் தேவரே போந்து — கற்றுணர்ந்தோரால் புகழ்ந்து சொல்லப்படுகின்ற விண்ணவர்களே வந்து, அத்திருமகள் இல்லத்தின் காவலராய் நிற்பரே காண் — அத்திருமகள் வாழும் இல்லத்தினுடைய காவலாளிகளாகப் பாதுகாத்து நிற்பர், இதை உணர்வீர்களாக,

முன்னறி தெய்வமாகிய அன்னையைப் போற்றுகின்றானாதலின், அவன் இல்லம் செல்வம் பெருகி, தெய்வ மணங்கமழும் என உணர்க.

செய்யுள் — 11

முடமூங்கை ஆனாலும் முன்பு அதை ஈன்றாள் — பெற்ற பிள்ளை கை, கால் குறையுடைய ஊமையாக இருந்தாலும் முன்பு அதைப் பெற்றவள் தன் சேய்க்கு. உடல், பொருள், ஆவி ஒருங்கே விடத்துணிவாள் — தன் குழந்தையின் நலனுக்காகத்

தன்னுடைய உடல், பொருள், உயிர் அனைத்தையும் வழங்கத் தயங்காள், என்னே அத்தாய் அன்பு — தாய் அன்பின் மாண்பு தான் என்னே!, காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு தான் — காக்கைப் பேடைக்கும், கரிய நிறத்தையுடைய தன்குஞ்சு அழகிய தோற்றமுடைய பொன்நிறக்குஞ்சு ஆகும் அன்றோ?

மூங்கை — ஊமை. முடம் — கை, கால் குறை இஃது வேற்றுப் பொருள் வைப்பு அணி.

செய்யுள் — 12

தாயை இகழ்வான் — பெற்ற தாயை அவள் மனம் நோவ இகழ்ந்துரைப்பவனும், தடிகொண்டு தாக்குவான் — கொடிய கோல் கொண்டு அடிப்பவனும், பின் பேயோனாய் நின்று அலைவான் — பின்னர் பேய் வடிவில் இந் நிலவுலகத்தே அலைந்து திரிவான், பேசுங்கால் — உண்மை கூறுங்கால், தூய பிறவிப்பயன் வேண்டில் — சிறந்த மனிதப் பிறப்பின் பயனாகிய பிறவாமையைப் பெற விரும்பினால், பெற்ற தாய்போற்ற மறவாதே — நின்னைப் பெற்ற தாயைப் போற்ற மறவாதே, தொண்டுசெய் — பெற்ற தாய்க்கு உற்றவெலாம் புரிந்து பெரும் பயன் பெறுக.

முதல் தெய்வமாம் அன்னைக்குச் செய்யும் தொண்டும், பிறவிப் பயனை அளிக்கும் என்பதாம்.

செய்யுள் — 13

தாய்ச்சொல் மறை என்பான், தாய்த்தொண்டே தொண்டு என்பான் — தாய் கூறும் நன்மொழியே மறைமொழி எனவும், தாய்க்குச் செய்யும் தொண்டே சிறந்த தொண்டு எனவும் கொள்கின்றவன், நன்செய் பாய்ச்சாதே பலன் தருமே — நன்செய் நிலம் தனக்கு இன்றியமையாத நீர் பாய்ச்சுதலையும் வேண்டாது மிக்க விளையுளைக் கொடுக்கும். செல்வன் அவன் வாழ்நாட்டில் — தாய் போற்றும் செல்வனாகிய அவன் வாழ்கின்ற நல்ல நாட்டில், ஆய்ச்சியர் தம் செய் தொழில் சீரோங்கும் — ஆகாத்து, ஓம்பி, ஆப்பயன் அளிக்கும் இடைச்சியர் செய்கின்ற அத்தொழில் சிறப்புறும், எய்தா வளங்கள்தான் என்? — இன்னும் அங்கு வாய்க்கப்பெறாத வளங்கள் என்ன உள - இல்லை என உணர்க.

பெற்றவளைப் போற்றும் பெருந்தகை வாழ்நாட்டில், பருவ மழை தவறாதாகலின் பசுவளம் முதலியன மல்கும். ஆகாத்து,

ஓம்பும் தொழிலில் ஆய்ச்சியர் பெரிதும் பங்குகொள்கின்றாராதலின் ஆயர் செய் தொழில் எண்ணாது, ஆய்ச்சியர் செய் தொழில் எனக் கூறப்பட்டது. அறம் பெருகினாலன்றி ஆபயன் பெருகாது என்னும் சிறப்புப்பற்றி இத்தொழில் முதன்மையாக இங்கு சொல்லப்பட்டது எனக்கொள்க.

செய்யுள் — 14

இனிய பொருள் ஈந்தே இன்முகம் காட்டி — கண்ணிற்கினிய வண்ணப் பொம்மைகளையும், நாவுக்கினிய சுவைப் பண்டங்களையும் கொடுத்து, மலர்ந்த முகம் காட்டி, கனியே, அமுதே, என் கண்ணே, நனி சுவைக் கற்கண்டே என்று அழைக்கும். என் உள்ளத்திற்கு இனிமை 'தரும் கனியே, எனக்கு உயிர் வாழ்வு தந்த அமுதமே, என் பேரின்ப வாழ்விற்கு வழிகாட்டும் என் கண்ணே, எழில் கண்டு உள்ள உவகைதரும் சுவை மிக்க கற்கண்டே, என்று அழைக்கும், கண் கண்ட தெய்வம் ஆம் - என்று அன்பொடு நின்னை அழைக்கும் கண்ணால் காணத்தக்க தெய்வமாகிய, நற்றாயை நன்கு போற்றுவீர் — பெற்ற தாயை தளர்வயதில் உரிய முறையில் போற்றுவீர்களாக.

செய்யுள் — 15

தங்கள் பெற்றாள் தளர் வயதில் பேணாதார் தாம் — தங்களைப் பெற்றுப் பேணிய நற்றாயின் உடலும், உள்ளமும், உரையும், தளர்ச்சியுறும் முதுமைப் பருவத்தே போற்றாதவர்கள் தாம், மாந்தராய்த் தோன்றிலென் — நல்லறிவைப் பெறும் தகுதி வாய்ந்த மனிதராய்ப் பிறந்தாலும் அதனால் என்ன பயன் உண்டாம், மன்னராய் வாழ்ந்தும் என் — மண்ணுலகத்தை ஆளும் மன்னர்களாக வாழ்ந்திருந்தாலும் அதனால் என்ன பயன் உண்டாகும், சாந்துணையும் கற்றும் என் — சாகும் வரையிலும் உறுதிப் பயன் தரும் நல்ல நூல்களைப் படிப்பதாலும் என்ன பயன் விளையும், பற்று அற்றான் பற்று எஞ்ஞான்றும் பற்றா — இங்ஙனம் தாயைப் போற்றாதார் எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற பரம் பொருளை எப்பொழுதும் அடைய மாட்டார்.

மாந்து + அர் = மாந்தர். மாந்து - உட்கொள் ஏற்றுக் கொள். காண்டல், கேட்டல், சிந்தித்தல் மூலம் மெய்ப்புணர் வெய்திப் பிறவிப்பயன் எய்தும் நல்வாய்ப்புப் பெற்றவர் மனிதராதலின் மாந்தர் எனப்பட்டார்.

ஊனக் கண்ணால் காணத்தக்க தெய்வமாம் நற்றாயைப் போற்றாதார், ஊனக் கண்களுக்கெட்டா இறைவனை எய்தார் என்பதாம். மனிதப் பிறவியும், மன்னர் வாழ்வும், கற்கும் கலையும் பயனற்றுப்போகும் என உணர்க.

செய்யுள் — 16

சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க என்று — சான்றோர் பழித்தற்கு ஏதுவாகிய தீச்செயலைச் செய்தல் ஆகாது என வையக்கு உணர்த்தும் நம் வள்ளுவனார் — உலக மக்கட்கு அறிவுறுத்தும் நம் திருவள்ளுவப்பெருமான், மெய்மொழியில் உம்மை கொடுத்த உயர்வு உள்ளி — பொருளுரையில் "ஈன்றாள் பசி காண்பான் ஆயினும்" என உயர்வுச் சிறப்பும்மை கொடுத்துள்ள மாட்சிமையை ஆழ நினைத்து, போற்றுவரேல் — தன்னைப் பெற்றவளைப் போற்றுவார்களானால் இம்மையே காண்பர் இறை — இப்பிறவியிலேயே எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளை அவர்கள் காண்பார்கள்.

உள்ளல் — நீடு நினைதல், ஆயினும் —" என்ற சொல்லில் உள்ள "உம்மை" ஈன்றாளைப் போற்றல் தலையாய கடமை என்பதை உணர்த்தும் என உணர்க.

செய்யுள் — 17

சேயிழையீர் — செந்நிறக் கற்கள் வைத்து இழைக்கப்பட்ட அணி பூண்ட நங்கையே!, சேய் உற்ற நோய் நீங்க — தான் பெற்ற சேய் எய்திய நோய் அகலுவதற்கு, செல்லா மருந்தினையும் தாய் உண்டு சேய் காக்கும் — உளம் உவப்ப, வாய்க்குள் செல்லாத கசப்புச் சுவையுள்ள மருந்துப் பொருள்களையும், தாய் உட்கொண்டு தன் சேயைக் காப்பாற்றும், தன்மைக்கு, என்னதான் கைம்மாறு — தாய் அன்பிற்கு ஈடாக எத்தகைய கைம்மாறு எம்முறையில் ஆற்றிடினும்...பற்பல வழியில் பற்பல காலம் அச்சேய் பல செய்யினும், அதற்கு அன்ன எலாம் போதா அத்தாயன்பிற்கு அவையாவும் ஈடாகா.

செந்நிறக் கற்கள் — மாணிக்கம். இது ஒன்பது மணிகளுள் ஒன்று இழைக்கப்படுதலின் "இழை" எனப்பட்டது. இழைத்தல் — பதித்தல், கைம்மாறு — மாற்றுதவி. இளங்குழவி நோயுற்றால்

ஈன்றாளே மருந்துண்பாள், பாலூட்டுவாள் அவளாதலின் செவிலித்தாயாரும் உளரோ எனின், அவரும் இதில் அடங்குவர் எனக்கொள்க.

செய்யுள் — 18

மழலைச் சொல் கேட்டு — பெற்றவளாகிய தனக்கன்றி பிறர்க்கு விளங்காத மொழியைக்கேட்டு, இந்த மாநிலமும் ஈடோ மழலைக்கே என்று மகிழ்வாள் — இந்தப் பரந்து நிலவுலகமும் சேயின் குதலை மொழிக்கு ஒப்பாமோ எனத்தாய் மகிழ்ச்சி கொள்வாள், குழலொடு சீரோங்கு யாழும் — சிறந்த இசைக் கருவியாம் வேய்ங்குழலின் இனிய ஓசையுடன், சீர்மிகு யாழ் ஓசையும், சிறப்பு இல ஆம் என்னும் தாய் பேர் — சிறப்புப்பெற இல்லை என மதிக்கும் தாயினது புகழ், பெரிது ஓங்கச் — செய்வாய் - மிகுதியாக விளங்குதற்கு ஏதுவாகிய நற்செயல் களைச் செய்வாயாக.

மழலை — இளங்குழவி சொல்லும் சொல் "சீரோங்கு" — என்பதைக் குழலொடுங்கொண்டு கூட்டிப்பொருள் காண்க.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்" — என்பது தமிழ்மறை.

செய்யுள் — 19

பேசும் உயர்தெய்வம் பெற்றவளின் வேறு உண்டோ — மக்கள் முன்நின்று வாய்திறந்து பேசும் சீர்மிகு தெய்வம் பெற்றவளைக் காட்டிலும் வேறு உளதோ, மாசுஇலா அன்னை மனம் சோரப் பேசுபவர் — களங்கமற்ற தன் அன்னையின் உள்ளம் வருந்துமாறு கடிந்து உரைப்பவர்கள், ஆயிரம் கோயில்கள் ஆக்கல் என் — ஆயிரக்கணக்கில் ஆலயங்கள் கட்டினாலும் என்ன பயன் தரும், போற்றில் என் — முன்னறி தெய்வமாம் அன்னையைப் போற்றாது இறைவனைப் போற்றுவதால் மட்டும் என்ன பயன் உண்டாகும். ஆயிரம் செய்தாலும் என் — அன்றியும் ஆயிரக்கணக்கில் நற்செயல்கள் செய்தாலும் என்ன பயன் கிட்டும், யாவும் பயன்படா எனக் கொள்க.

மிகுதி பற்றி ஆயிரம் எனக் கூறப்பட்டது. தாயைப் போற்றாதார் திருப்பணியும், வழிபாடும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படா என உணர்க.

[தொடரும்]

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]			
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TB/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு டி. ரங்கமணி I.A.S. அவர்கள்
ஆணையர்,
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆய்வு
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர். சென்னை.
600 008

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌளி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

30 சன

3041

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் 9

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2019

துணர் : 62 | விபவ — மார்கழி | மலர் : 9

டிசம்பர் — ஜனவரி — 1989

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

உள்ளுறை

		பக்கம்
1.	எதிர்த்தே தமிழ் வளர்த்த க. நா. சுப்ரமண்யம் புலவர். கா. மா. இல. பிரகாசம்	... 382
2.	கண்ணகியும் மெங்சியாங் நூவும் பேராசிரியர் கோ. வேங்கடாசலம்	 392
3.	கலப்பு மணம் ! கவிஞர் கண்ணிமை	... 396
4.	நீல. பத்மநாபனின் "தேரோடும் வீதி" பா. செல்வபாண்டியன்	... 400
5.	அணி இலக்கண ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள் டாக்டர். இ. சுந்தரமூர்த்தி	... 402
6.	ஏபிரகாமும் சிறுத்தொண்டரும் நா. ஆறுமுகம்	... 416
7.	தாய் நாற்பது இராமசாமி கோனார்	... 421

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர். தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்., பிஎச்.டி.,
இயக்குநர். தமிழ்வளர்ச்சித்துறை, சென்னை.

,, முனைவர் சி. பாலசுப்பிரமணியன், எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர். மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ. முத்துப்பிள்ளை, B.A.,
சென்னை.

,, முனைவர். ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர், செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம்.ஏ., ஏ.எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

எதிர்த்தே தமிழ் வளர்த்த க. நா. சுப்பிரமண்யம்

புலவர் கா. மா. இல. பிரகாசம்
— இளங்கலை (ஆங்கில இலக்கியம்)
186-பி, கீழவீதி, தஞ்சாவூர்.

இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய வரலாறுள்ள தமிழ்மொழியில் திறனாய்வு என்னுந்துறை இப்போது (நாற்பது-ஐம்பதாண்டுகளுக்கு முன்னர்) தான் தோன்றி வளர்ந்துள்ளது என்பது உவப்பான செய்தியல்ல. தமிழிலக்கியத் திறனாய்வு வ. வே. சு. ஐயரவர்களின் மூலமாகத்தான் முதலிற் பிறந்தது என்பர் அறிஞர். கம்ப இராமாயணத்தை உலகப் பெருங் காப்பியங்களுடன் ஒப்பிட்டு நந்தமிழின் சீர்திறத்தைத் தமது சிறந்த திறனாய்வின் மூலம் உலகத்தின் எம்மொழிக் காப்பியத்துக்கும் இல்லாப் பெருஞ்சிறப்பை வ. வே. சு ஐயர் எடுத்தியம்பினார். இவரது திறனாய்வின் மூலம் தமிழின் திறத்தின் உயர்வில் மாமணி ஒன்று ஒளிவீசிற்று. அதுதான் ஒப்பிலக்கியத்திறனாய்வு எனும் புதியதொரு துறை. இத்துறை மேவிய பல பேறறிஞர்கள் இன்று பல்கலைக் கழகந்தோறும் தமிழுக்கு அணிபல புனைந்து அளித்து வருகின்றனர். திறனாய்வென்பது அகன்றதொரு பெரும் அறிவுக் கடலாம். இதனைக் கடந்து இன்பம் நுகர்வோர் சிலரே என்பது எம் மொழியிலும் காணக்கிடைக்கின்ற ஒன்றே. வ. வே. சு. ஐயருக்குப் பின்னர் தமிழில் ஒப்பிலக்கியத் திறனாய்வு வளர்ந்துள்ளதெனினும் இலக்கியத் திறனாய்வு எனும் விரிவு கொண்ட பெருந்துறை, இன்று வரையிலும் சிறுத்தே காணப்படுவது எந்த இந்திய மொழியிலும் வழக்காறாகவேயுள்ளது. இதுபற்றி எம் மொழி அறிஞரும் வருந்துதலிலர். இலக்கியத் துறையில் திறனாய்வென்பது நுணிதின் நுண்ணிதேயாயின் அதிலும் நுண்ணிய அணுவைப் புரட்டி மெய்ப்பாடுகளை அறிவு சார்ந்த ஆய்வுணர்வுடன் வெளிப்படுத்தும் ஆய்வறிவுத்திறனாய்வியல் எனும் 'சைண்ட்டிஃபிக் கிரிட்டிசிசம்' மற்றும் மரபுவழித் திறனாய்வியல் எனும் 'கிளாசிகல் கிரிட்டிசிசம்' வரலாற்றியல் திறனாய்வு எனும் 'ஹிஸ்டாரிகல் கிரிட்டிசிசம்' என்பன போன்ற முப்பது வகைத்திறனாய்வு வகைகள் உண்டென்பர் மேலைநாட்டறிஞர், இவை தமிழில் வளர்ந்து வருகின்றன. என்றாலும் எந்த ஒரு வகையிலும் சேராது புதிய துறையொன்றை வகுக்காது பழைய வழிமுறைகளை

ஒதுக்காது சுவைத்தல் - அறிதல் என்ற இரு முனைகளையே அடிப்படையாய்க் கொண்டு தனது சுய தேர்வை முதனிலைப்படுத்தி எம்மொழியிலும் தோன்றாததொரு குறிப்பியல் திறனாய்வு முறை ஒன்றை (இதனையும் வரக்கவியலாது -இலக்கண வரை முறையற்றது) முன்னவர் - மணிக்கொடிக்கால எழுத்தறிஞர்- புதின இலக்கிய ஆசிரியர். க. நா. சுப்பிரமணியம் அவர்கள் தமிழிலக்கியத்திற்குத் தந்துள்ளார்கள், க. நா. சு. அவர்களது இம்முறை-வரையற்ற நுண்மை சேர் குறிப்பியல் திறனாய்வு ஆங்கிலமொழி செருமானியம் மற்றும் பிரஞ்சு, இதர ஐரோப்பிய பன்னாட்டு இலக்கிய வழிமுறைகளிலும் காணக்கிடைப்பது அரிது. எனவே பைந்தமிழிலும் இது புரிந்து கொள்ளப்படாத ஒன்றேயாம். இதன் மூலமுதல்வராய்த்திகழும் க. நா. சு. அவர்கள் தமது திறனாய்வுநிலையை இவ்வண்ணம் குறிக்கிறார்கள்.

"திறனாய்வில் நான் நம்பிக்கையற்றவன். யானொரு திறனாய்வாளனல்லன். தமிழில் வேறுயாரும் யான் கருதும் இத்தன்மைக்கான திறனாய்வுக்கலையை இயற்றாமையான் யான் இப்பணியில் ஈடுபட நேர்ந்ததேயன்றி யான் ஒரு படைப்பாளன் என்று மட்டுமே என்னை உணர்வேன். என்றாலும் மிகப்பெரிய இலக்கிய வரலாறுள்ள தமிழ்மொழியில் பல்வேறு புதுத் துறைகளும் சிறப்புற நெறிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலே யான் கண்டிப்பானவன். புதிய இலக்கணம் உருவாக வேண்டும். புதிய தமிழ்மொழியே வடிவமைக்கப்பட வேண்டும். இன்றைய உலகின் இன்றியமையாப் புத்தார்வ எழுச்சிகள் யாவும் நமது மொழியில் எந்த மரபையும் மீறியும் இன்று புதிதாய்ப் பிறக்கவேண்டும் என்பதிலே யான் ஈடுபாடு கொண்டவன் என்பதனாலேயே இந்திய மரபியலறிஞர்களிடமும், முறையுறக்கற்ற ஐயந்திரிபற விளங்கும் மொழியியல் கருத்தாளர்களிடமும் நிரம்பிய கருத்து வேறுபாடுகளையும் எதிர்ப்புகளையும்- புதிய தலைமுறை எழுத்தாளர்களின் வெறுப்பையும் ஒறுப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை எனக்குத் தமிழிலக்கியத்தில் வாய்த்தது, என்றாலும் ஐம்பதாண்டுக் காலமாகத் தமிழில் பின்வாங்காது எனது நம்பிக்கைகளையே யான் வடிவமைத்து வந்துள்ளேன். எனது திறனாய்வு ஒருவகையில் எனது தனிப்பட்ட கருத்துக்களின் தன்மைத்துவமான எண்ணங்களேயாம். எனவே என் கருத்துக்களே திறனாய்வென்று யான் கூறுவதாய்க் கருதலாகாது. எனக்குமுன் தமிழில் பலரும் திறனாய்வுக் கருத்துக்களைக் கூறி இருக்கின்றனரேயன்றி திறனாய்வென்னும் கலைவடிவத்தைத் தங்கள் தன்மைத்துவம்

கொண்டு நிறைவு செய்யவில்லை. திறனாய்வு வெறும் முறைகளினால் தோற்றம் பெறுவது அல்ல. இலக்கியத்தைப்போல் திறனாய்வும் உணர்வுகளினால் கலை உருவம் பெறவேண்டும். அதே நேரத்தில் அந்த உணர்வுகளின் பின்புலத்தில் அதன் வேர்கள் அறிவை அடிப்படையாகக் கொண்ட உணர்வுகளினால் சமைந்திருத்தல் வேண்டும். இது உலக மொழிகளில் வெகு சிலவற்றிற்குத்தான் வெற்றி கொள்ள முடிந்திருக்கிறது. எனது கட்டுரைகள் திறனாய்வல்ல. அதற்கான முற்போக்கு மட்டுமே. ஏனெனில் எனது கருத்துருவங்கள் இந்த இலக்கை நோக்கியிருப்பதால் இலக்கியமாகின்றன. யான் சுவைஞன் என்பது முதல்நிலை. அடுத்துச் சுவையறிஞன் எனும்நிலை. அடுத்து அறிந்ததை இன்னொருவருக்குப் பரக்க உணர்விப்பது எனும் மூன்றாம் நிலை. இம்மூன்று நிலைகளும் சேர்ந்த கூட்டுணர்வின் படைப்பே எனது இலக்கியத்திறனாய்வு முனை. இவற்றில் எனக்குத் திறனாய்வாளன் என்கிற நிலையில் நம்பிக்கையற்றுப் போனாலும் தமிழிலக்கியத்திற்கு முதற்குரலாக வேறும் நிலைக்கும் இப்பணியைச் செய்து வருகிறேன்”— (ஆசிரியர் தந்த நேர்காணலிலிருந்து ஒரு பகுதி)

இவ்வுரையிலிருந்து அறிஞர் க.நா.சு. அவர்களது அடிப்படைக் கருத்தோட்டமும் அவரது கலை நிலையும் தனித்துவமும் தெள்ளெனப் புரியும். திரு. க.நா.சு. அவர்களது இந்தத் தனித்த போக்கும், எரன்முறையும் பெரும்பான்மையினரால் புரிந்து கொள்ளப் படாமலேயே போயிற்று. திறனாய்வுத்துறை நண்பர்கள் பலரும் மேற்கூறிய இத்தகுதிறனாய்வு முனையைத் தாங்களறிந்த எம் மொழியிலும் காணப்பெறாததால் இப்படி ஒருமுறை - இப்படி ஒரு துறை இருக்கலாகாதென்றும், இப்படி எங்கே இருக்கிறதென்றும் ஒரு பழைய நோக்கிலேயே, தாங்களுழல்வதை அறியாது தாங்களைத் தாங்களே திறனாய்வு முடிவாளர்களாக முடித்துக் கொள்கிறார்கள். இது ஒரு வளரும் துறை. க.நா.சு. அவர்கள் சுட்டுகின்ற இலக்கியத் திறனாய்வு ஒரு வகையிலும் அடைவுறாது, காரணம் அது அத்தகு நோக்கத்துடன் பிறக்கவில்லை. க.நா.சு. அவர்கள் எதிப்புநிலையில் சில கருத்துக்களைக் கலை வடிவ அமைப்புடன் ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தைப் பற்றிச்சாரமாகச் சில சொல்லிப்பல தூண்டும் துண்மைசேர் நூதன முறையைத் தமிழிலக்கியத்திற்குத் தந்திருக்கிறார். இந்தப் புதியவழி இலேசானதல்ல. எதிர்ப்பிலிருந்தே இவைகளை வெற்றி முகம் காண வைக்கிறார் திரு. க.நா. சுப்பிரமணியம் அவர்கள். அவரே ஒரு கவிஞராகவும்,

புதினப் படைப்பாளராகவும், சிறுகதைச் சிற்பியாகவும், கட்டுரை மணியாகவும், காப்பியாசிரியராகவும், மொழிபெயர்ப்பு வல்லுனராகவும், பலமொழி, அறிந்த பேராசானாகவும், பல்லாண்டு பல்லிலக்கிய ஆசிரியராக வாழ்ந்த பலமொழிக் கலைஞர்களுடன் பழகி வாழ்ந்த வாழ்வியல் கலைஞராகவும் இருந்து இந்தத் திறனாய்வுத்துறை பல்வேறுபட்ட திறமைகளின் சாரமாய் அமைய மிகவும் உழைத்திருக்கிறார்கள் என்பது இதன் காரணமாகிறது. அவர் தமது (1988) கடைசிக்காலத்தில் தினமணிக்கதிர் ஏட்டில் இலக்கியக் கண்ணோட்டம் என்ற தொடரில் எழுதி வந்த பல கட்டுரைகள் அறிஞர் பலருக்கும் பல்லாற்றான கருத்து வேறுபாடுகளுக்கு இடம்தந்ததன்காரணம் இந்த அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாமையால்தான்.

க. நா. சு. அவர்கள் 82 ஆண்டுகள் வாழ்ந்தவர். உலகப் பிறமொழி இலக்கியங்களில் எழுபத்தேழு புத்தகங்களைத் தமிழில் ஆக்கி இருக்கிறார். நான்கு சிறுகதைத் தொகுதிகள், இரு கவிதைத் தொகுப்புகள், சுமார் இருபது புதினங்கள், திறனாய்வுக் கட்டுரை நூல்கள் ஐந்து, உலக இலக்கிய ஆசிரியர்கள் அறிமுக வரிசை மூன்று, உலகத்துச் சிறந்த புதினங்கள் வரிசை இரண்டு, உலகத்துச் சிறந்த தத்துவாசிரியர்கள் வரிசை இரண்டு, நாடகங்கள் இரண்டு, மொழிபெயர்ப்பு நாடகங்கள் இரண்டு, ஓரங்க நாடகத் தொகுப்பு ஒன்று, இலக்கிய உரையாடல் நூல் ஒன்று, இந்திய இலக்கிய ஆசிரிய, அறிஞர்கள் அறிமுகம் ஒன்று, தமிழ்நூல் அறிமுகம் “படித்திருக்கிறீர்களா?” தொடர் மூன்று நூல்கள், பாரதியின் வசன கவிதைப் பதிப்பு ஒன்று, மொழிபெயர்ப்புக் கட்டுரைத் தொகுதி ஒன்று, ஆங்கில மொழியில் சிலப்பதிகாரம், திருக்குறள் விரிவுரை, இந்திய இலக்கியம் ஆகிய மூன்று நூல்கள், மொழிபெயர்க்கப்பட்டன. இந்தியச் சிறுகதைத் தொகுப்பு, சிறந்த இந்திய நாவல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆகியவற்றை வெளியிட்டிருக்கிறார். மலையாளத்தில் வெளிவந்திருக்கிற சிறந்த படைப்புகளைப் பற்றிய பிரசுரம் ஒன்றும் ஆங்கிலத்தில் அவரால் வெளியிடப் பட்டிருக்கிறது. இந்திய சாகித்திய அகதமியின் தகுதிக் கருத்தாளராகவும், கருத்துரையாளராகவும், இந்தியத் திரைப்படப் பரிசுத் தேர்வுக் குழுவின் மாநில மற்றும் மைய அரசுகளின் தகுதிநிலை நடுவராகவும், புதுச்சேரிப் பல்கலைக் கழகத்தின் வருகை நிலைப் பேராசிரியராகவும் பணி ஆற்றினார். கீழை நாடுகள் மற்றும் மேலை நாடுகளிலும் விரிவாகப் பயணம் செய்ததுடன் பிரான்சு,

செருமனி, இத்தாலி, சப்பான், செக்கோசுலோவேகியம் ஆகிய நாடுகளில் பல மாதங்கள் தங்கியிருந்து சொற்பொழிவுகள் நடத்தித் தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். இவரது அரிய படைப்புகள் பலவும் கையெழுத்துப் பிரதியாகவே — வெளியிடப் புறப்பாடு நிலையில் — உள்ளன. அவற்றில் சிறப்புநிலைத் தகுதி பெற்ற சிலவற்றைக் குறிப்பிடுகின்றோம்.

புதினப் பிரிவின் கீழ் ''திருவாலங்காடு'' என்ற நான்கு பொத்தகங்கள் ''வக்கீல் அய்யா'', ''நடுத்தெரு'', ''சாதிமுத்து'' போன்றவை. சிறுகதைப் பிரிவில் அய்ந்து. காப்பியம் ஒன்று, கவிதைத் தொகுப்புகள் இரண்டு, ஏராளமான திறனாய்வுக் கட்டுரை நூல்கள், பல மொழிபெயர்ப்பு நூல்கள். தமது தன் வரலாறு முழுவதையும் நாட்குறிப்பு வடிவத்தில் இற்றைக்கு ஏறத்தாழ நாற்பதாண்டுகட்கு முன்னமிருந்து, நாளொன்றுக்குப் பதினைந்து பக்கங்கள் முறையே இலக்கியம், சமுதாயம், அரசியல், மொழியியல், சொல்லியல், கலை அநுபவம், ஆன்மீகம், அநுபூதி போன்ற எண்ணற்ற அறிவின் தேட்டங்களை ஏராளமாக எழுதிக் குவித்திருக்கிறார். அறிவு, ஆய்வு என்ற இரண்டு நிலைகளில் கலைஞர். க. நா. சு. அவர்களின் சாதனைகள், வெற்றிகள் கணக்கில.

இத்தகு பேராளர் ஒருவரைப் பற்றிய நினைவைச் சீர் செய்யும் முகத்தான் இக்கட்டுரை முகப்பில் முகமன் கூறினேன். திரு. க.நா.சு. அவர்கள் அப்பழுக்கற்ற வாழ்க்கையை வாழ்ந்தவர். கொள்கைக் குன்று, அஞ்சா நெஞ்சம் கொண்ட ஆற்றலின் பேருரு. யாருக்காகவும் தமது இலக்கிய நம்பிக்கைகளையும் அரசியல் வரைமுறைகளையும், எண்ணங்களின் ஏற்ற முடிவுகளையும் கைவிடாதவர். தமிழ் மொழிக்காய் ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகள் பிறமொழி அறிஞரிடையே, பிறமொழி மாநிலங்களிடையே தமிழின் தனித்த குரலாய் வாழையடிவாழையாய் வந்த இரண்டாயிரம் வருடத்து இலக்கியச் சான்றாய் வாரிசாய் தில்லியில் அரசிலக்கிய வட்டங்களில் முழக்கி வந்தவர். பல பதவிகளைத் தூசியாய்க் கருதி அமுங்குப் பிடிவாதம் பிடித்து ஒவ்வொரு நிறுவனங்களிடமும், ஒவ்வொரு அமைப்புகளிடமும் தனது நீதிக்காய்ப் போராடியவர். இவரது கருத்துக்களினால் முரணுற்றார் தமிழிலக்கிய மற்றும் சமுதாயத் துறையில் வெகுசிலரே, தஞ்சை மண்ணை உயிரெனக் கருதி அதன் பண்பாட்டில் தம்மையிழக்கும் நுண்மையாளர். அரை நூற்றாண்டுக்கும் மிகுதியான பொருதியான இலக்கிய

வாழ்வுடைய திரு. க.நா.சு. அவர்கள் காலமெல்லாம் விரும்பியது தமிழன் முன்னேற்றம் ஒன்றே. தமிழ்க்காதல் மிகக் கொடிது. தமிழறிஞரிடையே வறுமையும் புலமையும் இணைந்தே நிற்பது காண்பதற்கு அற்புதமான பார்வை பெறும். தமிழின் பாற் பற்றுக் கொண்டவர்களில் இருவகையுண்டு. தமிழைப் புகழ்ந்தே அதை உயர்த்துவோர் ஒருவகை. குழந்தையைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டி உயர்த்துவது போல் தமிழினைப் புகழ்ந்தே உயர்த்தி ஏத்துவது ஒருவகை. திரு.க நா சு அவர்கள் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பேரானராவார். தட்டிக் கொடுத்த குழந்தை உருப்படாது ''சொல்லிக் கொடுத்த சொல்லும், கட்டிக் கொடுத்த சோறும் சுவைக்குதவாது; காரியத்துக்குதவாது'' ''என்மனார் புலவர், திரு. க நா சு. அவர்கள் தமிழைக் கண்டிப்பதை இடித்துரைப்பதைத் தம் வாழ்நாளின் பெரும் பணியாய்க் கொண்டிருந்தார். மிகுதிக்கண் மேற்சென்டிருத்தாற் பொருட்டு, என்றான். எம் குல முதல்வன் வள்ளுவனும் தமிழினத்தின் குறைகளை மிகப் பெரும் கறைகளாகவே தமது கட்டுரைகளில் சாடிவந்த திரு. க. நா. சு. அவர்களின் எதிர்மறைப் பண்பு எதிர்ப்புகளுக்கு எதிர்ப்பை இலக்கியமாக்கிய அரிய பண்பாகும். இதனைத் தமிழறிஞர் உணர்ந்தாரிலர். கருத்து வேறுபாடுகளுக்காகப் பகை வளர்க்காத நனிநாகரிகத்தோடு நெஞ்சிற்பட்ட கருத்தை எந்த கட்டத்திலும் யார் முன்னிலையிலும் அஞ்சாமல் உரைத்த தமிழறிஞரவர்.

தமிழில் க. நா. சு. அவர்களின் கருத்துக்களின் தீவிரத்தைச் சரிவர உணராத அறிஞர் பலரும், அவரைத் தவறாகவே புரிந்து கொண்டனர். இன்னல் பல விளைவித்தனர். அவர் பணிகளுக்கு இடையூறு தந்தனர். வறுமை-பிணி-ஏமாற்றம்-மூப்பு-ஆதரவின்மை என்ற ஐந்து நெருப்புகளிடையே நாற்பதாண்டுக்காலம் தன்னந்தனியனாய் நின்று அவர் விளைவித்த விளைச்சல் தமிழில் மிகப் பெரும் பங்கு வகிக்கும். எதிர்கால இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும். அவரது திறனாய்வு முடிபுகள் இலக்கியப் பட்டியல்கள் எதிர்கால வரன்முறை கூறும் தொலைநோக்கு மதிப்பீடுகள் ஆகியவை தமிழறிஞர் பலரையும் துன்புறுத்தும் பான்மை கொண்டவையேயாயினும் அவற்றின் தீவிரமான உண்மை மற்றும் தீரம் மறக்கற்பாலதன்று, க. நா. சு. அவர்களது இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் பலவற்றிலும் பொதுவாகக் காணப்படும் குறைபாடு விரித்துரைக்காத காரியமற்ற தனிப்பட்ட கருத்துக்களேயாம்.

இவற்றை ஒப்புக் கொள்பவர்களும் இருக்கலாம். மறுப்பவர்களும் இருக்கலாம். ஆனால் இக்கருத்துக்களைக் க. நா. சு. அவர்கள் எக்காரணத்தாலும் விரித்து அலசி ஆழ்ந்து பரவி ஆய்வதில்லை. சில அழுத்தந்திருத்தமான கருத்துக்களை மேற்கோள் ஏதுமில்லாது விரிக்கிற் பெருகுமென்றஞ்சி சவுக்கடிச் சுழற்றல்களாய்க் கருத்தை மேவிவரும் கற்போரின் மேல் சார்த்திவிட்டு ஒதுங்கிவிடுவதே அவரது தனித்திறனாம். இதைக் க. நா. சு. அவர்களின் பெருங்குறையாக எப்பொழுதும் தமிழறிஞர் பலரும் உவந்து, சொல்லி வருகின்றனர். (உ.ம்) வெங்கட்ட சாமிநாதனார், முனைவர் க. கைலாசபதி மற்றும் ரா. பி. சேதுப்பிள்ளை, மயிலை, சீனி வேங்கடசாமி, ஏ.ஜே. கனகரட்னா, முனைவர் கா. சிவத்தம்பி, மு. அருணாசலம் தி. க. சிவசங்கரனார், ஆர். கே. கண்ணனார் போன்ற பல்துறைத்திறனாய்வாளர்கள் இக்கருத்தை ஒப்புவார்கள். ஆயின் முனைவர். திரு. க. நா. சு. அவர்கள் தமது திறனாய்வு இலக்கிய வாழ்வின் துவக்கத்திலிருந்தே இதனைப் பலமுறை பலவிதங்களிலும் தமது திறனாய்வுக் கட்டுரைகளில் தெளிவு செய்திருக்கிறார். "எதையும் அலசி, பிரித்து, விரித்து ஆய்வது எனது திறனாய்வு முறையல்ல. எனக்கு அதில் நம்பிக்கையும் கிடையாது. அலசல் விமர்சனம் (அனாலிடிகல் கிரிட்டிசிசம்) எனது வழியன்று. யான் தரும் பட்டியல்கள் தற்காலிகமானவையே, இரக்கம் கருதி சில இலக்கிய ஆசிரியர்களை யான் இப்பட்டியலில் சேர்த்திருந்தாலும் இவர்களது திறமையால் இவர்கள் நிலைபெற்றிருந்தாலும் - காலம் என்னையும் மீறி அவர்களது பெயர்களைத் தமிழில் ஈவு இரக்கமின்றி அடித்து ஒழித்து விடும். எனவே எனக்கே தெரியாத ஒன்றை யான் எங்ஙனம் திறனறிந்து ஆய்வது? எனவே எனது திறனாய்வு முறை குறிப்பியல் நடைமுறையைச் செயல் முறையாகக் கொண்டது. சில குறிப்பிட்ட இலக்கியப் படைப்புகளைக் குறித்துக் குறிப்பால் உணரவைக்கும் முறையே எனது எழுத்து" என்பார் க. நா. சு. அவர்கள். எனவே அவரது கருத்துகளின் தீவிரத்தால் சற்றே அயர்வுண்ட நமது அறிஞர்கள் க. நா. சு. அவர்களின் நோக்கத்தைத் தவறவிட்டு விடுகிறார்கள். "திருக்குறள் ஒரு முதனூலல்ல, ஒரு மொழிபெயர்ப்பே, தமிழின் தொன்மை கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. தமிழில் காம நூலில்லை, இருந்ததுமில்லை, தமிழில் எந்தக் கலையும் தமிழாக இல்லை. பேராசிரியர்களுக்குக் கலையுணர்வே கிடையாது போன்ற அவரது அதிரடிக் கருத்துக்கள் தமிழ்

இலக்கிய அறிஞரிடையே பலத்த சூறையைப் பலகாலும் கிளப்பியிருக்கிறது. பேராசிரியர், எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுக்குக் கால முடிவுகளைப் பற்றி அவரது தவறுகளை இன்றுவரையில் தமிழறிஞரும் ஓயாது மறுப்பொழுதி வருவதே போன்று க. நா. சு. அவர்களது அதிரடிக் கருத்துக்களுக்குப் பலகாலும் பதில் கூறவேண்டிய சூழலிருந்து வரும். இது க. நா. சு. அவர்களின் குறிப்பியல் முறைத் திறனாய்வால் நேர்ந்துள்ள விளைவாகும். இதன் நன்மைகளைக் காலம் வெளிப்படுத்தும். மாற்றுக் கருத்துக் கொண்டுள்ள எதிர் விளைஞரிடமும் க. நா. சு. அவர்கள் நாகரிகத்துடன் அமைதியுடன் பழகி வந்தார். கலைஞர் மு. கருணாநிதி போன்ற தமிழ்விடுதலையாளர்களும் திரு. க. நா. சு. அவர்களால் சரியாகவே மதிப்பிடப்பட்டனர். அதே நேரத்தில் எவர் பார்வையிலும் படமுடியாத தொலைவிலிருந்த தமிழறிஞர், திரு. ஆண்டி. சுப்பிரமணியம் அவர்களைப்பற்றியும் கருத்துகள் கூறிவந்தார். இருபது முப்பது ஆண்டுகளுக்குப் பின் க. நா. சு. அவர்கள் தமிழகம் திரும்பிய போது மீண்டும் இலக்கியச் சூறாவளி அவரைப் பற்றிக் கொண்டது. தமிழகத்தின் எல்லா ஏடுகளும், மீண்டும் க. நா. சு. வைத் தமிழர் முன் புதுமுகமாய்க் கொணர்ந்து நிறுத்தின. க. நா. சு. இந்நிலையையும் தவறவிடாது தமிழை-தமிழரை-தமிழரது வாழ்வை அவர்களது பத்திரிகையை-மேடையை - தரத்தை - சமுதாய, நம்பிக்கைகளை ஓயாது மதிப்பீடு செய்தார்; எழுதிக் குவித்தார். குறிப்பாக முந்நூற்றாண்டு வரலாறுள்ள தமிழ் இதழியலை அதன் இதழ்கள் ஒவ்வொன்றையும்-வெற்றி பெற்றுத் திளைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஏட்டையும் முதன்முறையாக மிகக்கடுமையாக வெளிப்படையாக மதிப்பிட்டுக் கட்டுரைகளைத் "துக்ளக்" ஏட்டில் எழுதி வந்தார். இதைப்போலவே இக்கட்டுரைகளால் தமிழ் இதழ்கள் அத்தனையின் எதிர்ப்புகளையும் பெற்றுக் கொண்டார். ஓயாது ஒழியாது இலக்கிய மேடைகளில் வழக்கம் போல் ஆணித்தரமான கருத்துக்களுடன் பலரையும் எதிர் கொண்டார். எழுபத்தேழு, எழுபத்தெட்டுவயது காலத்திலும் ஓயாது தமிழகமெங்கும் தனியே சுற்றினார். அயராது மேடைகளில் திறனாய்வுக் கருத்துகளைச் சாதாரண மனிதர் முன் வைத்தார். ஓவியங்களைப் பற்றி ஓவியக்காட்சிகளில் பேசினார். கட்டுரைகளெழுதினார். "இந்து", "எக்ஸ்பிரஸ்" போன்ற ஆங்கில நாளேடுகளில் ஓயாது தமிழைப் பற்றி எழுதினார். தினமணி இதழில் அவர் எழுதிய கட்டுரைகள் இன்னும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சாதாரண வாசகர்

முதல் மெத்தப்படித்த ஆய்வறிஞர்கள் வரை ஒவ்வொரு இதழிலும் ஓயாது க. நா. சு. அவர்களுக்குப் பதிலெழுதி வந்தார்கள். இதுபோல் தமிழின் எல்லாத்தரத்து மக்களையும் எட்டிய திறனாய்வாளர் வேறெவருமிலர். இலக்கிய மேதை க. நா. சு. அவர்கள் தமது இறுதி மூச்சு வரை சொல்லிக் கொண்டிருந்த மற்றொரு குறிப்பு "தமிழில் எல்லாத்துறையினரும் தங்களுக்கென ஒரு சாதியையும், தங்களுக்கென ஒருகட்சியையும் தங்களுக்கென ஒரு இயக்கத்தையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் மதங்கள் கூட தங்களுக்கென சங்கங்கள் ஆரம்பித்துள்ள காலமிது எதிர்ப்பிலேயே வாழ்ந்த — வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழுக்கு இயக்கமிருக்கிறதா ? அதிலும் இலக்கியத்துக்கு ஒரு இயக்கம் மிக மிகத் தேவை" என்பதாகும். இது மிக மிக முக்கியமான பணியாகும். இதனைச் செயற்படுத்தவே கடைசி மூன்றாண்டுகள் க. நா. சு. தமிழகமெங்கும் ஊர் ஊராக அலைந்தார். 1988 ம் ஆண்டு நவம்பர் 5ம் தேதி அன்று தனது தளர்ந்த நோயுற்ற நிலையிலும் தளராத மனவலிவுடன் தமிழின் மூதறிஞர் வ. ரா. வின் நூற்றாண்டு விழாத் துவக்கத்தைத் தமிழகத்திலேயே முதன் முறையாகத் துவக்கி தஞ்சாவூர் சும்மா இலக்கியக் கும்பலினர் ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். இதுவே அவர் பங்குகொண்ட இறுதி இலக்கியக் கூட்டமாகும்.

தமிழில் மிகவும் மாறுபட்ட எதிர்ப்புக்குரலாய் அரை நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாகச் செயல்பட்ட க. நா. சு. 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 16 இல் (மார்கழி 1 ம் தேதி) தில்லியில் காலமானது தமிழ் இலக்கிய உலகத்தை எந்த வகையிலும் பாதிக்கவில்லை என்றாலும் பிறமொழி பேசும் மாநிலம் அத்தனையும் தமிழறிஞர், க. நா. சு. வின் மரணத்திற்கு அஞ்சலி யுரைத்து இரங்கற்கூட்டமும் நடத்தினர், தமிழிலும் சென்னையில் வருந்தற்கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. என்றாலும் எல்லாத் துறையினரையும் தனது கடுமையான கருத்துகளினால் எதிர்த்தே தமிழ் வளர்த்த க. நா. சு. வின் எதிர்வினை ஆண்மை தமிழில் எழுத்தாளர் புதுமைப்பித்தனுக்குப் பின்னர் வேறு யாரிடமும் அமைவுறக் காணவில்லை. வாழ்நாளில் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாய்த் தகப்பன் சொத்தில் வாழ்ந்தவர் என்று தமிழறிஞரால் திறனாய்வு செய்யப்பட்ட க. நா. சு. வின் வெற்றி முகம் தமிழிலக்கியத்தில் ஒரு தனித்த மலையென நிமிர்ந்து நின்று அச்சுறுத்தும்.

காலம் ஒரு சிறந்த திறனாய்வாளன்' அது பலமுறை வெற்றிகரமாய்ச் செயல்பட்டிருக்கிறது. க. நா. சு அவர்களை அவரது

பல்துறை மேதமைகளைத் திறனாய்வு செய்ய இதுவரை யாரும் முயன்றதில்லை, காரணம் அவர் உயிருடனிருந்தார். எந்தத் துறையையும் திறனறிந்து ஆய்ந்து முடிவு கூறும் க. நா. சு. தன்னைப் பற்றியும் கூறிய வரிகள் பின் வருகின்றன.

இதையே எனது கட்டுரை முடிவாகவும் கொள்க :

"ஊருக்கு உகக்காததைத் சொன்னவர்க்கு
தனி நரகம் ஒன்றுண்டென்றால்
அங்குதான் யானிருப்பேன்.
ஊருக்கு உவப்பாகாததைச்
சொன்னவர் பரம்பரை
அது பெரிது காண்,
நான் மட்டும் பின் வாங்குவேனா ?
உனக்கு உவப்பதைச் சொல்லி
நகரத்தில் விழ நான் நீயில்லை,"

(க. நா. சு. கவிதை ஒன்றிலிருந்து)

கண்ணகியும் மெங்சியாங் நூவும்

பேரா. கோ. வேங்கடாசலம்
மேனாள் முதல்வர், ஈ. வெ. ரா கல்லூரி.
திருச்சி.

மெங்சியாங் சரிதையில், பிரியுங் காலத்துத் தன் கணவன் தன்னைத் தேற்றுவானாய்ச் சில மொழிகள் கூற, அவனுக்கு மறுமொழி கூறுவாளாய் மெங்சியாங் "ஐயனே, அன்பினால் தாங்கள் இவ்விதம் பேசுகிறீர்கள். என்னீர் அறியாதீர் போல இவை கூறலாமா ? சிறுமியாய் இருக்கும் காலத்து எனதருமைத் தந்தை கற்பித்ததையும் தாங்கள் போதித்த அற உரைகளையும் எங்ஙனம் பிழைக்க வல்லேன்" என்றுகூறியதாகக் காணப் படுகிறது. கண்ணகியின் மாற்றா உள்ள வாழ்க்கைக் கொள்கை யும், மெங்சியாங் இன் அறவுரை பிழையாக் கொள்கையும், ஒத்திருத்தல் காண்க.[7]

வழிச்செலவின் போது காடு காண் காதையில், கண்ணகியும், கோவலனும், அடிகளும் ஐயைக் கோட்டத்தில் ஒரு சிறை தங்கி இளைப்பாறினர் எனச் சிலப்பதிகாரம் கூறும்.[8] இவ்வாறே வழி நடையில் ஒரு காட்டிடைச் செல்லுகையில் கடல் தெய்வக் கோட்டத்தில் மெங்சியாங் ஒரு நள்ளிரவைக் கழித்தாள் என அவளது சரிதம் கூறும்.[9] பண்டை நாளில், மக்கள் வாழ்பகுதி ஒரு சிலவாக, காடிடையிட்ட பகுதி பலவாக இருந்தமையாலும் அயற்புறங்களில் தங்கும் உறையுள் கிடைத்தல் அரிதாய் இருந்தமையாலும், ஆங்காங்கு காணப்பட்ட கோட்டங்களில் வழிப்போவோர் தங்கிப் போதல் தவிர்க்க இயலாததாயிற்று. இவ் இயலாமையைக் கட்டிச் செல்லின், காப்பியம் இயற்கையொடு இயைந்த ஒன்றாய்த் தோற்றம் பெறுமாறு காண்க. இக் காரணம் பற்றியே, நெடுங்காலம் இடையிட்ட இந்த இரண்டு காப்பியங்களிலும் ஒன்றேபோல இரு காட்சிகள் அமைதல் ஆயின.

கண்ணகி கனவில், ஒரு பெரும் பதியில் தனக்கும் தன் கணவற்கும் நேரப்போகும் நிகழ்ச்சிகளைக் கண்டாள். கண்ட பின்னரும் கணவனுடன் புகாரின் நீங்கி மதுரை என்னும் பெரும்பதி நோக்கிச் சென்றாள் எனச் சிலப்பதிகாரம் கூறும்[10].

இவ்வாறே, மெங்சியாங் கனவொன்று காண்கிறாள். "நான் இறந்துபோய் விட்டேன் என்பதறியாமல் தனித்துயருழந்து இந்

நெடுந்தொலைவு நடந்து வருகிறாயே" என்று தன் கேள்வன் சொல்வதுபோல, கனவிலே கேட்கிறாள். இருப்பினும் மனம் தளராதவளாய், என் கணவனை எப்படியும் காண்பேன், விதி இப்படியாயின், நான் என் செய்கேன். நான் வேண்டுவதெல்லாம், "கணவனோடு உடனுறைதல்" என்பதொன்றே. என்று மெங்சியாங் கூறுவதும், தொடர்ந்து தொலையாத தூரத்தைக் கடந்து போதலையும் காண்க.[11]

கண்ணகியும் கோவலனும் புறஞ்சேரியில் மாதரி குடிலில் தங்கினார்கள் என்பார் இளங்கோவடிகள். வரப்போகும் பெரும் பிரிவை உணர்ந்தகவி திடீரெனப் பிரிக்க மனம் இல்லாதவராய், அவர்கள் உள்ளம் ஆறுதல் பெறும் வகையில் அவர்கள் இருவரை யும் ஓரில்லில் தங்க வைக்கிறார். அன்பும் ஆதரவும் அவர்களது புண்பட்ட உள்ளத்திற்கு மருந்தாய் அமைகின்றன.[12]

இது போன்றதொரு காட்சியைச் சீனக் கவிஞன் மிக அருமையாக மெங்சியாங் சரிதையில் அமைத்திருக்கிறான். வழியில் ஒரு ஒரு சிற்றிறால் சிறு குடிலில் மெங்சியாங் ஓர் இராப் பொழுது தங்குகிறாள். அக்குடிலுக்குரிய பேரியல் கிழத்தி அவளை அன்பொடும் ஆதரவொடும் அணைத்து, கஞ்சி கொடுத்து உபசரிக்கிறாள். விருந்தாக வந்த மெல்லியாளின் பெரும் குடிப்பிறப்பையும், பிறபெண்மை நலன் களையும் கண்டுணர்ந்த அப்பெரியாள் அவருடைய வரலாற்றைக் கேட்டுணர்கிறள். அவளின் அவலக்கதை கேட்டு நெஞ்சுருகிய அம் முதியோள் அவளின் நெஞ்சுறுதி கொண்டு தானும் அவளுக்குத் துணையாய் வருவதாகச் சொல்லுகிறாள்[13]

கவுந்தி அடிகளும் மாதரியும் இணைந்த ஓர் உருவமே இம் முதியோள் எனலாம். "உரியதன் நீங்கு ஒழிகென ஓழியீர்...... போதுவல்யானும் போதுமின் "[14] என்ற கவுந்தி ஐயையை இம் முதியோளிடத்துக் காணலாம்.[15]

கண்ணகியை உடன் கொண்டு சென்று தன் குடிலின் ஒரு சிறை இருத்தி விருந்தமைத்த மாதரியை,[16] பகலெல்லாம் பசித்துத் துவண்டு வந்தவளுக்கு அன்புடன் கஞ்சி வார்த்து உபசரித்த அம் முதாட்டியிடம் காண்க.[17]

மெங்சியாங் என்பாள் ஒரு தாயன்பை முழுமையாகத் துய்த்து ஆறுதல் பெற்ற வாய்ப்பு இஃது ஒன்றுமே. இதனை அடுத்து வரும் நிகழ்ச்சி பேரவலக் காட்சியே. இதே போல்

கண்ணகி மடந்தை ஒரு தாயன்பைத் துய்த்து ஆறுதல் பெற்ற நிகழ்ச்சி இஃது ஒன்றுமேயாம். இதனை அடுத்து வரும் காட்சி பேரவல நிகழ்ச்சியே. இவ்வண்ணம் பயில்வார் உள்ளமெலாம் கனிந்துருகுமாறு காட்சிகளை அமைத்த சீனக் கவிஞனும் தமிழ்க் கவிஞனும் காப்பியம் புனைதலில் எத்தகைய ஒத்த ஆற்றலும் அறிவும் பெற்றவர்களாய் இருந்திருத்தல் வேண்டும் என்பதனை ஓர்க.

"காதல் கணவனைக் காண்பதும், கருத்துறு கணவற் கண்டபின் அல்லது இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்" என்பதும் கண்ணகியும் மெங்சியாங் நூவும் கொண்ட கொள்கை. இத்திண்ணிய கற்புமாண்பால், கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுத்துச் சிறப்புச்செய்தான்.[18] அதே போல் மெங்சியாங் என்ற நங்கையின் திண்ணிய கற்பினைக் கண்டு வியந்த சீனதேய அரசன் அவளுக்குக் கோயில் எடுப்பித்துச் சிறப்புச் செய்தான்.[19]

கவிச் சக்கர வர்த்திகளால், இவ்விரு பெண் மணிகளும் அமரத்துவம் பெற்றமை காண்க.

ஈண்டு குறிப்பிடத்தக்க தொன்றுண்டு. அஃதென்னை எனில் கோவலன் முற்பயத்தில் செய்ததும், சங்கமன் மனைவி, நீலி என்பாள், தன் கணவன் கொலைக்களப்பட்டமைக்கு வருந்தி, நீதி கேட்டுச், "மலைத்தலை ஏறியோர் மால்விசும் பேணியில் கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றோன்...... விழுவோள்" என்று கூறி வரை பாய்ந்திறந்தாள்.[20] இங்ஙனமே, எயில் மிசை நின்று கடற்பாய்ந்து இறந்தாள். மெங்சியாங் என்று அவள் சரிதம் கூறும். இவற்றைக் காணும்போது, பழங்கால மக்களிடை வழங்கிய கதையில் கூறப்பட்ட நீலியே, பின்னாள் இளங்கோவடிகளால் காப்பியத் தலைவி கண்ணகியாக செவ்வனம் உருவாக்கப்பட்டாளோ என நினைக்கத் தோன்று கிறது இது ஆய்தற்குரியது.

கண்ணகி கணவனுடன் மதுரை வரை சென்று ஆண்டு அவனை இழந்து, சினமுற்று, மதுரைக்கு எரியூட்டிப்பின் நடந்து சேரநாடு அடைந்து ஓராங்கு சாந்திபெற்றாள் எனச் சிலம்பு கூறும். ஆனால், மெங்சியாங், பிரிந்த கணவனைத்தேடி ஏறத்தாழ 3, 800 மைல் நடந்து சென்று, அவன் இறந்தமை கேட்டு, யாரொடும் சினவாது, சாப்பிடாது, தன்னுழுக்கு தொத்து கொண்டு மதில்மேல் ஏறிக்கடற் பாய்ந்தாள் என அவள் சரிதம் கூறும். இவ்வேறுபாட்டில் அடங்கியுள்ள நயம் காண்க.

வெயிலின் வெம்மை அகத்திடை வருத்துவதற்கேற்பப் புறத்தே வேனிற்காலப்பொழுதில் காப்பியமாந்தர் செலவுமேற் கொண்டதாக அடிகள் கூறுவார். கணவன் இல்லா ஒருதனித் துயரால் உள்ளம்பனிப்ப, மரத்துப் போன அகத்திற்கேற்ப பனிக்காலத்தில் மெங்சியாங் செலவு மேற்கொண்டாள் என அவள் சரிதம். கூறும் வேற்றுமையிலும் ஒத்த ஒற்றுமைப் பண்பினைக் கண்டு இன்புறுக.

இவ்வழி சீனநாட்டு மக்கள் பண்பாடும், தமிழர் தம் மக்கள் பண்பாடும் இணைந்து மனித குல ஒற்றுமையை வெளிப் படுத்துதலை அறிய முடிகிறது.

மேற்கோள்கள்

1. P. P. 358 – 359, Chinese Poetry inroduction, "The wisdom of China" Edited by Lin yutarg, Jaico publishing house Bombay.
2. சிலப்பதிகாரம் ——
3. P. P. 401 — 402, "The wisdom of China"
4. சிலப். நாடு காண் காதை வரி 1317 — 1319.
5. சிலப் கொலைக்களக்காதை.
6. ,, ,, ,,
7. P. 403, The wisdom of China"
8. சிலப். வேட்டுவவரி
9. P. P. 404 – 405 "The wisdom of China"
10. சிலப். கனாத்திறம் உரைத்த காதை
11. P. 406 — 407 The wisdom of China
12. சிலப். புறஞ்சேரி யிறுத்த காதை
13. 409 — 410. "The wisdom of China"
14. சிலப். நாடுகாண் காதை
15. P. P. 409 — 410 The wisdom of China
16. சிலப் புறஞ்சேரி இறுத்த காதை
17. P. P. 409 — 410 The wisdom of China
18. சிலப். வஞ்சிக் காண்டம்
19. P. 421 The wisdom of China
20. சிலப். கட்டுரை காதை.

கவிஞர் கண்ணிமை
மூக்கனூர்பட்டி
சந்தப்பட்டி. அ. நி. 635305,
தருமபுரி மாவட்டம்.

தேனருவி பாய்ந்து வரும் வேனிற் பருவத்து - வளங் கொழிக்கும் கவின் சோலை! அக்காவின் கண் தெங்கும் கமுகும் பாளைவிரிக்க, தேமாவும் தீம்பலவும் காய்த்து-கனிந்து உதிர்ந்து கிடக்க கடம்பும் வாகையும் வானுயர் தோற்றத்தொடு நிற்க, முருக்கு முத்துதிர்த்துப் புன்னகை பூக்க - ஆர்க்கின்ற அசோகும் சவுக்கும் ஆடியாடி அசைந்து அசைந்து நிற்க, தாழையும் வாழையும் தன்பெரும் பூக்களைத் தாழ்த்தி மடலவிழ்க்க கொல்லை முல்லை மெல்லிதழ் விரித்து நறுமணம் பரப்ப - மாதவியும் மல்லிகையும் மட்டொழுகி நாற்றங்கூட்ட - புன்னையும் மகிழமும் தளையவிழ்ந்து - தேனார்ந்து அறுகால் தன் சிறை விரித்து இன்னிசை பாட -

மாங்குயில்கள் தேங்குரலில் மெல்லிசை எழுப்ப, புள்ளினங்கள் கிள்ளை மொழியில் நெஞ்சைக் கிள்ளியள்ளும் வகையத் பண்பாடா நிற்க; கடுவனும் மந்தியும் காடு நெடுக களித்தாட, ஒருபால் இடியொரு மாறுபட பிளிறும் பெருமதக்களிறு துடிநடைப் பிடியொரும் கன்றோடும் இடையிட்டுச் செல்ல, அப்பாலுள்ளார் - இப்பாலுள்ளார்க்குத் தெரியாவாறும், இப்பாலுள்ளாரை அப்பாலுள்ளார் அறியாவாறும் இலங்கும் வெயில் நுழைபறியாக் குயில் நுழைபொதும்பர் அது ! தனித்து வருவாரை தண்தென்றல் தவழ்ந்து துய்பத்துள் ஆழ்த்தும் தன்மையும் பொருந்திய பூக்காடு!

காவின் கண் சிற்றில் இழைத்துச் சிறு சோறு சமைத்து உண்ண அழைத்து மகிழும் சிறுமியரும், சிற்றில் அழித்துச் செங்கண் முகங்கண்டு மகிழும் சிறுவர்களும், நாளும் நயந்து சென்றாலும் செழுஞ்சோலை அச்சோலையினூடே தன் தோழியரொடு மகிழ்ந்தாடி நின்றாள் மங்கையொருத்தி வேட்டையின் மேல் வந்தவன், தாரகை நடுவண், தண்மதி போன்றாளைக் கண்டான். வேங்கையை வீழ்த்தும் பெருந்திறலுடையோன் தன்னின் நெஞ்சத்தை நிறுத்தவியலாமல் நினைவிழந்து செயலிழந்து நின்றுவிட்டான்.

தோழியும் கூட்டம் பல்லிடங்களிற் பிரிந்து சென்று விட்டதால் தலைவலியும் - அக்காளைநின்றிருந்த இடமருங்கே வந்துவிட்டால்

வைத்தவிழி வாங்காமல் பார்த்துக்கொண்டே நின்றான். அவனும் அவளும் கண்ணொடு கண்ணினை நோக்கினர். உண்ணவும் பெறாமல், உணர்வுமில்லாமல் சிறிதுநேரம் அசைவின்றி நின்று விட்டனர். பொழிலிடை புகுந்து விளையாடும் ஆடலை விட்டாள். பூக்கொய் தலைத் துறந்தாள்; மயிலொடு மாறாடலை நினையாள்; குயிலொடு மாறுகூவுதலை எண்ணாள் ; ஆற்றாமை தாங்காமல் நெஞ்சழிய நின்றாள்

ஒத்த தன்மையினரான உருவும், திருவும் பருவமும் பாங்மையும், குணமும், அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் முதலானவற்றால் தங்கட்குள் ஒப்புமையுடையராய், ஒருங்குகூடி மகிழ்வு நாடி நின்றனர். இருவரும் பிறர் கொடுப்பவும், அடுப்பவுமின்றி எதிர் பாராமல் எதிர்பட்டுக் கூடினர்.

காவும் மாவும் கூடியாடினர்; பாடினர். அருவியாடியும், அஞ்சுனைக் குடைந்தும் மகிழ்ந்தனர். வாசமலர்க் கொடியில் ஊசலாடினர், காயும் கனியும் இசைவுடன் உண்டனர். மேலும் மேலும் விரித்துரைப்பானேன் - அவர்களின் நெருங்கிய தன்மையைச் சுருங்கக் கூறின் இடையறாது தொடுக்கப்பட்ட மாலைபோல் இருவரும் இணைந்து பிணைந்து மகிழ்ந்தனர்.

காலச்சக்கரம் கடுகிச்செல்லாமற் சென்று கொண்டிருந்தது. ஆதவன் அந்திவானை நெருங்க நெருங்க அவளுக்குச் சிறிது ஐயப்பாடு எழுந்தது. அன்பு பாராட்டும் இவர் ஒரு கால் நம்மை விட்டுப் பிரிந்து போய்விடுவாரோ என்ற எண்ணம் எழுந்தது. ஆற்றாது உள்ளம் நெகிழ்ந்தாள்-துன்பத்தால் நலிந்தாள். நீரில்லாப் புலத்து நிவந்த நெடுமரம் வெப்பத்தால் வாடுவது போல் நெஞ்சம் வாடினாள்.

அவளின் வேறுபாட்டைக் கண்ணுற்ற தலைவன் காரணமறியாது மருண்டான். அவளின் எண்ணம் உணர்ந்தான். மெல்லவே நகையாடிச் சொல்லாடிக் கொண்டே கார்நிகர்க்கும் அருங்குழல் கற்றையை நீவினான். நீர்மேவும் குவளையேய்க்கும் கண்ணின்றும் வழிந்த-துளிர்த்த கண்ணீரை நீக்கினான். மேனியும் நுதலும் தகைபெறத் தடவினான். அகமும் தோளும் அழகு பெறத் தழுவினான். "விண்ணோடும் நிலவே ! அரும் பெறற் பாவாய் ! கொய்யாமற் கொய்தணைத்துக் கொண்டிருக்கும் மடக் கொடியே ! என்னின் பிரிவெண்ணி நலியற்க. அச்சம் தவிர்க" என்றான்.

" என்னைப் பிரிந்தும், செல்வீரோ ? " என்றாள்.

" என்ன, பிரித்தா ? யார் நானா ? உன்னை விட்டுப் பிரிந்தும் செல்வேனா ? சென்றும் இருப்பேனா ? என்றான்.

தலைவனின் சொற்கள் தலைவிக்கு அமைதியைத் தரவில்லை. தன்மனத்துள் எண்ணினாள். தலைவனைக் கண்டதும், களிகூர்ந்ததும், கருத்தழிந்ததும், காளையைக் கவர்ந்து விட்டதையும் இமைப் போழ்தில் கள்ளமறியா உள்ளங்கள் ஒன்றானதும் நினைவலைகளாய் ஒன்றன்பின் ஒன்றாய் ஓடின. ஒன்று சேர்ந்த உறவு பிரிந்துவிட்டால், தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டால் என்ன செய்வதென அஞ்சினாள். மென்மையான மனந்தானே, பேதைமை கொள்வதில் தவறென்ன ?

அமைதியாக அமர்ந்திருந்தவளின் முகம் நோக்கினான். செந்தமிழே ! செகம் புகழ்ந்தேத்தும் திருக்குறளே ! துகிலிடை மறைந்து விளங்கும் தகிலிடையே ! முகிலிடைத் தோன்றும் மின்னலென ஒளியால் கூடித்தவழ்ந்து - தவழ்ந்து அசைந்து அசைந்து கிடக்கும் பிணியாரமன்ன என் வாழ்வில் ஒளி கூட்டும் ஒளிவிளக்கே ! உன்னைப் பிரியேன் ; பிரியினுந்தரியேன் ; யான் சொல்வதை அயராது மனங்கொள்வாயாக !

" என்னுடைய தாயும், உன்னுடைய தாயும் ஒருவர்க்கொருவர் எத்தகைய உறவு முறையினர் அறிவாயா ? "

" அறியேன், அறியேன். எவ்வுறவும் அறியேன் ! "

" என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் எத்த முறையினர் உறவினர் ஆவார் ? "

" ஆகார், ஆகார். எம்முறையும் ஆகார். "

" இது போழ்து அகத்தால் காதல் நெஞ்சத்தால் ஒன்றிப் பிரிவின்றி இருக்கும் யானும், நீயும் இதற்கு முன்னர்-யாண்டும் ஒருவரையொருவர் எவ்வாறேனும் தெரிந்திருந்தோமா ? "

" தெரிந்திலோம், தெரிந்திலோம் ! சற்று முன்வரை தெரிந்திலோம். "

" குலத்தாலும், பிறவற்றாலும் நம்மிடையே ஏதேனும் பழக்க வழக்கங்கள் உண்டா ? "

" ஒன்றுமே இல்லை. "

"செம்மை நிறமாகிய இம்மண் நீரை விரும்பி விண்ணிடைத் திரியும் மேகத்தை வேண்டியா பெற்றது?"

" இல்லை !"

" செம்புலம் மழை பொழிய ஏதாவது சிறு முயற்சியேனும் செய்ததுதான் உண்டா ?"

" அதுவுமில்லை "

" ஆகவே மழை பெய்தது — இயற்கையில் ஆன செயல் அல்லவா? "

" ஆமாம் இயற்கையின் கொடையே !"

செம்புலத்தில் பெய்த நீர் அம்மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும், சுவையையும் பெற்று ஒன்றுபட்டு விட்டது இல்லையா ?"

" ஆமாம் ஒன்று பட்டு விட்டது "

" இனி அதைப் பிரிக்க முடியுமா ?"

" பிரித்தல் முடியாத செயலே ?"

"அதைப்போலத்தான் நம்மைப் பெற்றெடுத்துச் சீராட்டிப் பாராட்டிப் பரிவோடு வளர்த்த பெற்றோரிடை இதற்கு முன்னர் ஒரு தொடர்பும் இல்லாது இருப்பவர், நம்மின் பரிவால் — இது போழ்து கூடி விட்டோம். உள்ளத்தால் ஒன்றி அன்போடு கலந்து விட்டோம். இனிப் பிரிவென்பது நேராது, " — தலைவனின் இவ்வுரை தலைவியைத் தேற்றியது..

ஆம்! செம்மண்ணானது அணுக்களும் நீரும் உடையதாய் ஒன்றானது போலவே காதலனுங்காதலியும் வேறு வேறாயினும் — காதல் நெஞ்சத்தால் கலந்து ஒன்றாகி விட்டனர்.
கலப்புத் திருமணத்தின் — காதல் திருமணத்தின் சீர்திருத்த எழுச்சி மிக்க செயல்களைப்புரிந்த தமிழ் மறவாது தன்மைகளைத் தாங்கிய சங்க இலக்கியப் பாடலைக் கண்ணுறுங்கள். கற்க கற்கப் பொருள் புலப்படும் வாழ்வியலோவியப் பாவைக் காணுங்கள். இலக்கியத் தேனை சுவையுங்கள்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழியறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடைநெஞ்சம் தாங்கலந் தனவே.

—குறுந்தொகை.

மதிப்புரை :

நீல. பத்மநாபனின் " தேரோடும் வீதி "

நர்மதா பதிப்பகம்,
16, ராஜாபாதர் தெரு,
பாண்டிபஜார்,
சென்னை-600017.
இருபாகங்கள்.
விலை ரூ 100 /-
பக்கங்கள் 1215

பெரிய்ய அளவில் ஒரு புத்தகம். அதனை நாவல் என்று குறிப்பிடுவதா அல்லது ஒரு படைப்பாளியின் எழுத்துலகச் சுயசரிதை என்று சொல்வதா என்பதே குழப்பம். நாவல் என்று தோற்றமளிக்க ஆரம்பத்தில் ஒரு ஆறு பக்கமும் பின்னே ஒரு அரைப்பக்கமும் இணைத்துள்ள அவர், இந்தச் சந்தேகத்தைப் பற்றி.

" முதலில் இந்நாவலுக்கு 'ஒரு எழுத்தாளன் கதை' என்றோ 'சொல்லேர் உழவர்கள்' என்றோ பெயர் சூட்டத்தான் எண்ணியிருந்தேன். பிறகு அது அனாவசியமாக சிலருக்கேனும் இந்தப்புனை கதையை சுயசரிதையாகவோ, வாழ்க்கைச் சரிதையாகவோ தப்பெண்ணம் கொள்ளத் தூண்டுதலாக அமைந்து விடும் என பயந்துதான்.. " இப்படிக்குறிப்பிடுகிறார்.

இதனைப்படித்துச் செல்வதில் ஒரு சுவாரஸ்யமும் உண்டு. சினிமா 'கிசுகிசு' போன்று மலினமாய் இல்லையென்று, கௌரவத்துக்குச் சொன்னாலும் ஒரு ஆவல். மந்திரமூர்த்திதான் சுந்தரராமசாமியா, கோவிந்தராஜன் - ராஜநாராயணனா. மா. கோ - தி. ஜரவா, சந்திரகுப்தன் - அசோகமித்திரனா என்று ஆராய்ச்சி செய்யவும் வாய்ப்பு உண்டு.

சக எழுத்தாளர்களின் பகையுணர்ச்சி பொறாமை, பத்திரிக்கை, பதிப்பகங்களின் அலட்சியம், அவமதிப்பு, இவை ஒவ்வொரு பக்கத்திற்கும் ஆதாரம்.

படைப்பாளிகளின் தனிஉலகைப்புரிந்து கொள்வதற்கு இந்தப்படைப்பு ஓர் அரிய சான்று. உணர்ச்சிகளை எழுத்தாய் கொட்டித்தீர்ப்பதற்கும், மனிதாபமாய் நிற்பதற்கும், வக்கிரமாய்

127245
சென்னை-600 008.

நடப்பதற்கும், சமரசம் செய்து கொள்வதற்கும் ஒரு படைப்பாளியால் கலைஞனால் இயலுமா என்ற கேள்விக்கு ஒவ்வொருவரும், நீல. பத்மனாபன். உட்பட எல்லோரும் சாட்சியமளிக்கிறார்கள்.

தனது மரணபயத்திற்கு வடிகாலிட்டுச் சிவ. கதிரேசனை இறந்த ஒருவராகச் சித்தரித்துத் தெம்படைந்துள்ள நீல. பத்மநாபன், மலையாள மண்ணிலிருந்து தமிழுக்குச் சேவை செய்தால் தமிழன்னை ஏற்றுக் கொள்ளமாட்டாளா? என்ற கேள்வியை மனத்தில் எழச் செய்து விடுகிறார்.

கடைசி அத்தியாயங்களில், இத்தனை ஆண்டாய்த்தனக்கு உற்சாகம் அளித்து வந்த மனைவி தவறாய் தன்னைப் புரிந்து கொண்டுள்ளாள் என்பதைப் பற்றிச் சொன்னாலும், இந்த நாவலுடன் ஒட்டவைத்துள்ளது போன்ற உணர்வு.

முப்பது ஆண்டுகள் படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டுப் பல சிறுகதைத் தொகுப்புகளையும் நாவல்களையும் தந்துள்ள எழுத்தாளர், தான் எழுதி முடிக்க கதைகளைப் பிரசுரிக்கப் பத்திரிக்கைகள், பதிப்பகங்கள் எவ்வளவுதான் தடைக்கல்லாய் இருந்தாலும், படைப்பாளி தன்னை வெளிக்கொணர்வதில் சளைப்பதில்லை என்பதைப் பல சலிப்புகளுடன் சொல்கிறார்.

மொத்தத்தில் தமிழ்ப்படைப்புலகில், படைப்பாளிகளைப் பற்றிய ஒரு ஆவணமாகத் தென்படுகிறது " தேரோடும் வீதி ".

பா. செல்வபாண்டியன்,
2299, முத்தோஜியப்பா சந்து,
தஞ்சாவூர்-613009.

அணி இலக்கண ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள்

டாக்டர். இ. சுந்தரமூர்த்தி,
இணைப் பேராசிரியர்,
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனப் பகுக்கப் பெற்றுள்ள ஐவகை இலக்கணங்களும் மொழித்திறனை வளர்க்கப் பயன்படுவன பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் 'உவமவியல்' என்னும் இயலுள் அணியிலக்கணத்தின் இன்றியமையாமையை வற்புறுத்துகின்றது. வேறு சில இடங்களிலும் அணி இலக்கண நுட்பத்தைத் தொல்காப்பியர் கூறுவதைக் காணலாம். உள்ளுறை, இறைச்சி போல்வன அகப்பொருளுக்குரியதாக வரையறைப்படுத்திக் கூறும் நுட்பத்தைக் காணுகின்றோம். பிற்காலத்தே, இதனை அணி வகையினுள் அடக்கினர். ஆனால் தொல்காப்பியர் இதனைப் புலப்பாட்டு நெறியாகவே கொண்டார் எனலாம். தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள ஐவகை இலக்கணக்கூறுகளும் காலப் போக்கில் பெரும் வளர்ச்சியும் மாற்றமும் பெற்று ஒவ்வொரு வகையிலும் பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றின.

உவமையின் அடிப்படையில் அணியிலக்கணம் தோன்றியதெனினும் வடமொழி மரபின் தாக்கத்தால் அணியிலக்கண நூல்கள் தமிழிலும் பல்கிப் பெருகின எனலாம். பேராசிரியர் உவம இயலில், 'இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்திறுள்ளும் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருட்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர் (தொல், உவம. 37) என்னும் விளக்கம் எண்ணத்தக்கது.

வடமொழியில் தோன்றிய அலங்கார நூல்கள் பலவும் பிற்காலத்தே தோன்றிய தமிழணியிலக்கண நூல்களுக்கு அடிப்படையாய் அமைந்தன. போஜன் என்பவர் இயற்றிய (கி. பி. 1018 - 1054) சரஸ்வதிகண்டாபரணமும், மம்மபட்டர் (கி. பி. 1100) எழுதிய காவ்யப்பிரகாசமும், இராசன காருய்யன் (கி. பி. 1100 - 1150) இயற்றிய வாசித்ய மாஞ்சையும்,

வித்யாதரன் (கி. பி. 1282 - 1327) எழுதிய ஏகாவளியும், ஜயதேவன் (கி பி. 1200 - 1300) உரைத்த சந்திரமோகனும், விசுவநாதன் (கி. பி. 1300 - 1383) இயற்றிய சாகித்ய தர்ப்பணமும், அப்பைய தீட்சர் (1520 - 1593) எழுதிய சித்திரமீமாஞ்சை, குவலாயனந்தம் முதலிய நூல்கள் பலவும் தமிழின் அணியிலக்கணக் கோட்பாடுகளுக்கு உறுதுணை புரிந்தன என்பர். இவையனைத்திற்கும் முன்னர்த் தொல்காப்பிய உவமவியல் தோற்றம் எண்ணுதற்குரியது.

அணி நூல்களின் அடிப்படை

தமிழ் அணியிலக்கண நூல்களுள் வீரசோழியம் காலத்தால் முற்பட்டது (கி. பி. 11ஆம் நூ.) ஐந்திலக்கணம் கூறும் இந்நூலுள் அலங்காரப்படலம் அணியிலக்கணத்தை எடுத்துரைக்கின்றது தண்டியாசிரியர் கூறிய வண்ணமே இப்படலத்தைக் கூறியுள்ளார் என்பது 'தண்டி சொன்ன கரைமலி நூலின்படியே உரைப்பன்!' (அலங். படலம் 1)என்னும் கூற்று விளக்கும். கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் காவியாதர்சத்தின் மொழிபெயர்ப்பாகும். காவியதர்சத்தைத் தழுவித் தமிழில் தண்டியலங்காரம் தோன்றியது போன்றே கன்னடத்தில் 'கவிராஜ மார்க்கம்' என்னும் நூலும், சிங்களத்தில் 'ஸிய — பஸ்லகார' என்னும் நூலும் எழுந்தது என்பர். காவியாதர்சத்தின் மொழிப்பெயர்ப்பாயினும் தண்டியலங்கார நூலின் சிறப்புப் பாயிரம் இந்நூல் தொல்காப்பிய நெறிகளைப் பின்பற்றியும், 'வடநூன் வழிமுறை மரபினின் வழாதும்' இயற்றப்பெற்றது என்று கூறும்.

அணியிலக்கணக் கோட்பாடுகளுள் இருவகை நெறிகள் இருந்தமை புலனாகின்றது. ஒன்றினை வடமொழி நூல்களுக்கு முன்னே தோன்றிய தொல்காப்பியக் கோட்பாடு எனக் குறிக்கலாம். பிந்தியதனை வடநூல்களின் அடிப்படையில் தோன்றிய தண்டியாசிரியர் முதலானோர் கோட்பாடு எனக் குறிக்கலாம். தண்டியாசிரியரின் அணியிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியரைத் தழுவியதாகவும் இருக்கலாம் என்பது அவர்தம் கூற்றாலும் புலனாகின்றது.

உவமை : சொல்லாய்வு

உவமை எனும் சொல் 'உபமா' எனும் வடசொல்லின் திரிபு என்று சிலர் கருதுவர். உவமை எனும் சொல் குறித்து ஆராய்ந்த அறிஞர் இளயபெருமாள், 'ஒத்தல்' என்பதன் அடி 'ஒவ்'

என்பதாகும். இந்த 'ஒவ்' என்னும் அடியானது அகரச் சாரியையும் 'மை' விகுதியையும் பெற்று 'ஒவமை' என ஆகும். பின் இது இரண்டு அம் சாரியைகள் பெற்று 'ஒவமம்' எனத் திரிந்து அதன்பின் ஒகர உகரத் தடுமாற்றத்தால் 'உவமம்' என வழங்கப்பெறும் என்பார். பேராசிரியர் மு. வ. அவர்கள், 'ஒத்தல்' என்ற வினைக்கு ஒவ்வுதல் என்ற வினை அடியும் உண்டு. "ஒவ்வாயாயுள (பாடல் 75) (167, வகை) என்ற புறநானூற்றிலும், பலரிவண் ஒவ்வாய் (பாடல் 75) என்ற ஐங்குறுநூற்றிலும் காணப்படும் எதிர்மறை வினையும், ஒக்கும் என்ற பொருளில் வரும் ஒவ்வும் என்ற சொல்லும் இதனை விளக்கும். மைவிகுதியும் பெற்று 'ஒவமை' என்ற வடிவத்தையும் ஒருகாலத்தில் பெற்றிருக்க வேண்டும். இரு எகரத் தடுமாற்றத்தில் குறிப்பிட்டது போல் ஒதை, ஒடப்பு, ஒணர்வு, ஒதலி, ஒரல், ஒலை, ஒறவு என்ற வடிவங்கள் உகர முதனிலை வடிவங்களாகத் திருத்தப்பட்ட போது ஒவமம் ஒவமை ஆகிய சொற்களும் உவமம் உவமை ஆகிய வடிவத்தைப் பெற்றுப் பிழையற்ற வழக்காக எண்ணப்பட்டிருத்தல் வேண்டும் என்கிறார் (மு. வரதராசன் 'அணி இலக்கணம்' Prof. Sundarampillai Commemoration Volume P. 228) 'உபமா' என்னும் சொல்லினின்றும் தோன்றியது என்பதைவிட ஒப்புமை என்ற சொல்லின் வழியாகப் பிறந்தது என்பதுவே கொள்ளத்தக்கது எனலாம்.

உவமை ஓர் அளவை

உவமை அணியின் கூறு என்று சொல்வதைக் காட்டிலும் தாம் கூற விரும்பும் கருத்திற்காகப் பயன்படுத்தும் ஒரு புலப்பாட்டு நெறி என முன்னையோர் கொண்டனர் போலும். பொருளின் உண்மைத் தன்மையை அறிவதற்கு உவமை அளவைகள் பயன்பட்டன.

"காண்டல் கருதல் உவமம் ஆகமம்
ஆண்டைய அருத்தா பத்தியோடு - இயல்பு
ஐதிகம் அபாவம் மீட்சி ஒழிவறிவு
எய்தியுண்டாம் நெறி என்றிவை தம்மால்
பொருளின் உண்மை புலங்கொள வேண்டும்"

என்று மணிமேகலை (27:9 - 13) கூறும். அளவையிலக்கணம் கண்ட சிவஞான சித்தியார் சுபக்கமும் இக்கருத்தினை வலியுறுத்திக் கூறுவது காண்க (அளவை 1). உவமையின் பயன் குறித்து எண்ணிய உரையாசிரியர்களும் இருவகைக்

கோட்பாட்டினைக் கொண்டுள்ளனர். (1) உவமையால் புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்பார்க்கு இன்பம் பயத்தலும் இதன் பயன்கள் என்பர். எனவே, உவமை பொருளை விளக்குதற்குப் பயன்பட்ட அளவையாயும் விளங்கியது; மொழியின் முருகியலை உணர்த்தும் அணியாகவும் விளங்கியது என்பது புலனாகும்.

அணியின் தொன்மை

தொல்காப்பியருக்கு முன்னரேயே அணி பற்றிய சிந்தனைகள் இருந்திருக்கக்கூடும் என்பதற்கு அணி இலக்கண மரபுகளைக் கூறும் நூற்பாக்களே 'என்ப' 'மொழிப' எனச் சுட்டுவதைச் சான்று கூறலாம் (தொல். உவம். 2, 4, 24,). வடமொழியில் ரிக் வேதத்தில் சொல்லை அழகுபடுத்திக் கூறும் நெறிகளை ஓசையணிகள் (சப்தம்) பொருளணிகள் (அர்த்தம்) எனப் பாகுபடுத்தியுரைப்பதைக் காட்டுவர். பறவைகளை வீழ்த்திய போது எழுந்த மன உணர்ச்சியை வால்மீகி முனிவர் உணர்த்திய திறமே அணியலங்கார ஆய்விற்கு வழிகோலியது என்பர். யாஸ்கர் உவமையணியின் சொற்களையும் தொகுத்துக் காட்டியுள்ளார். பாணினியும் உவமையின் உறுப்புகளைப் பாகுபடுத்திக் காட்டுகின்றார். இச்செய்திகள் அனைத்தும் மொழிமரபில் நீண்ட காலம் விளங்கிவரும் அணியின் தொன்மையைக் காட்டுவனவாகும்.

அணி மரபு

இடைக்காலத்தே வடமொழியில் தாக்குதலால் அணியிலக்கணம் வகுக்க முனைந்த பலரும் தமிழின் மரபிற்கு ஏற்றவாறு அணியிலக்கணம் வகுக்காது வடநூற் கருத்துக்களை அவ்வாறே தமிழிலும் தந்தனர். எனவே, தமிழ் இலக்கிய மரபோடு இவ்வணியிலக்கண நூல்கள் பொருந்தி வரவில்லை. சான்றாக வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலாய நூல்களைக் குறிப்பிடலாம். தமிழ் மரபிற்கு ஏற்றவாறு அணியிலக்கணத்தை அமைத்துக் கொள்ள முடியாததால் இந்நூலில் காணலாகும் பல மேற்கோள் செய்யுட்களையும் ஆசிரியரே படைத்துக்கொள்ள நேர்ந்தமை இதனை நன்கு வலியுறுத்தும். உவமையொன்றினையே அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் நெறியினின்றும் பிறழ்ந்து காலப் போக்கில் பலநூறு அணிகளைக் கொண்டதாக இவை அமைந்தன அணி வளர்ச்சிப் போக்கினைப் பின்வருமாறு அமைத்துக் காட்டலாம்.

எண்	நூல்	காலம்	அணிகள்	
			பொருள்	சொல்
1.	தொல்காப்பியம்	கி. மு. 8 அல்லது 4	உவமை, மெய்ப்பாடு	
2.	வீரசோழியம்	கி. பி. 11	35	7
3.	தண்டியலங்காரம்	கி. பி. 12	35	2
4.	மாறனலங்காரம்	கி. பி. 16	64	2
5.	இலக்கண விளக்கம்	கி. பி. 17	35	2
6.	தொன்னூல் விளக்கம்	கி. பி. 18	30	30
7.	முத்துவீரியம்	கி. பி. 19	58	14
8.	சுவாமிநாதம்	,,	31	28
9.	சந்திராலோகம்	,,	100	2
10.	குவலயானந்தம்	,,	120	—

சுவையணி

இவற்றுள்ளும் தொல்காப்பியர் தனியே ஓர் இயலாக அமைத்த மெய்ப்பாட்டியலைப் பின்னர் வந்த அணி நூலார் சுவையணிஎனச்சுருக்கி அமைத்தமை கருதுதற்குரியது. பலவகை அணிகளுக்குள்ளே ஒன்றாக இதனைச் சுருக்கி அமைத்தது குறித்துப் பேராசிரியர் மு. வ. அவர்கள் பின்வருமாறு கூறுவர் "மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியனார் மெய்ப் பாட்டியல் என்று தனியே ஓர் இயல் வகுத்து அதன் பல்வகைப் பாகுபாடுகளையும் தெளிவாகக் கூறியிருக்க, இடைக்கால அணியிலக்கண நூலார் அவை அனைத்தையும் ஒருசிறிதும் விளக்காமல் அதற்கு நேர்மாறாகச் சுவையணி என்ற ஒருசிறு அணியாக அடக்கிச் சுருக்கிக் கூறியதேயாகும்". இக்கருத்தினால் முறையாகப் பிற்காலத்தே வளர்ந்து விளங்கியிருக்க வேண்டிய மெய்ப்பாட்டியல் கோட்பாடு இடைக்காலத்தே குன்றியமை புலனாகின்றது. சுவை பற்றிய ஆராய்ச்சியும் தமிழியல் ஆய்வில் இன்னும் சரியாக நிகழ்த்தப்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். சீவகசிந்தாமணியின் சுவை பற்றிய ஆராய்ச்சியை அறிஞர் வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் விரிவாக

எழுதிருப்பதாகவும் ஆனால் அவை இன்னும் முழுமையும் வெளி வராமல் இருப்பதாகவும் கூறுவர். இவற்றுள் சில கட்டுரைகள் ஞானசம்பந்தம் இதழில் வந்துள்ளன என்பர். (ம. ரா. போ. குரு சாமி, தமிழ் நூல்களின் குறிப்புப் பொருள்: பக். viii).

கலித்தொகைக்கு உரைகண்ட நச்சினார்க்கினியரின் மெய் பாட்டுச் சிந்தனைகள் அந்நூல் முழுவதும் பொதிந்துள்ளதை உரையாசிரியரின் நுட்பத்தால் உரைமுடிகின்றது. தொகாப்பியத் திற்கு இவ்வியலுக்கு நச்சரின் உரை கிட்டாத நிலையில் இச் சிந்தனைகள் குறித்து மேலும் ஆராய்வது மெய்ப்பாட்டு அணியியலின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாகும் (காண்க இ. சுந்தரமூர்த்தி, நச்சினார்க்கினியரின் மெய்ப்பாட்டுச் சிந்தனை கள், ஆய்வுக்கோவை). கவிதைக்கு மிக இன்றியமையாததான இம்மெய்ப்பாட்டியலைத் தொல்காப்பியர் உவமவியலுக்கு முன் வைத்துப்போற்றினர். சுவையுணர்வு பாடல்களுக்கு உயிர்நாடி போன்றது. சிறப்பாகக் கூத்து நூலிலும் நாடக நூலிலும் இவ் வணியை நன்கு போற்றினர். ஆனால் பிற்காலத்திய அணி நூலார் சுருங்க உரைத்தனர். வடநூலார் 'ரசம்' எனப் போற்றியுரைக்கும் இதனை மிகச்சுருக்கமான அளவில் தமிழ் அணிநூல்கள் உரைத்தமை குறித்து ஆராய்தல் வேண்டும். மெய்ப்பாட்டியலையும் வடநூலாரின் ரஸக்கோட்பாட்டினையும் இணைத்து ஆராய்வது அணியிலக்கண ஆராய்ச்சியில் சில புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் என்பது திண்ணம். இதுகுறித்துப் பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம் அவர்களின் ஆய்வுக்கட்டுரை பெரிதும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும் (A Study of Rasa-Tolkappiyar and Bharata, Proceedings of the First International Conference Seminar of Tamil Studies 1966, Vol. II).

சொல்லணி

அணிகளுள் பிற்காலத்தே பெருவளர்ச்சியுற்று விளங்கியது சொல்லணியாகும். ஆனால் சொல்விளையாட்டுகள் பொருந்திய இம்மரபு இக்காலத்தே பெரும் வீழ்ச்சியுற்றது என்றே கூறலாம். தண்டியலங்காரம் மாறனலங்காரம் முதலிய அணி நூல்கள் விளக்கியுரைக்கும் கோமூத்திரி, கூடசதுக்கம் முதலிய சித்திர கவிகள் வழக்கிழந்தன. தொன்னூல் விளக்கம் என்னும் நூலினையாத்த வீரமாமுனிவர் இவற்றையெல்லாம் வழக்காற்றில் வழங்காச் சொல்லணிகள் (நூ. 324 உரை) என்றே குறிப்பிடுவது

கூளங்கொளத்தக்கது. அணியதிகாரத்தில் சில அணிகளை விலக்கி உரைத்திருப்பதும் என்னுதற்குரியதாகும்.

தொன்னூல் விளக்கமும், முத்துவீரியமும் முதலில் சொல்லணியையும், பின்னர் பொருளணியையும் விரித்துரைக்கின்றது. வேண்டாத அளவிற்குப் பிற்காலத்தே இவ்வகை அணிகளை அணிநூலார் விரித்துரைத்துள்ளனர். இவ்வணிகளின் பெருக்கத்தை ஆராயும் போது நமக்குப் பல செய்திகள் தெரியவருகின்றன. சிலர் அணிகளைப் பெருக்கியும் சுருக்கியும் உரைத்துள்ளனர். தண்டியலங்காரம் கூறிய 35 பொருளணிகள் மாறனில் 32 ஆகவும் சந்திராலோகத்தில் 100 அணிகளாகவும் குவலயாநந்தத்தில் 120 ஆகவும் விரிகின்றன.

தண்டியாசிரியர் கூறிய நுட்பம் என்னும் அலங்காரம் 'பரிகரத்துள்' அடங்குதலால் அதைக் குறைத்தார். சொல்லிலக்கணத்திலும், பொருளணியிலும், புறத்திணையியலில் கூறியுள்ளதுமான மற்ற அணி நூல்களில் கூறப்படாதவையுமாகிய 'பட்டுவில்' 'இறைச்சிப் பொருள்கோள்', 'பொருண்மொழி' என்னும் மூன்றையும் செய்யுட்கு அணி செய்தலால் இவற்றையும் அணியுடன் சேர்த்து மிகுத்தார். வகை முதலடுக்கு, இணைபெதுமை, உபாயம், உறுசுவை, புகழ்வதினிகழ்தல் முதலியனவும் அழகு தருவதாயிருத்தலாலும் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயங்கும் முறையாலும் இவற்றையும் அணிவகையாக விரித்துரைத்தார். தண்டியாசிரியர் உவம விரியுள் சேர்த்தும், ஏனையோர் வேறு வேறாக இணைத்துமிருக்கின்ற ஐயம், தெரிதருதேற்றம், பொதுநீங்குவமை என்பவற்றுள் ஐயத்தையும், தெரிதருதேற்றத்தையும் பிறிதோரணியாக்கிக் கூறியுள்ளார். தன் கோட்கூறலென்னும் உத்தியானும், தன் குறியிடுதல் என்னும் உத்தியானும், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி முடிக்கும் வழிநூலிலக்கணம் பற்றியே இவர் இவ்வாறெல்லாம் விரித்துரைப்பர் என்று கருதுவர் (மாறனலங்காரம், முன்னுரை, பக். 13).

உவமையும் பிற அணிகளும்

தொல்காப்பியர் கூறிய உவமை பிற்காலத்தே வளர்ந்த நிலையை ஆராயும்போது அவ்வுவமையினுள்ளே ஏனைய அணிகளை அமைத்துக்காட்ட முடிகின்றது.

தொல்	தண்டி
வினை பயன் மெய் உரு (1)	பண்பு, தொழில், பயன் பண்பினுள் மெய்வும் உருவும் அடங்கும் (30)
சுட்டிக் கூறா உவமம் (7)	தொகையுவமம் (31)
பொருளே உவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பின் அஃது உவமமாகும் (9)	விபரீத உவமை (31)
உவமப்போலி (24)	ஒட்டணி (51)
வேறுபட வந்த உவமத் தோற்றம் (32)	உவமையின் வகை (31)
தடுமாறுவமம் (35)	ஐயவுவமை, இதரவுவமை (31)
அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே (36)	சந்தான உவமை (38)
நிரனிறுத்தமைத்தல் நிரனிறை (37)	நிரனிறையணி (66)

எனவே தொல்காப்பியர் புலப்பாட்டு நெறியாகக் கருதும் உவமையே காலந்தோறும் பல்வேறு அணிகளாக விளங்கின என்பது போதரும். அவ்வாறே 'வேறுபடல்' என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கங்களே பிற்காலத்தே உவமைகளாகத் தோற்றம் கொண்டன என்பதை தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு ம. நா. சோமசுந்தரம்பிள்ளை எழுதிய குறிப்புரைகள் நன்கு விளக்கும்.

'வேறுபடல்' என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கமும் அதற்கு இணையான உவமைகளும் வருமாறு :

1.	உவமைக்கும் பொருளுக்கும் ஒப்புமை மாறுபடக்கூறுதல்	விரியுவமை
2	ஒப்புமை மறுத்துப் பொருளை நாட்டிக் கூறுதல்	உண்மையுவமை
3.	ஒப்புமை மறுத்த வழிப்பிறிதோருவமை நாட்டுதல்	மறுபொருளுவமை

4.	உவமையும் பொருளும் முற்கூறி நிரீஇப் பின்னர் மற்றைய ஒவ்வாவென்றல்	தடையுவமை
5.	உவமைக்கு இருகுணங்கொடுத்துப் பொருளினை வாளாது கூறுங்கால் உவமையினை இரண்டாக்கி ஒன்றற்குக் கூறிய அடை ஒன்றற்குக் கூறாது கூறுதல்	உம்மையுவமை
6.	ஒப்புமை குறைவுபட உவமித்து மற்றொரு குணங்கொடுத்து நிரப்புதல்	இசையுவமை
7.	ஒவ்வாக் கருத்தினால் ஒப்புமை கோடல்	கருத்துவமை
8.	உவமத்தற்கன்றி உவமத்திற்கு ஏதுவாகிய பொருட்குச் சில அடை கூறி அவ்வடையானே உவமிக்கப்படும் பொருளைச் சிறப்பித்தல்	மோகவுவமை
9.	உவமானத்தினே உவமேய மாக்கியும் அது விலக்கியும் கூறுதல்	விலக்குவமை
10.	இரண்டு பொருளானே வெவ்வேறு கூறியவழி ஒன்று ஒன்றற்கு உவமை யென்பது கொள்ள வைத்தல்	வேற்றுப் பொருள் வைப்பு

மேற்கூறிய கருத்துக்களினால் தொல்காப்பியர் உவமையைப் புலப்பாட்டு நெறியாகவே கொண்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பேராசிரியர் உவமத் தோற்றம் என்பதற்குத் தரும் விளக்கம் எண்ணத்தக்கது. 'உவமத்தை அணி என்றல் கூடாது. சாத்தனிடமிருந்து அவன் அணியும் அணிகளைப் பிரித்துக் காண்பது போலப் பாடல்களிலிருந்து உவமத்தைப் பிரித்துக் காண்டல் இயலாது ஆகலான்' என்னும் அவர் தரும் விளக்கம் தொல்காப்பியர் காலத்தே உவமம் புலப்பாட்டு நெறிகளுள்

ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது எனலாம்.

தொல்காப்பியர் உவமையைப் பொருள் புலப்படுத்தும் நெறியாகக் கொண்டதைப்போலவே உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றையும் ஒரு சிறப்புமிக்க கூறாகவே எடுத்துரைத்தார். ஆனால் பிற்காலத்தே ஏனைய அணிகள் பெருவிளக்கம் பெற்றது. போலவே உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றை அணிநூலார் போற்றியுரைக்கவில்லை. குறிப்புப்பொருள் கூறும் இவ்விலக்கணத்தைப் பின்னையோர் போற்றி யுரைக்காதது குறித்து மு. வ. பின்வருமாறு குறிப்பார்.

> "இடைக்காலத்தில் தமிழில் இலக்கணச் செல்வத்தை
> வளர்த்துத் தொண்டாற்ற முனைந்தவர்கள் இந்தக்
> குறிப்புப் பொருள்பற்றி விளக்கி எழுதியிருந்தால் அது
> பயன்மிகுந்த தொண்டாக விளங்கியிருக்கும்.
> ...அவர்களின் தொண்டு தக்க வகையில் அமைந்திருப்
> பின் இன்று வடமொழி மாணவர் ரசமும் தொனியும்
> பற்றிப் பல நூல்களின் துணைகொண்டு ஆய்ந்து
> மகிழ்தல் போல், தமிழ் மாணவர்கள் சுவையும் குறிப்பும்
> (மெய்ப்பாடும் இறைச்சியும்) பற்றி விரிவாக
> ஆராய்ந்து மகிழ வாய்ப்பும் அமைந்திருக்கும்"

(Prof P. Sundaram Pillai Commemoration
Volume: 1957)

அணியிலக்கண வரலாற்றில் உள்ளுறை, இறைச்சி குறித்துக் காலந்தோறும் பல்வேறு ஆய்வுரைகள் தோன்றியுள்ளன. உரையாசிரியர்களின் சிந்தனைப் போக்குகளும் பல்வேறுபட்ட வகையினதாக விளக்குகின்றன. தொல்காப்பியர் சொற்களின் பொருண்மை உணர்த்தும் நெறி குறித்து எடுத்துரைக்கும்போது அவை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இருவகை நெறியில் உணர்த்தும் என்பார். (சொல். பெயரியல் 8). இவற்றின் வளர்ச்சி நிலையே உள்ளுறையும், இறைச்சியும் எனலாம். கால வளர்ச்சியில் சொல் தனக்குரிய ஒரு பொருளையேயன்றி வேறு பொருளையும் உணர்த்தும். இதனை வடநூலார் 'தொனி' என மிகவும் போற்றியுரைத்து இலக்கணம் செய்துள்ளனர். காப்பியத் திற்கு உயிர்நாடியே இக்குறிப்புப் பொருள் என்பர் (விளங்கியன்).

"உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடவரும் மரபின் உள்ளுறை ஐந்தே"

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் தந்த விளக்கங்களிதாம் ஆய்வுலகில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்தன. 'உட்புறத்திருப்பது உள்ளுறை' எனவும் 'புறத்திற் கிடப்பது இறைச்சி' எனவும் இதனை மிக எளிமையாக்கிக் கூறுவார் அறிஞர் எஸ். கே. இராமராசன் (தமிழ்நூல்களில் குறிப்புப் பொருள் தந்துரை). இதனைப் பிறிதொரு நூலுக்கு வழங்கிய முன்னுரையாலும் அறிய முடியும்.

"வெளிப் படத் தெரியும் மெய்ப்பாட்டினையும்
ஒளித்தவண் மணக்கும் உள்ளுறைத் திறனையும்
கவிதைக் கப்பால் காணும் பொருளையும்
கண்டு சுவைத்தல் கற்றவர் கடனே!

முத்தினில் ஒளிபோல் முகிழ்த்தசொற் பொருளையும்
மலரினில் மணம்போல் வயங்கும் உள்ளுறையையும்
மணியினில் ஒளிபோல் மருவும் தொனியையும்
கரும்பினுட் சுவைபோல் கலந்தலட் சியத்தையும்
கண்டும் நோக்கியும் கணித்துப் பார்த்தும்
தேறுதல் கடினம்! செப்புதல் அரிதே!

(மு. மு. இஸ்மாயில் : மும்மடங்கு பொழிந்தன—நூல் முன்னுரை)

உள்ளுறை, இறைச்சி குறித்த ஆய்வுச் சிக்கல்களைத் தெளிவு படுத்தியவற்றுள், தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள் என்னும் நூலும் (ம. ரா. போ. குருசாமி) குறிப்பிடத்தக்கதாகும். இயற்கைக் காட்சி வருணிப்பதைப் போலக் காட்டி, நுட்பமான கருத்தினைக் குறிப்பாகச் சுட்டுகின்ற இலக்கிய உத்திகளே உள்ளுறையும் இறைச்சியும் என்ற அளவிலே நிறுத்திவிட்டால் சிக்கல் எதுவும் இல்லை. ஆயின் உள்ளுறையில் வரும் இயற்கைக் காட்சிக்கும் இறைச்சியில் வரும் இயற்கைக் காட்சிக்கும் வேற்றுமை என்ன என்னும் எண்ணம் எழும்போதுதான் சிக்கல் எழுகின்றது. இச்சிக்கலுக்குரிய தீர்வினை உரையாசிரியர்கள் தொடங்கி இக்காலத் திறனாய்வாளர் வரை பலரும் ஆய்ந்துள்ளனர். ஆனாலும் ஒரு முடிந்த முடிபினுக்கு இன்னும் வரவில்லை என்பதனை மனத்துள் கொள்ள வேண்டும். ஆனாலும் காலந்தோறும் இச்சிக்கல் பற்றிய ஆய்வுரைகள் இப்பொருளின் நுட்பத்தைக் காட்டும்.

"உள்ளுறையுவமமாவது — ஒருவர், தாம் கூறக்கருதிய பொருள் 'இதனோடு ஒத்து முடித்தல்வேண்டும்' என்று உட்கொண்டு அதற்கு வேண்டுபவற்றை (கருப்பொருளாக) உள்ளுறுத்தக் கூறுவது. உள்ளுறையுவமம் கருப்பொருள்களுள் தெய்வம் ஒழிந்த பிறபொருள் நிலமாக வரும்; இதனோடு ஒத்துப்பொருள் முடிகென உள்ளுறுத்துரைப்பது என்றதனால் உள்ளுறையானன்றி ஆண்டைப் பொருள் முற்றுப்பெறாது".

"இறைச்சியாவது - சொற்பொருளுக்குப் புறத்தாயிருக்கும் பொருள் என்பது ... அஃதாவது சொற்பொருளுக்குப் புறத்தே தோன்றும் குறிப்புப்பொருள் இறைச்சி என்பதும் சொற்பொருட்குப் புறத்தே பின்னும் ஒருபொருள் தோன்றுதல் யாங்கனம் கூடும் எனின், மணியடித்தால் மணியோசையின்பின் நுட்பமாகிய தோரோசை உண்டாதல் போல, கூடும் என்க"

(ரா. வேங்கடராசுலு ரெட்டியார் :
தமிழ்ப்பொழில் :1938)

எனும் மேற்கோள்களைக் காட்டி அவற்றின் வழியே அமைதி காண்பர். இங்ஙனம் இப்பொருள் பற்றிய ஆராய்ச்சி இன்றும் தொடர்ந்து வருவது அதன் நுட்பத்தையும் சிக்கலையும் காட்டும்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால்,

அணி நூல்களின் தோற்றம் தொல்காப்பிய நெறியினின்றும் மாறி வளர்ந்த போக்கினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. பொருள் புலப்பாட்டு நெறியினின்றும் மாறி வெறும் அலங்கார நிலைக்குச் சென்றதால் சொல்லணிகள் முதலாயின காலப் போக்கில் வழக்கு வீழ்ந்தன என்பதும் தெளிவாகும். உவமை எனும் சொல்லாட்சியின் நிலை குறித்தும் காணப்பெற்றது.

முன்னையோர் போற்றி வளர்த்த 'சுவையணி' பிற்காலத்தே போற்றுவாரின்மையினால் வடநூலார் இன்று பெற்று விளங்கும் 'ரஸம்' கோட்பாடு விரிவாக வளர்ச்சி பெறவில்லை.

உள்ளுறை இறைச்சி ஆகிய தொல்காப்பியரின் சிந்தனையும் நன்கு போற்றிப் பாதுகாக்கப் பெறவில்லை. வடமொழியில் 'தொனி' இலக்கணம் வளர்ச்சிபெற்ற அளவிற்கு இச்சிந்தனை மேலும் தமிழ் நூல்களில் இலக்கண நெறிகளாகக் கொள்ளப் பெறவில்லை. இவைபற்றி இன்னும் ஆராய்வதற்குரிய காலங்கள் நிறையவுள்ளன என்பதனை ஆய்வாளர் மனத்தில் நிறுத்தி மேலும் ஆய்ந்து 'அணியை' அணிபெறச் செய்வார்களாக.

பயன்பட்ட அணி நூல்கள்

அணியிலக்கணம், விசாகப்பெருமாளையர், கழகம், 1970.

அறுவகை இலக்கணம், தண்டபாணி சுவாமிகள், பேரூர்த் தமிழ்க்கல்லூரி, 1978.

இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர், தாமோதரம் பிள்ளை பதிப்பு, 1889.

உவமான சங்கிரகம், இ. சுந்தரமூர்த்தி, சென்னை, 1981.

குவலயாநந்தம், சங்கர நாராயண சாஸ்திரிகள் (மொ. பெ.), சென்னை, 1895.

சந்திராலோகம், முத்துச்சாமி ஐயங்கார், மதுரைத் தமிழ்ச்சங்கம், 1989.

சுவாமிநாதம், செ. வை. சண்முகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1975.

தண்டியலங்காரம், கு. சுந்தரமூர்த்தி, திருவிடைமருதூர், 1967.

தண்டியலங்காரசாரம், தி. ஈ. ஸ்ரீநிவாசராகசாரியன், 1889.

தண்டியலங்கார வினா - விடை, வ. தங்கையா நாடார், பாளையங்கோட்டை, 1953.

தொல்காப்பியம், பொருள் — பேராசிரியம், கனகசபாபதிப் பிள்ளைப் பதிப்பு, 1985.

தொன்னூல் விளக்கம், வீரமாமுனிவர், சென்னை, 1891.

தொனிவிளக்கு, பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, திருச்சி 1944.

மாறனலங்காரம், திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மதுரை, 1889.

முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், சென்னை, 1929.
வீரசோழியம் கா. ர கோவிந்தராச முதலியார் பதிப்பு, கழகம், 1970.

பிற

குருசாமி, ம. ரா. போ., தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், கோவை, 1980.

சுந்தரமூர்த்தி, இ., திருக்குறள் அணிநலம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1971.

Sankaran, *Some Aspects of Literary Criticism in Sanskrit or the theories of Raseau Dhvani*, University of Madras, 1978.

Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Vol. I, IATR, 1969.

Prof. P. Sundaram Pillai Commemoration Volume, 1957.

ஏபிரகாமும் சிறுத்தொண்டரும்

நா. ஆறுமுகம்
இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி.

'ஒருவனே தேவன்' என்னும் கடவுட் கொள்கையை உலகுக்கு உணர்த்திய உரைத்த உத்தம ஞானி நபி இபுறாகீம் (ஏபிரகாம்) ஆவார். யூத, கிருத்தவ, இசுலாமியப் பெருமக்களால் 'ஏபிரகாம்' என்று அழைக்கப்படும் இவர், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஈராக் நாட்டில் தோன்றியவர்.

ஏபிரகாம் தோன்றிய காலத்தில் ஈராக் நாட்டில் அறியாமை யிருள் மண்டிக் கிடந்தது. கண்மூடிப் பழக்கம் மண்டிக் கிடந்தது. கடுமையாகவும் கொடுமையாகவும் உருவ வழிபாடு போற்றப்பட்டது. மாந்த உயிர்களையே கடவுள் உருவத்திற்குப் பலி கொடுக்கும் பழக்கம் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் ஈராக் நாட்டில் புகழ்பெற்ற குருமார் குடும்பத்தில் தோன்றினார் ஏபிரகாம். 'நானே கடவுள், என்னையே மக்கள் வணங்க வேண்டும்' என்று ஆணையிட்ட மன்னர்கள், 'இராஜ்யத்தனம்' செய்து வந்தனர்; குருமார்களும் இதற்குத் துணை நின்றதோடு பல கொடுமைகளைச் செய்வதன் மூலம் மக்களுக்குத் தொல்லைகளையும் துன்பங்களையும் கொடுத்து வந்தனர். இவைகளைக் கண்ட இபுராகிம் நபி அவர்களின் உள்ளம் வேதனைப்பட்டது. கடவுளின் பெயரால் இழைக்கப்பட்டு வந்த கொடுமைகளை வன்மையாகக் கண்டித்தார். அதனால் ஆட்சி செய்து வந்த மன்னர்களின் பகைக்கும் குருமார்களின் வெறுப்புக்கும் ஆளாயினார். ஆனால் அவர் எதற்கும் அஞ்சவில்லை. அஞ்சாமை ஆழ்ந்த அறிவுக் கூர்மையைத் தந்தது

'என்னுடைய வாழ்வும் சாவும் எவருடைய கையில் உள்ளனவோ அவரே என் கடவுள்' என உறுதிப்படுத்தினார். மன்னனையும் மதத் தலைவர்களான குருமார்களையும் எதிர்த்ததால் தந்தையால் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டார்.

அரசனால் பல்வேறு அவலங்களுக்கு ஆளானார். ஆனாலும் 'ஒரே இறைவன்' என்னும் தத்துவத்தில் நம்பிக்கை இழக்க வில்லை இபுராகிம்.

" ஆண்டவனால் படைக்கப் பட்டவைகளும்
மனிதனால் உருவாக்கப் பட்டவைகளும்
வணங்குவதற்கு உரியவை அல்ல.
அனைத்தையும் படைத்த ஆண்டவன் ஒருவன் மட்டுமே
வணங்குதற் குரியவன் "

என்னும் கருத்தை மக்களிடையே துணிவாக எடுத்து முழங்கி வந்தார். இதற்காக அடுக்கடுக்கான துன்பங்களை அனுபவித் தார். இறுதியில் நாட்டைவிட்டு வெளியேறினார்; தன் மனைவியோடு ஊர் ஊராகச் சுற்றி அலைந்து திரிந்தார்; அப்போதும் 'ஒரே இறைவன்' தத்துவத்தைக் கைவிடாது போற்றிப் போதித்து வந்தார்.

இத்தூய இறைபணியில் ஈடுபட்ட இபுராகிம் தம் இளமைக் காலம் முழுவதையும் செலவிட்டு முதுமையின் எல்லைக் கோடான எண்பது வயதை அடைந்தார். மகப்பேறு வாய்க்கப் பெறாத தம் வாழ்க்கையைக் கண்டு மயங்கினார். தமக்குப் பின்னால் தம்முடைய உயிரினும் மேலான ஓரிறைக் கொள்கை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த 'வாரிசு' எவரும் இல்லையே என்று கவலைமிகக் கொண்டார் கண்ணீர் விட்டு இறைவனிடம் முறையிட்டார்.

இறைவனின் கருணையினால் எண்பது வயதைக் கடந்த முதுமையில் இபுராகிம் அவர்களின் மனைவிக்கு குழந்தை பிறந்தது. பிறந்த மகனுக்கு இஸ்மாயில் என்று பெயரிட்டார். வளர்ந்த மகன் பிள்ளைப் பிராயத்தை அடைந்தபோது இபுராகிம் நபியின் மகிழ்ச்சிக்கு ஒருநாள் பெரும் சோதனை ஏற்பட்டது.

தன் மகன் இஸ்மாயீலைத் தானே இறைவனுக்குப் பலியிடுவது போல் இபுராகிம் நபி கனவு கண்டார். அக்கனவை ஆண்டவனின் ஆணையாகவே கருதி, தம் மனைவியிடமும் மகனிடமும் கூறினார். தாயும் பிள்ளையும் அதனை ஆண்டவனின் கட்டளையாகவே ஏற்றனர்.

கனவை அறிந்த சிறுவன் இஸ்மாயில், தந்தையாரை நோக்கி, "இறைவனின் நாட்டப்படியே என்னை உங்கள் கையால் அறுத்துப் பலியிடுங்கள்; நான் பொறுமையாக இருப்பேன்" என்று தன் தந்தையாருக்குத் தைரியம் கூறித் தன் முழு இசைவையும் தெரிவித்தான்.

இபுராகிம் தம் மகன் இஸ்மாயிலைப் பலியிடப் போகும்போது, ஆண்டவனே அப்பலியைத் தடுத்து நிறுத்தி, அதற்குப் பதிலாக ஓர் ஆட்டைப் பலியிடுமாறு பணித்தான்.

இறைவனுக்காகத் தன் உயிரையே உவப்போடு தரத் துணிந்த இத்தியாகச் செயலை நினைவுகூரும் திருநாளாகத்தான் 'ஈதுல் அல்ஹா' என்னும் தியாகத் திருநாள் உலக முஸ்லிம் மக்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

இந்நாள் 'ஹஜ்' பெருநாளாகவும் அமைந்துள்ளது. உலக மக்கள் அனைவரும் உருவமற்ற ஒரே இறைவனை வணங்குவதற்கென உலகில் முதன்முதலாகக் கட்டப்பட்டது, மக்காவிலுள்ள கஃபா என்னும் இறையில்லமாகும். இபுராகிம் நபி அவர்களும் அவர்தம் மகனார் இஸ்மாயீல் அவர்களும் அந்தக் கஃபா என்னும் இறையில்லத்தைப் புதுப்பித்துக் கட்டி உலகெங்கும் வாழும் இறையடியார்கள் இறைவன் பெயரால் கஃபா இறையில்லத்தில் கூடி 'ஒரே இறைவன்' என்னும் உன்னதக் கொள்கையைச் செயல் வடிவில் நிறைவேற்ற 'ஹஜ்' செய்ய வருமாறு அழைப்பு விடுத்தனர். ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு இப்ராகிம் அவர்களால் விடுக்கப்பட்ட அழைப்பை இறையடியார்கள் ஏற்று இன்றும் அதை நிறைவேற்றி வருகிறார்கள்.

மக்கா நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள கஃபா இறையில்லம், முதல் மனிதரான ஆதாம், இறைவணக்கம் செய்வதற்கென அமைக்கப்பட்டது. பின் தியாகசீலர் இபுராகிம், நபிகள் நாயகம் போன்றவர்களால் புதுப்பித்துக் கட்டப்பட்டதாகும்.

கஃபா என்னும் அரபுச் சொல்லுக்கு 'வட்டவடிவம்' 'சதுரம்' என்னும் பொருள்களுண்டு. வட்ட வடிவிலான பரந்த வெளியில் சதுர வடிவில் அமைந்துள்ள கட்டடமே கஃபா என்னும் இறையில்லமாகும். அரசனாயினும் ஆண்டியாயினும் கஃபாவில், எஹ்ராம் உடை (தைக்கப்படாத இருதுண்டு துணிகள்) யணிந்த

முஸ்லிம்கள் அனைவரும் "லப்பைக்க அல்லா. ஹும்ம லப்பைக்" என முழங்குகிறார்கள் (இறைவா இதோ உன் ஆணைக்கிணங்க வந்து விட்டேன் என்பது பொருள்) இறைவன் முன் அனைவரும் சமம் என்னும் நம்பிக்கையைப் பெறுகிறார்கள்! இது எபிரகாம் வரலாறு!

காவேரித் திருநாட்டு வளங்காட்டுஞ் செங்காட்டங்குடியில் தோன்றிய பரஞ்சோதியார் ஆயுள் வேதக் கலையும் அலகில் வடநூற்கலையும் தூய படைக்கலத் தொழிலும் நிரம்பப் பயின்றவர்; பயின்றவற்றால் பெருகு செல்வங்களைச் சிவன் கழலிற்கென்று கொள்ளும் உணர்வினர்; பல்லவ (நரசிம்மவர்மன்) மன்னவன்பால் அணுக்கராய் வடபுலத்து வாதாவித் தொன்னகரைத் துகளாக்கிப் பன்மணியும் நிதிக்குவையும் தந்து சிறப்புற்றவர். திருவெண்காட்டு நங்கை என்னும் காதல் மனைவியோடு அடியாரை நாடோறும் திருவமுது முன்னூட்டிப் பின் உண்ணும் நியதியைக் கொண்டு வாழ்ந்தார். சிவனடியாரை வழிபட்டபோது அவர் முன்பு மிகச் சிறியராய் விளங்கியதனால் சிறுத்தொண்டர் எனும் பெயர் பெற்றார். சிவபெருமான் திருவருளால் அவருக்கு மகனாகத் தோன்றிய சீராள தேவரைச் சிறப்புடன் வளர்த்துச் சிறுவர் பள்ளியில் சேர்த்தனர். அப்போது அவரில்லம் வந்த திருஞானசம்பந்தரால் திருப்பதிகத்தினில் வைத்துச் சிறப்பிக்கப் பெற்றார் சிறுத்தொண்டர். அந்நிலையில் சிறுத்தொண்டருடைய அன்பு நுகர்ந்தருளுதற்குச் சிவபெருமான் வயிரவராய்ச் செங்காட்டங்குடி சேர்ந்தார். சிறுத்தொண்டர் அமுது செய்விக்கும் அடியாரைத் தேடி வெளியே சென்றிருந்தார்.

அவர் மனைவி திருவெண்காட்டம்மையிடம் "உத்திராபதியுள்ளோம். கணவரில்லாத வீட்டில் இரோம், இவ்வூரிலுள்ள கணபதீச்சரத்தில் இருக்கின்றோம்" என்று கூறிச் சென்றார்! செய்தி அறிந்த சிறுத்தொண்டர் வயிரவரிடம் சென்று அமுதுண்ண அழைத்தபோது, வயிரவர் "மூன்று மாதத்திற்கொரு நாள் பசுவீழ்த்திட உண்பது, உரிய நாளும் அதற்கின்று; வாட்ட அரிதாம் உமக்கு; நாம் உண்ணப்படுக்கும் பசுவும் நரப்பசுவாம். உண்பது அஞ்சு பிராயத்துள்; உறுப்பில் மறுவின்றேல் நல்லது; ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத், தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனமுவந்தே, ஏதம் இன்றி அமைத்த கறி, யாம் இட்டு உண்பது" என்றார். இதைக் கேட்ட சிறுத்தொண்டர் 'அடியேனுக்கு இதுவும் அரிதன்று' என வந்து தம் மனைவியிடம் கூறினார். 'அமுது அமைப்போம்'

ஆனால் ஒருவனாகி ஒரு குடிக்கு வரும் சிறுவனைப் பெறுவது எவ்வாறு ? என்று கேட்ட மனைவியாரிடம் சிறுத்தொண்டர், 'தனையன் தன்னைத் தந்தைதாய் அரிவார இல்லை. ஆதலால் எனை இங்குய்ய நீ பயந்த சீராளன் தன்னை அழைப்போம்' என்றார் என்று கணவர் கூறவும், அதனுக்கு இசைந்தார் மனைவி; உடனே பள்ளி சென்று அழைத்து வந்த பாலன் சீராளனைத் திருமஞ்சனமாட்டி கோலஞ் செய்து எடுத்துக் கணவரிடம் தந்தார்! அடியாருக்குக் கறியமுதாம். அதனால் எச்சிலாகும் என்று சிறுவனுக்கு முத்தம் தரவில்லையாம்! பிள்ளையைப் பெற்ற தாயார் கலங்கள் கழுவிக்கொண்டு செல்ல, நல்ல மகனை எடுத்து உலகை வென்ற தாதையார் தலையைப் பிடிக்க, விரைந்து தாயர், கிண்கிணிக்கால் இரண்டும் மடியின் புடை இடுக்கிக், கனிவாய் மைந்தன் கை இரண்டும் கையாற் பிடிக்கச் சிறுவனும் 'தனி நீடு உவகை உறுகின்றார்' என்று மகிழ்ந்து நகை செய்யத், தனிமாமகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார்.

இருவர் மனமும் பேருவகை எய்தி அரியவினை செய்தார் !

தலையின் இறைச்சி அமுதுக்கு ஆகாதென்று கழித்து. மற்றை உறுப்பு இறைச்சியைக் காயம் அரைத்துக் கறி சமைத்துச் சிறுத்தொண்டருக்கு உரைத்தார். சிறுத்தொண்டரும் 'சிவனடியார் அமுது செய உரைத்தபடியே அமைத்ததற்கு அடையும் இன்பம் முன்னையிலும் ஆர்வ பெருகிக் களி கூர' வயிரவரை அழைத்து வந்தார். வந்த வயிரவர் 'அதுவுங்கூட நாம் உண்பது' என்று தலை இறைச்சியைக் கேட்கத் தாதியாரான (பணியாளான) சந்தனத்தார் எடுத்துக் கொடுத்தார். மகிழ்ந்த வயிரவர் சிறுத்தொண்டரை நோக்கி 'நமக்குத் தனியுண்ண ஒண்ணாது' பாங்கு நின்றார் தனைக் கொணர்வீர்' என்று அவரையே உடன் உண்ணச் சொன்னார். உண்ணத் தொடங்கிய சிறுத்தொண்டரைப் பார்த்து மகனை அழையும் என்ற வயிரவரை நோக்கி 'இப்போது உதவான் அவன்' என்றார்.

"நாம் இங்கு உண்பது அவன் வந்தால், நாடி அழையும்" என், சிறுத்தொண்டரும் புறம்போய் அழைத்தார். 'செய்ய மணியே சீராளா வாராய்" என்று ஓலமிட, பரமர் அருளால் பள்ளியிலிருந்து ஓடிவருவான் போல் வந்த சீராளனை எடுத்தணைத்துக் கணவனார் கையிற் கொடுத்தார் திருவெண்காட்டம்மை.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

தாய் நாற்பது

இராமசாமி கோனார்

20. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாயென்ற — 'சான்றோராம்
வள்ளுவர் வாய்மொழியை வையத்தீர் ! நன்குணர்ந்து
உள்ளுவிர் தாய்மை உயர்வு.

21. தன்னலம் பாராது தன்சேய் நலந்தேடும்
பொன்னன்ன நற்றாயைப் போற்றியே—நன்மலராம்
சொன்மலர் தூவியவள் சொன்னிற்பார் இல்லத்து
நன்மலராள் வாழ்வாள் நயந்து.

22. பெற்ற பொழுதில் பிறரறியா துள்ளுவக்கும்
நற்றாய் உளங்குளிர நானிலத்தீர் ! — மற்றுமோர்
பேருவகை யூட்டும் பெரியோராய் யாய்போற்றி
சீருலவ வாழ்வீர் சிறந்து.

23. இன்சொல் நிலையமாம் ஈன்றாள் சிலபோழ்து
வன்சொல் வலிந்து வழங்குவதும் — வன்சொலோ !
அல்லும் பகலும் அகலா துணைவளர்த்தாள்
சொல்லமுத மன்றோவச் சொல்.

24. உண்ண வுணரா துறுபசியால் ஓலமிட்டு
எண்ணச் சுழலில் இருந்தேங்கும் — எண்ணம்
உணர்த்த அறியா துருளும் குழவிக்
குணத்தை யுணர்பவளார் கூறு.

25. பெற்றநற் றெய்வங்காண் பேசுமுயர் தெய்வங்காண்
நற்றாய்காண் மேன்மைசால் நல்லறங்கள் — முற்றும்
திரண்ட வடிவங்காண் தீதறியா அன்னைக்
கிரண்டகஞ் செய்யா திரு.

26. மக்கள் சுவையறிந்து மாறாத அன்புடனே
தக்க உணவளிக்குந் தாய் மாண்பு — தொக்க
ஒருங்குறைக்க வேண்டில் உலகமே புடாம்
கருங்கடலே மையாகுங் காண்.

27. தம்பொருள் எல்லாமே தம்மக்க ளென்றிருப்பாள்
நும்புகழ் கேட்கவே நோன்பிருப்பாள் செம்பொருளாய்
நும்முன் இருப்பாள் நுவலருஞ்சீர் அத்தகையாள்
அம்மையே ஆவாள் அறி

28. ஈன்றாளே தெய்வமாம் என்று தளர்பொழுது
ஊன்றுகோல் போன்றே உறுதுணையாய் — ஈன்றாட்குத்
தொண்டு புரிவோர் தொடர்ந்து வருதலால்
உண்டேகாண் இந்த உலகு.

29. சிறுசுமை தாங்கச் சிணுங்குவான் ஆனால்
உறுசுமையாய் உள்ளிருந்த உன்னைப் — பெறுமளவும்
இன்பஞ் சுமக்கும் இளந்தென்றல் போற்சுமந்த
அன்புருவே அன்னை அறி.

30. எண்ணரிய நற்குணங்க ளேற்றிலங்குஞ் சீர் சான்ற
பெண்ணிற் சிறந்த பிறவியிலை — பெண்ணிற்குள்
தாய்மையைப் பெற்றாள் தனிச்சிறப்பு எய்துவளே
தாய்மைக்கு நேருண்டோ தான்.

31. நிறைமதியே யாடிட நீ வாராய் என்பாள்
குறையில் மதியாங் குழந்தை — கறையுடைய
விண்மதியே நின்னை விரும்புவதுங் காணென்பாள்
கண்ணன்றோ மாநிலமே காண்.

32. தாய் வயிற்றில் மிக்கமலம் தான்தேங்கின் மந்தனாம்
தாய் வயிற்றில் நீர்மிகில் தான் மூங்கை — மேய
இருகழிவும் ஒக்கில் இரண்டு கண் இன்றாம்
கருவுற்ற காலத்தே காண்.

33. தந்தை முதலாத் தமரெலாஞ் சேய்க்குணர்த்திச்
செந்தமிழை இன்பஞ்சேர் செம்மொழியைத் — தந்த நற்
றாயின் மனங்குளிரத் தக்கவெலாஞ் செய்வதுதான்
சேயின் கடனாமே செய்.

உரை

செய்யுள் — 20

வையத்தீர் — உலகில் வாழ் மக்களே, தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் — தன் மகனைக் கல்வி கேள்வி களால் நிறைந்தான் என்று, நற்குணங்கள் நிறைந்த அறிவுடை யோர் சொல்லக் கேட்டதாய், ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தான் பெற்ற பொழுது உற்ற மகிழ்ச்சியினும் மிக மகிழும், என்ற சான்றோராம் வள்ளுவர் வாய்மொழியை—எனக் கூறியசான்றோரான வள்ளுவரின் மெய் மொழியில் பொதிந்துள்ள உயர் பொருளை, நன்கு உணர்ந்து தாய்மை உயர்வு உள்ளுவீர்—தெள்ளத்தெளிய உணர்ந்து, தாய்மையின் மேன்மையை ஆழ்ந்து சிந்திப்பீர்களாக.

வையம் — உலகம்; "வையகம்" எனவும் வரும் வை + அகம் = வையகம். உயிர்ப் பொருள்களின் நலன் கருதி, இன்றியமை யாத எல்லாப் பொருள்களும் இறைவன் திருவருளால் அமைக்கப் பட்ட இடமாதலின் "வையகம்" என வந்தது. உள்ளுதல்— ஆழ்ந்து சிந்தித்தல்.

ஈன்ற ஞான்று கண்ணால் கண்ட பொதுவுவகையும், பின் சான்றோன் எனக் காதால் கேட்ட சிறப்புவகையும், தாயுள்ளத் தின் உவகைப் பெருக்கை உணர்த்த வந்தன. உவகைப் பெருக்கில் ஆழ்ந்துள்ள தாய், சேயின் சான்றான்மையைத் தானே எண்ணி மகிழ்வதினும், சான்றோரால் சான்றோன் எனக் கேட்டல் சிறப்புடையதாதலின் கேட்ட தாய் எனக் கூறினார்.

உவப்பதன்கண் குற்றமும் தோன்றா — என்பர் பிறரும்

செய்யுள் — 21

தன்நலம் பாராது — தன்னுடைய நன்மைகளில் நாட்டங் கொள்ளாது, தன் சேய் நலம் தேடும் — தன் குழந்தைக்கேற் புடையதாம் நன்மைகள் யாவை என நாடும், பொன் அன்ன நல்தாயைப் போற்றியே — பொன்னைப் போன்று பல இன்னல் கட்கு இலக்காகித் தாய்த் தன்மை பெற்ற நற்றாயை, நாடோறும் போற்றி, நன்மலராம் சொல்மலர் தூவி — என்றும் வாடாத மலராகும் இன் சொல்லாகிய மலரைத் தூவி, அவள் சொல் நிற்பார். இல்லத்து — அத்தாயின் சொல்வழி நின்று வாழ்வார் மனையில், நல் மலராள் நயந்து வாழ்வாள்—செந்தாமரை மலர்

வாழும் திருமகள் மன மகிழ்ந்து என்றும் நீங்காது வாழ்ந்திருப்பாள்.

நயந்து — மகிழ்ந்து விரும்பி எனக் கொள்ளினும் அமையும். மலர் ஈண்டுத் தாமரை மலரை உணர்த்தும்.

பல இன்னல்களுக்கு இலக்கான பின்னரே, தாய்மையாம் தனிச்சிறப்பு எய்தும் தாய்க்கு, சுடச்சுடரும் பொன் உவமையாகக் கூறப்பட்டது.

செய்யுள் — 22

நானிலத்தீர் — நான்கு வகை இயற்கைத் தோற்றமுடைய இந்நிலவுலகத்தில் வாழ்கின்ற மக்களே, பெற்ற பொழுது பிறர் அறியாது உள் உவக்கும் — தாங்கொணாத் துன்பத்தின் இறுதியில், சேய் ஈன்ற ஞான்று அவ்வறையில் தன்னைச் சூழ்ந்திருந்த பிறர் அறியாவண்ணம், தன் உள்ளத்துள்ளே உவகை கொள்ளும், நல்தாய் உளங்குளிர — நற்றாயின் திருவுள்ளம் நிறைவு எய்த, மற்றும் ஓர் பேருவகை ஊட்டும் பெரியோராய் — மேலும், ஓர் பேருவகையளிக்கும் சான்றோராய்ச் செயலாற்றி, யாய் போற்றி சீருலவ சிறந்து வாழ்வீர் — தாயைப் போற்றி, எண் வகைச் செல்வமும் தன் வாழ்வில் பொருந்தியிருக்கச் சிறப்பொடு வாழ்வீர்களாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நானிலமாம்.

உள்ளங் குளிர்தலாவது தன் குடிப்புகழை உயர்த்தும் சான்றோன் எனச்சான்றோர் பலரால் கூறக்கேட்டுப் பேருவகை எய்தல்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்" —

என்பது பொய்யாமொழி.

செய்யுள் — 23

இன்சொல் நிலையமாம் ஈன்றாள் — இனிய சொற்களின் இருப்பிடமான பெற்ற தாய், சில போழ்து வன்சொல் வலிந்து வழங்குவதும் வன்சொலோ — நீ சில பிழைகள் செய்யுங் காலத்து வற்புறுத்திக் கடிந்துரை சொல்வதும் கடிந்துரை ஆகுமோ! ஆகா, அல்லும் பகலும் — உறங்க வேண்டிய இராக்காலத்திலும், பற்பல செயல்களாற்ற வேண்டிய பகற் பொழுதிலும், அகலாது உனை வளர்த்தாள் — உன்னை விட்டு நீங்காது காத்தவளாகிய அன்னையின், அச்சொல் சொல் அமுதம் அன்றோ — அக்கடுஞ் சொற்கள் நின் வாழ்வை உயிர் வாழ்வாக ஆக்கும் சொல்லமுதமல்லவா.

நிலையம் — இருப்பிடம்

வலிந்து வழங்கலாவது; சேய்க்கு அச்சமூட்டி, ஒழுக்கங் கற்பிக்க வேண்டி, அன்புள்ளம் வலிந்து கடுஞ்சொல் கூறலாம்.

செய்யுள் — 24

உண்ண உணராது உறுபசியால் ஓலம் இட்டு — பாலுண்ணும் முறையை அறியாது, வருந்துகின்ற பசியால் வாய்விட்டு அலறி, எண்ணச் சுழலில் இருந்து ஏங்கும் — பல எண்ணங்களாகிய சிக்கலுக்கு இலக்காகிப் பேசுந்திறம் வாய்க்கப் பெறாது, வாடும் எண்ணம் உணர்த்த அறியாது — உருளும் — எண்ணியவற்றைத் தாய்க்கு அறிவிக்கத் தெரியாது உருண்டு கிடக்கும், குழவிக் குணத்தை உணர்பவள் ஆர் கூறு — பச்சிளங் குழந்தையின் உட்கிடக்கையை உணர்ந்து பாலூட்டுபவள் யார் எனக் கூறுவாயாக

சுழல் — சிக்கல்

"பால் நினைந்தூட்டும் தாயினும்" — என்பர் மணிவாசகர்.

செய்யுள் — 25

பெற்றநல் தெய்வங்காண் — பெற்றெடுத்த மேலான தெய்வம் தாயே என அறிக, பேசும் உயர்தெய்வம் காண் — மக்கள் முன்னிற்று பேசுகின்ற சிறந்த தெய்வம் தாய் என அறிக, நல் தாய் காண் — நின்னை ஈன்றவளே நற்றாய் என அறிக, மேன்மை சால் நல்லறங்கள் முற்றும் திரண்ட வடிவங்காண் சிறப்பு சான்ற நற்செயல்கள் முழுவதும் ஒருங்கு சேர்ந்து வந்த உருவே தாய் என அறிக. தீது அறியா அன்னைக்கு இரண்டகம் செய்யாது இரு — நன்மை செய்வது அன்றி பிற அறியா அன்னைக்குத் தீமை செய்யாது இருப்பாயாக.

இரண்டகம் — நன்றியில் செய்கை

இரண்டு + அகம் — இரண்டகம், இருமனம்.

செய்யுள் — 26

மக்கள் சுவை அறிந்து — தான் பெற்ற மக்கள் விரும்பி யுண்ணும் சுவை வேறுபாடு உணர்ந்து, மாறாத அன்புடனே — என்றும் நீங்காத அன்புடன், தக்க உணவு அளிக்கும் தாய் மாண்பு — உடல்நிலைக்கேற்ற உணவு வழங்கும் தாயின் சிறப்பு, தொக்கு ஒருங்கு உரைக்க வேண்டின் — தொகுத்து முழுவதும் கூற விரும்பின், உலகமே ஏடாம் — இப்பரந்த உலகமே எழுதுதற்கு ஏடாகவும், கருங்கடலே மையாகும் காண் — கருங்கடல் நீரை மையாகவும், தேவைப்படும் என்பதை உணர்வாயாக.

"தாயோடு அறுசுவைபோம்" — என்பர் பிறரும்

செய்யுள் — 27

தம் பொருள் எல்லாமே -- தம் வாழ்க்கைக்கு இன்றியமையாத எல்லாப் பொருள்களும் தம் மக்கள் என்று இருப்பாள் — தாம் பெற்ற மக்களே என்றெண்ணி மகிழ்ந்திருப்பாள், நும் புகழ் கேட்கவே. நோன்பு இருப்பாள் — மக்களாகிய நுங்களைச் சான்றோர்கள் புகழ்ந்து கூறும் புகழ்ச்சியுரை கேட்க வேண்டி, மனவுறுதி கொண்டுப் பரம்பொருளைச் சிந்தித்து வருவாள், செம்பொருளாய் நும்முன் இருப்பாள் — அழிவிலாப் பொருளாய் இறைவனாகவே நுங்கள் கண்காணக் காட்சி தருவாள், நுவல் அரும் சீர் அத்தகையாள் — அறுதியிட்டுச் சொல்வதற்கு அரிய சிறப்பு வாய்ந்த அத்தன்மையுடையவள், அம்மையே என்று அறி — நுங்களைப் பெற்ற அன்னையே என அறிவீர்களாக.

செம்பொருள் — இறைவன் ; தகை — தன்மை ;

அம்மை — அன்னை

செய்யுள் 28

ஈன்றாளே தெய்வம் ஆம் என்று — பெற்ற அன்னையே உற்ற தெய்வமாகும் என மதித்து, தளர் போழ்து ஊன்றுகோல் போன்று உறுதுணையாய் — அவள் உடல் நிலைதளரும் முதுமைப் பருவத்து, ஓர் ஊன்றுகோல் போன்று மிகப்பெரிய துணையாகி, ஈன்றாட்குத் தொண்டு புரிபவர் — அன்னைக்குச் செய்யவேண்டிய பணிவிடை புரிந்து வருவார், தொடர்ந்து வருதலால் — உலகு தோன்றிய நாள் தொட்டு இடையீடின்றி வாழ்ந்து வருவதலாலே தான், இந்த உலகு உண்டே காண் — இந்த நிலவுலகம் இன்னும் அழியாது நிலவுகிறது.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" — எனத் திருவள்ளுவர் பண்புடையார் மேல்ஏற்றிக் கூறுவர்.

முன்னறி தெய்வமாம் அன்னைக்குத் தொண்டு புரியும் பண்புடையார் வாழ்ந்து வருதலின், அவர் பொருட்டு இந்நிலவுலகம் நிலவுகிறது என உணர்க.

செய்யுள் — 29

சிறுசுமை தாங்கச் சிணுங்குவாள் — தாய்மை நிலை எய்துவதற்கு முன்பெல்லாம் மிகச்சிறிய சுமையைக் கூடச் சுமந்து செல்ல முக்காலமுழுவாள், ஆனால் உறு சுமையாய் உள்ளிருந்த உன்னைப் பெறும் அளவும் — ஆனால் பின் கருவுற்றக்கால் பெரும் பாரமாய் அவள் வயிற்றகத்தே முந்நூறு நாட்கள் தங்கி

இருந்த நின்னைப் பெற்றெடுக்கும் வரை, இன்பம் சுமக்கும் இளந்தென்றல் போல் — உலகமக்கட்கு நலம் தரும் இன்பத்தை சுமந்து வரும் இளவேனிற்காலத் தென்றலைப் போல, சுமந்த அன்பு உருவே அன்னை அறி — களிப்பொடு நின்னை சுமந்திருந்த அன்பின் வடிவமே அன்னையாவாள் என அறிவாயாக, சிணுங்குதல் — முக்காலமுதல் எவரும் எளிதில் இறக்கமுடியாச்சுமையாதலின் உறுசுமை எனப்பட்டது. நாட்டிற்கு நலம் பயக்கும் நன் மக்களைத் தாங்கி இருப்பவள் தாயாதலின், தென்றல் உவமையாகக் கூறப்பட்டது.

செய்யுள் — 30

எண்ணரிய — மனத்தால் மதிப்பிடுவதற்கும், இலக்கமிட்டு எண்ணிப் பார்ப்பதற்கும் அருமையான, 'நல்குணங்கள் ஏற்று இலங்கும் — நல்ல குணங்கள் பல பூண்டு விளங்குகின்ற, சீர் சான்ற பெண்ணில் சிறந்த பிறவி இலை — சிறப்பமைந்த பெண் பிறவியைக் காட்டிலும், சிறப்புடைய வேறு பிறவி இல்லை. பெண்ணிற்குள் தாய்மையைப் பெற்றாள் — அச்சிறப்பு வாய்ந்த பெண்களுள், தாய்மைப் பேறு பெற்றவள். தனிச்சிறப்பு எய்துவளே — மேலும் ஓர் தனிச்சிறப்பினையும் பெறுவாள், தாய்மைக்கு நேர் உண்டோ தான் — (ஆதலின்) தாய்மைப் பண்பிற்கு ஒப்பாகக்கூற இந்நிலவுலகில் யாதும் இல்லையாம்.

அடக்கம், அன்பு, அழகு, பொறுமை, இரக்கம், பரநலம், தொண்டு, தியாகம் முதலியன அமைந்த ஒன்றே பெண்மை யாதலின், "பெண்ணிற் சிறந்த பிறவியலை" — எனக் கூறப்பட்டது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" — என்பது திருவள்ளுவர் வாக்கு. பெண் பிறவியின் விழுமிய நோக்கம், தாயாகித் தொண்டு புரிதலாதலின் தாய்மை மேலும் ஓர் தனிச்சிறப்பளிக்கும் என உணர்க. எனவே, தாய்மைக்கு ஒப்பில்லை என்றறிக.

செய்யுள் — 31

மாநிலமே — பெரிய நிலவுலகில் வாழும் மக்களே, நிறை மதியே ஆடட நீ வாராய் என்பாள் — பதினாறு கலைகளும் நிறைந்த முழுநிலவே, நீ என் குழந்தையுடன் விளையாட வருவாயாக எனக் களிப்புடன் அழைப்பவளும், கறையுடைய விண்மதியே — களங்கமுடைய வானில் உலவும் நிலவே, குறையில் மதியாம் குழந்தை நின்னை விரும்புவதும் காண் என்பாள் — களங்கமும் இல்லாத திங்களாகிய தன் குழந்தை, தேய்வும், விளையாடுவதற்கு ஏற்ற தோழனாக நின்னை விரும்பி அழைப்பதையும் அறிவாயாக எனத் தன்னையும் மறந்த நிலையில் உரையாடுவளுமாகிய தாய், கண் அன்றோ காண் — நுங்கட்குக் கண் அல்லவா? உணர்வீர்களாக.

127045 600 008

ஐங்குரவருள் மிகச் சிறந்த அன்னைக்கு, ஐம்பொறிகளுள் மிகச் சிறந்த கண் உருவமாகக் கூறப்பட்டது.

செய்யுள் — 32

கருவு உற்ற காலத்தே தாய் வயிற்றில் மிக்க மலம் தான் தேங்கின் — சூல்கொண்டிருக்குங்கால் தாய் வயிற்றில் பெருங் குடலில் அளவில் கழிவுப் பொருளாம் மலம் தேக்கம் பெருமானால், மந்தன் ஆம் பின், அச்சேய். மந்த அறிவுடையவனாகப் பிறக்கும், தாய் வயிற்றில் நீர் மிகில் தான் மூங்கை - தாய் வயிற்றில் உள்ள சிறுநீர்ப்பையில் சிறுநீர் தேக்கம் பெறுமானால், பின் பிறக்கும் சேய் ஊமையாகப் பிறக்கும், மேய இரு கழிவும் ஒக்கில் இரண்டு கண் இன்று ஆம் கண் உடலில் இயல்பாகப் பொருந்தியுள்ள மலம் சிறுநீர் இரண்டும் ஒருங்கே தேக்கம் பெறுமானால், பிறவியிலேயே இருகண்களும் அற்ற குருடாகவும் பிறக்கும் என அறிக.

மூங்கை — ஊமை

"மாதா உதரத்தில் மலமிகில் மந்தனாம்
மாதா உதரத்தில் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரத்தில் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே' — என்பர் திருமூலர்.

செய்யுள் — 33

தந்தை முதல் ஆ தமர் எல்லாம் சேய்க்கு உணர்த்தி — தந்தை முதலாக உள்ள சுற்றத்தார்களைச் சேய்க்கு முதலில் அறிமுகஞ்செய்து, செந்தமிழை — சங்கம் அமைத்து மூவேந்தர்களால் செப்பம் செய்யப்பட்ட தமிழை, இன்பம்சேர் செம்மொழியை — இம்மைக்கும், மறுமைக்கும் இன்பம்தரும் சீரிய கருத்துக்கள் செறிந்த வளஞ்சான்ற தாய் மொழியாம் தமிழ் மொழியை, தந்த நல்தாயின் மனம் குளிர — முதலில் ஊட்டிய பெற்ற தாயின் மனம் நிறைவு எய்துமாறு, தக்க எலாம் செய்வது தான் — அறவழி நின்று செய்யத்தக்க அனைத்தையும் செய்வது தான், சேயின் கடன் ஆமே செய் — மைந்தர் கடமையாகும்; அவ்வாறு புரிந்து பலன் எய்துங்கள்.

தமர் — உறவினர் — சுற்றத்தினர்.

மூவேந்தர் — சேர, சோழ, பாண்டியர். சங்கம் அமைத்தவர் பாண்டியரானவர்.

"மன்னிய மூவேந்தர் தம் மடி வளர்த்த மகளே" — என்பர் கரந்தைக் கவியரசர் திரு R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.

(தொடரும்)

JL
031 NS

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75
பிற வெளியீடுகள்		
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]		
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.